ரிஜிஸ்டர் நெ. M. 2992. தனிப்பிரதி விலை ஒரு அ

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

மாலை 1 | ஈரோடு, ஸ்ரீ பிரஜோத்பத்தி கார்த்திகை மீ 25 உ (10—12—1933) | மலர் 3

வெளியீடு 1.

பெண் ஏன் அடிமையானாள்?

...ர்களால் கற்பின் நிலைமையையும், காதலின் புரட்டையும், விபசாரத்தின்
...அவசியத்தையும், விவாகத்தின் உரிமையையும், கர்ப்பத்
...மையையும் தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழு...

பிரதி ஒன்றுக்கு விலை அணா ...
சந்தாதாரர்களுக்கு ... ... 0—3—0

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"

பெரிய புத்தகம். விலை ரூ 2. (தபால் சார்ஜ் வேறு.)

The Cr...
By Dr. Paranjpye ...
Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu. As. 0—8—0

"கடவுளும், பிரபஞ்சமும்"

கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதை சவிஸ்தாரமாக உதாரணங்களுடன் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். அதிக பக்கங்கள், குறைந்த விலை.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

Best copy available.

இதுதானே தேவை?

போகப் பிரியர்களுக்கு

தாதுபுஷ்டியை அளிக்கக்கூடிய

மன்மதக் குளிகை.

இணைபற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று ...ண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கும் ஒப்பு ...ர்வற்றது. மாதர்கள் மனதைத்திருப்தி பண்ணும் மாண்பு ...ய்ந்ததென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்?

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக் குறைவு, வீரியக் குறைவு, நரம்புத்தளர்ச்சி, கோசத் துவளல், இளைப்பு, தாகம் முதலிய வைகளை நீக்கி வீரியவிருத்தி, போக சக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைக் கொடுக்கும்.

60-குளிகை ரூ. 5. 20-குளிகை ரூ. 2. வி. பி. வேறு.

குருதாம்பர பஸ்பம்.

திமிர், குஷ்டம், மதமதப்பு, பவுத்திரம், தடிப்பு, ...ரணம், குன்மம் முதலிய சகல வியாதியும் தீரும்.

25-நாள் பஸ்பம் ரூ. 12—8—0.

...ன்னியநாட்டார் முன்பணம் அ...

அமுத சுரபி.

சிறந்த தாதுவிருத்தி இலேகியம்

உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக்காரணங்களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கசிவு, வெட்டைச்சூடு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட்பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3— 8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழி கேட்லாக் இனாம்.

...—8—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் வி... அணா. 0—6—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை ...லை ரூ. 1—0—0
...அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல்... திரட்டு.
விலை அ... அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.
விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீ...ஷ்)
விலை அ... அணா 0—2—0

குடி அரசு புத்தகாலயம், ...ஈரோடு.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை கொண்ட மருந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தெக்ஷணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா)

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம...

முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவய...

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிட்...ட்டு ...தாமூர் சா. ரா. கண்ணம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

25, 26-11-33 தேதிகளில் ஈரோட்டில் நடைபெற்ற கோவை ஜில்லா பெண்கள் மகாநாட்டுத் தலைவர் தோழர் ஸி. டி. நாயகம்சிதம்பரம் அம்மாள் அவர்களின் தலைமை உரை வருமாறு:—

கோவை ஜில்லா
பெண்கள் மகாநாட்டுத் தலைவர் தோழர் C. D. N. சிதம்பரம் அம்மாள் அவர்கள் தலைமை உரை.

இங்கு கூடியிருக்கும் எல்லோருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம். ஒரு கூட்டத்தின் முன் பேசத்தொடங்கும் பொழுது பேசுபவர் அவை அடக்கமென்று முன்னுரையாகச் சொல்வதுண்டு. நான் இப்பொழுது வழக்கத்திற்காக அவை அடக்கம் சொல்ல எண்ணவில்லை. மாமூலுக்காக ஒரு காரியத்தைச் செய்வதென்பது சுயமரியாதைக்கொள்கைக்கு முரண்பட் ... ள் என்னைப்பற்றி அதி ... ஏமாற்றமடைந்துபோ ... வே முன் எச்சரிக்கை ... ல்லிக்கொள்கிறேன். நான் ... ன்றுவது, அல்லது அதி ... உங்களுக்குச் சொல்லத் ... ன்றுவது எண்ணி நான் ... வில்லை. பின் என்னவெ ..., உங்கள் எல்லோரையும் ஒருங் ... பார்த்து உங்களுடன் அளவளாவியிருக்க இதுவே நல்ல சந்தர்ப்பமென்றும், நானே உங்களிடமிருந்து அநேக சங்கதிகளைக் கற்றுக்கொள்ள இதுவே நல்ல தருணமென்றும் எண்ணியதுந்தான். இப்பேர்ப்பட்ட மகாநாட்டில் தலைமையாயிருந்து எல்லாருடைய கவனத்தையும் இழுக்கக்கூடிய விதமாய் நாவன்மையோ ...ம், இனிமையோடும், உற்சாகத்தை ...ம், மகிழ்ச்சியையும், உணர்ச் ... யும், எழுப்பக்கூடிய ஆவேசத் ... னும் பேசத்திறனில்லை என்றாலும் நான் சொல்வதிலும் எதாவது உங் ... அறிவிற்கும் சரி என்று படக் ... யது இருக்குமானதால் பொறு ... யோடு கவனிக்குமாறு கேட்டுக் ... ள்ளுகிறேன்.

சுயமரியாதை இயக்கத்திற்கும், ... ன் ஸ்தாபகருக்கும் இவ்வூரே ... ப்பு வளர்ப்பிடமாதலால் ... வ்வூராராகிய உங்களுக்கே இவ்வி ... கத்தைப்பற்றி நன்கு ... ரியுமென்று நம்புகிறேன். ... ன் சுயமரியாதை இயக் ... கொள்கைகளைப்பற்றிச் சொல்வ ... தன்றால் கொல்லன் தெருவில் ... சி விற்கப்போனது போல்தான் ... ருக்கும் என்றாலும் நான் சொல்வ ... தயும் காது கொடுத்து கேட்டு, ... கட்டதோடு நின்று விடாமல் நாளை ... யா மறுநாளோ அல்லது சாவகா ... பட்ட வேளையிலோ மறுபடியும் ... ந்தித்து, பிறரோடும் கலந்து யோ ... து, பிறகு தங்கள் தங்கள் புத்தி ... எது சரி என்று படுகிறதோ ... ன்படி நடந்து கொள்ளவேண்டுமென்பதேஎனது கோரிக்கை. இது ... வதான் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான கொள்கையுமாகும். இதுவேதான் நாம் முன்னேற்றமடைவதற்கு வழியுமாகும். இதற்குத்தான் பகுத்தறிவு என்று பெயர். இவ்வறிவை நாம் உபயோகப்படுத்திக் கொண்டால் தான் சுயமரியாதை இயக்கஞ் சொல்லுகிற கொள்கைகளையும், அபிப்பிராயங்களையும், அறிந்து உணர்ந்து கொள்ள முடியும்.

சுயமரியாதை இயக்கத்தை மக்களிடையே பரப்பவேண்டுமென்று எண்ணுகிற முக்கிய கொள்கைகளைச் சுருக்கமாய்ச் சொல்லிவிடுவது நலமாயிருக்குமென்று கருதுகிறேன். முதலாவது ஜாதியைப் பற்றி எடுத்துக் கொள்வோம். நம்மில் பல ஜாதிகளிருப்பது எல்லோருக்கும் தெரியும். முதலில் ஜாதிப் பிரிவுகள் எப்படி வந்ததென்றால் அவரவர்கள் செய்த தொழிலால் என்று தெரிகிறது. பிற்பித்தான் ஆதிக்கமுள்ளவர்கள் தங்களை மேல் ஜாதியார்களென்றும். மற்றவர்களைத் தாழ்ந்த ஜாதியார்களென்றும், தீண்டப்படாதவர்களென்றும் சொல்லி, இழிவு படுத்தி துன்பப்படுத்தவுஞ் செய்தார்கள். துன்பப்படுத்திக்கொண்டும் இருக்கிறோம். இவ்வியக்கம் ஜாதிப் பிரிவு மக்களாகவே ஏற்படுத்திக் கொண்டதென்றும், கடவுளே அவரவர் செய்த பாவ புண்ணியத்திற்குத் தக்கதாகமேல்ஜாதியிலும்,கீழ் ஜாதியிலும் பிறப்பிக்கிறார் என்று பாமர ஜனங்கள் எண்ணிக்கொண்டிருப்பது தவறு என்பதையும், அம்மக்களுக்கு எடுத்துணர்த்திக் கொண்டு வருகிறது. அதன் பயனையும் நாம் இப்பொழுது அனுபவத்தில் பார்க்கிறோம். உதாரணமாக, இரயிலில் பிரயாணம் செய்யும்பொழுது நான் கவனித்ததைச் சொல்லுகிறேன். தீண்டாதார் என்று சொல்லப்படுகிறவர்களைத்தங்களை மேல் ஜாதி என்று நினைத்துக்கொள்ளுகிறவர்கள், 'ஒத்தி இரு' அல்லது 'கீழே இரு' என்று சொன்னால், 'நானும் காசு கொடுத்துத்தான் துண்டு வாங்கி இருக்கிறேன்; நீங்கள் மட்டும் என்ன உயர்த்தி' என்று சொல்லிப் பக்கத்திலேயே இருந்து கொள்ளுகிறார்கள்.

இவ்வியக்கம் சமயம், மதம் என்பது, மனிதர்களின் அறிவை மழுக்கி முட்டாள்களாகச் செய்து அவர்களின் முன்னேற்றத்தைத் தடை செய்து கொண்டு இருக்கின்றது என்று போதிய அத்தாட்சியுடன் காண்பித்துக் கொண்டிருக்கிறது. வைதீகர்களுடன் மிகுதியாய் போராடிக்கொண்டிருக்கிறது. மதங்களும், மதஸ்தர்களும் மோட்சமென்றும், நரகமென்றும், பாவமென்றும், புண்ணியமென்றும், முற்பிறப்பு என்றும் மறு பிறப்பு என்றும் பல ஜன்மங்களுண்டென்றும், ஏசுக்கிறிஸ்துமூலம் தான் பாவமன்னிப்பும், மோட்சமும் கிடைக்குமென்றும் இறந்தபின் ஒருமுறை உயிர்த்தெழ வேண்டுமென்றும்,-இன்னும் எவ்வளவோசொல்லிக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் ஆஸ்திகர்களுக்கும், நாஸ்திகர்களுக்கும் விட்டுவிட்டு, நாம் நமது வாழ்க்கையில் மதத்தை நம்பித் துன்பமும் தரித்திரமும் அடையாமல் பார்த்துக்கொண்டால் அதுவே நமக்குப் பெரும் பாக்கியமாகுமென்பது எனது துணிபு. பிள்ளைப்பேற்றிற்காக எத்தனையோ குடும்பங்கள், சாமிக்கென்றும், நாகப்பிரதிஷ்டைக் கென்றும், சன்னியாசிக்கென்றும், மடத்திற்கென்றும், பணத்தை வாரி இறைத்துவிட்டு வறுமை அடைந்திருக்கின்றன. பிள்ளையும் வேறு காரணங்களால் பிறந்தாலும் உண்டு, பிறக்காவிட்டாலும் இல்லை. ஒரு செலவும் இல்லாமலே தரும வைத்தியசாலையில் சிறு சிகிச்சை செய்து கொள்வதால் எத்தனையோ பெண்களுக்குக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இதனால் சாமிக்கென்றும், கோவிலுக்கென்றும் செலவழிப்பது வீண என்று விளங்குகிறதல்லவா? இன்னும் பேய் பிடித்திருக்கிறதென்று மந்திரவாதிகளான தந்திரவாதிகளுக்கு அவர்கள் கேட்ட சாமான்களையும், பணத்தையும் கொடுக்கிறோம். பேய் பிடித்திருக்கிறதென்று நாம் நினைப்பதெல்லாம் ஒருவிதமான வியாதியைத் தான். அவ் வியாதி வைத்தியத்தால் குணமாவதை நான் நேரில் கண்டிருக்கிறேன். ஆகையால் பேய் பிசாசுகள் என்று நம்பி பணத்தை வீணாக்காமல் இருப்பது நல்லதல்லவா? இன்னும் மாரியம்மன் முதலிய தெய்வங்களாலோ, அல்லது அவற்றின் கோபத்தாலோ தொற்றுவியாதிகளான வைசூரி, வாந்திபேதி முதலிய நோய்கள் வருகின்றனவென்று அத்தெய்வங்களுக்குப் பூசை, கொடை முதலியன கொடுக்கிறார்கள். இப்பிணிகளின் காரணத்தையும், அவைகள் குணமாக்கப்படவேண்டிய விதத்தையும் அறிந்த வைத்தியர்களும், அறிவாளிகளும் நம்மைப் பார்த்து நகைக்கும்படிக்கே நடந்துகொள்கிறோம். இம்மாதிரியாகவே மதத்தோடு ஒட்டிய அனேக சடங்குகளை அவைகள் நமக்கு நன்மை கொடுக்கின்றனவா என்று ஆராயாமல் முன்னோர்கள் செய்தபடிக்கே நாமும் செய்ய வேண்டுமென்று செய்கிறோம். இப்பொழுது பகுத்தறிவு வளரவேண்டிய காலமாதலால் நாம் எந்தக் காரியத்தை யார் செய்யச் சொன்னாலும் நாமும் யோசித்துப் பார்த்து நமது புத்திக்கும் சரியென்று பட்டவற்றை மாத்திரம் செய்வதே நலமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வியக்கம் பெண்களுக்கு பூரணசுதந்திரம் வேண்டுமென்று சொல்லி அதை நாம் அடைவதற்கு அரும்பாடுபட்டு வருகின்றது. இந்த அபிப்பிராயத்தில் நம்மில் ஒருவருக்கும் பேதம் இருக்காதென்று நம்புகிறேன். அதாவது இங்கு இருப்பவர்களில் யாராவது ஒருபெண், எனக்கு சுதந்திரம் வேண்டியதில்லை. நான் ஆண்கள் சொன்னபடியே கேட்டு, அவர்கள் இட்ட வேலையைச் செய்து போட்ட சோற்றை தின்னத்தான் எனக்குப் பிரியம் என்று சொல்வாள் என்று நினைக்கவில்லை. இதற்கு நமது பெரியார்போன்ற ஆண்கள் வேலைசெய்வதால்மட்டும் நாம் சுதந்திரமடைய உரிமை உடையவர்கள் ஆகிவிடமாட்டோம். நாமும் முயற்சிசெய்யவேண்டும். எப்படியென்றால் நாமும் அறிவிலும், அனுபவத்திலும் அவர்களை ஒத்திருக்கும்படி நம்மைப் பயிற்சி செய்துகொள்ளவேண்டும். அவர்களைப் போலவே சில வழிகளிலாவது சம்பாத்தியம்பண்ணத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம், நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களைக் கவனித்தால், ஆணும், பெண்ணும் பாடுபட்டுச் சம்பாதிக்கக் கூடிய வகுப்புகளில், பெண் ஆணுக்கு அடங்கி நடப்பதைக் காணவில்லை. சிலவகுப்புகளில் ஒருபெண் தன் புருஷன் தன்னைத் துன்பப்படுத்துகிறவனாக இருக்கிறான் என்று தெரிந்தபொழுது நான்கு பெரிய மனிதரிடம் சொல்லி, தன் கல்யாணத்தை ரத்து செய்துகொள்கிறாள். தனியே போய் தனக்குவேண்டிய பொருளைச் சம்பாதித்துக்கொள்ள அவளுக்குமுடியும். ஆகையால் நமக்கும் நமக்குவேண்டிய பொருளைத் தேடிக்கொள்ள வழி தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

சுயமரியாதை இயக்கம், சமதர்ம அரசாங்கம் வேண்டுமென்று சொல்லுகிறது. அது என்ன அரசாங்கமென்றால் எல்லா மக்களையும் மேல்கீழ் இல்லாமல் ஒரேமாதிரியான நிலைமையில் வைக்கக்கூடிய அரசாங்கம் அதில், ஏழைகளென்றும், பணக்காரர்களென்றும், தொழிலாளி கீழ் என்றும் முதலாளி மேல் என்றும், அரசன் சர்வஅதிகாரி என்றும், குடிகள் அடங்கி நடக்கவேண்டியவர்கள் என்றும், இல்லாமல் மனிதர்களெல்லோரும் சமம் என்ற முறையில் சட்டங்களும், திட்டங்களும் நடைபெறும். இப்பொழுது ருஷ்யா என்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க,

இராமநாதபுரம் ஜில்லா மூன்றுவது சுயமரியாதை வாலிபர் மகாநாடு, சிவகெங்கை.

திறப்பு விழாவாற்றிய திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்கள் பிரசங்கம்.

2-13-33ந்தேதியில் சிவகங்கையில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா மூன்றுவது சுயமரியாதை வாலிபர் மகாநாட்டுத் திறப்பாளர் திருச்சி தோழர் எஸ். நீலாவதி பிரசங்கம் வருமாறு:—

அன்புமிக்க தோழர்களே!

இராமநாதபுரம் ஜில்லா மூன்றுவது சுயமரியாதை வாலிபர்மகாநாட்டின் திறப்பு விழாவாற்றும்படியான ஓர் தொண்டைஏற்று உங்கள் முன் நிற்கின்றேனென்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமில்லையென்றே நினைக்கின்றேன். இச்சந்தர்ப்பத்தை எனக்களித்த தோழர்களுக்கு வந்தனம் என்ற வார்த்தையைத் தெரிவிக்க விரும்பவில்லை. ஏனெனில் என்னுடைய வந்தனத்திற்காக நீங்களும் உங்களுடைய புகழ்மொழிகளுக்காக நானும் பொது சேவையில் இறங்கவில்லையென்பதை நீங்கள் ஒவ்வொருவரும் நிச்சயமாய் உணர்ந்திருப்பீர்களென்றே நம்புகிறேன். எப்போது நாம் யாவரும் தோழர்களாய்ப்பொது வாழ்வில் ஈடுபட்டோமோ அன்றே நமக்கு வேண்டியது காரியந்தான். வந்தன வாழ்த்து உபசாரங்களை நாம் ஒருக்காலும் ஆதரிக்கக்கூடாது. அந்த முறையில் நாம் தற்போது பல விஷயங்களை செய்து வருகின்றோம். வீண்செலவுகளைக் குறைக்கவேண்டுமென்று கூறிவிட்டு, வேறு விஷயங்களில் வீண்செலவுகளை ஆதரிப்பதென்பது அழகாகாது என்றே தெரிவிக்க விரும்புகிறேன். இவை பூராவும் நமது மாகாண மகாநாட்டில் ஒரு முடிவுக்கு வந்து விடுமென்று நம்புகிறேன்.

தற்கால வாலிபர்கள் நிலை.

தோழர்களே! இனி தற்கால வாலிபர்களைப்பற்றிப் பேச வேண்டுமானால் மட்டுப்படாத சமாச்சாரமாயிருக்கிறது. எப்படியெனில் நமது நாட்டில் மேல்ஜாதி, கீழ்ஜாதி, ஏழை பணக்காரன், தொழிலாளி, முதலாளி என்றபேதங்கள் மலிந்திருப்பதுபோல் வாலிபர்களிலும் பலபிரிவுகள் இருந்து வருகின்றது. அதையெல்லாம் விடுத்து பொதுவாகவே வாலிபர்களைப்பற்றிப் பேசுவோம். தற்கால வாலிபர்களின் நிலை மிக மோசமானதென்பதில் சந்தேகமில்லை. பெண்கள் எப்படி பிள்ளை பெறும் மிஷின்களாகக் கருதப்படுகின்றனரோ அதே போல் தற்கால வாலிபர்கள் சர்வ கலாசாலையின் சாரமற்ற படிப்பிற்கு ஆளாகி மீள்வதே தங்கள் கடமையென உணர்ந்து வருவதாகத்தெரிகிறது. உள்ள பணத்தை கொள்ளைகொடுத்து தன் பெயருக்குப்பின்னால்இரண்டு நான்கு வார்த்தைகளைச்சேர்த்து பட்டங்களைப்பெற்று இறுதியில் ரங்கநாதர் லாட்டரியில் பங்கு கொள்ளும்படியான நிலையில் நமது நாட்டு வாலிபர்கள் ஆய்விட்டார்களென்பதை எவரே மறுக்க முடியும்? இதைப்பல அறிஞர்கள் என்போரும் ஆங்காங்கே எடுத்துக்காட்டி வருகின்றார்களென்றாலும் வேண்டியது செய்ய விரைந்து வருவார் எவருமில்லை. இளமையிலுணர்ச்சிதான் மிக இன்றியமையாதது. ஆனதாலும் அந்த உணர்ச்சியை உண்டாக்குவது, வளரவைப்பது பள்ளிகளானதாலும் பள்ளிப் பாட புத்தகங்கள் முதலிலவை ஒழுங்காக வேண்டியது அவசியம். பள்ளிப்படிப்பு செவ்வையாயில்லாத குற்றத்தாலேயே தற்கால வாலிபர்கள் வாலிப உலகத்தினின்றும் வேறு பிரிக்கப்பட்டு நிற்கின்றார்கள். அறிவு வளர்ச்சிக்கான கல்வியில் மனித சமூக நன்மைக்கான கல்வியில் அக்கரை கொள்ளாமல், பொய்யும் புழுகும் நிறைந்த புராணக்கல்வியில் புரண்டெழுந்தால் வாலிப சமூகம் எவ்விதத்தில் முன்னேற்றத்திற்கு வரும் என்பதை எண்ணிப்பாருங்கள். அவ்விதவாலிபர்களைக்கொண்ட ஒரு நாடு என்ன நன்மையை எய்த முடியுமென்பதும் நன்கு சிந்திக்கத்தக்கது. தற்கால வாலிபர்கள் நிலையும், முன்னேற்றத்தின் தன்மையும் எவ்வளவு வரைக்கும் இருக்கின்றதென்றால், படித்துப்பட்டம் பெறுவது ஒன்று, கொஞ்சம் ஆடம்பரமான முறையில் நடந்துகொள்வது இரண்டு, கல்யாணமென்றால் தனக்கு மனைவியாக வாய்க்கும்பெண் கொஞ்சம் படித்திருக்க வேண்டும். என்று சொல்வது மூன்று, ஆக இதோடுதான் இருக்கின்றது. மற்றபடி உலகத்தைப்பற்றியோ, ஜனசமூகத்தையோ, கிஞ்சிற்றும் கவலை கொள்ளுவதாக இல்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் அஸ்திவாரமாகிய கல்வி ஏற்றதாயில்லாததேயாகும். நமது கல்விக்கழகங்களில் மதக்கல்விதான் கட்டாயமாயிருக்கின்றது. மதக் கல்விதான் கட்டாயமாயிருக்கின்றது. மதக்கல்வியினால், மக்களது சுய அறிவு பறந்தோடி இருட்டறிவு உதயமாகி அதுவே உறுதியாகக் குடிகொண்டு விடுகின்றது. இதனால் மற்ற விஷயங்களெல்லாம் பாழாகின்றன. எந்த விதத்திலும் பள்ளிக்கூடங்களில் மதப்பிரசாரமே முக்கியமாயுள்ளதென்பதைமறுக்க முடியாது. சாதாரணமாக கிறிஸ்துவர்களை எடுத்துக்கொண்டால் ஏதோ மக்களைக் கைதூக்கி விட்டுக் கல்விக்களஞ்சியங்களாகத் திகழச் செய்கின்றோமென, செய்தோமெனப் பறைசாற்றுவதெல்லாம், சுத்த ஹம்பக் என்று தான் கூறுவேன். கோடிக்கணக்கில் பணத்தை செலவிட்டு கோவில்கட்டுவதில் நமது முன்னோர்கள் முன்னணியில் நின்றார்களே தவிர கல்விச்சாலைகளை ஏற்படுத்தி அறிவுக்கண்களைத்திறக்கும் மார்க்கத்தில் ஒரு அடியும் முன்னெடுத்து வைக்கவில்லை. எப்படி வைப்பார்கள்? புல்லினாலும், புது மண்ணினாலும், கல்லினாலும், கோவில்கட்டி வைத்தோர்க்கு கைலாசப் பதவி உண்டென (குறிப்பிட்ட பல வருடங்களுக்கு சீட் ரிசர்வ் ஆகிவிடுமென) புழுகியிருக்கின்றார்களே! புத்தி அதிலன்றேபோகும்! இந்நிலையில் கிறிஸ்துவத் தோழர்கள், பல்லைக்காட்டிப் பப்ரமெண்டைக் கொடுத்து பிள்ளைகளைப்பள்ளியில் சேர்க்க முனைந்து, பாட புத்தகங்களிலேயே பிறமதத்தைப்பழித்து, தம் மதத்திற்கு ஆக்கந்தேடி ஆள்சேர்த்துவிட்டார்கள். அதை நான் என் அனுபவத்தில் நன்கறிந்திருக்கிறேன். அம்முறையில் இன்றும் ஆள் சேர்ந்தே வருகின்றார்கள். தோழர் பராஞ்சிபை அவர்கள் தாமெழுதிய "இந்தியாவின் குறைபாடுகள்" என்னும் நூலில் (The Crux of the Indian Problem) "பாதிரிகளால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் எல்லாம் கிறிஸ்து மத போதனைஎன்பது கட்டாயமாக பாவிக்கப்பட்டு நடத்தப்பட்டே வந்திருக்கிறது. அப்பள்ளிக்கூடங்களில் படிக்கும், இந்து முஸ்லீம், பார்சி முதலிய மதப்பிள்ளைகளுக்கும், கிறிஸ்துவ வேதமாகிய "பைபில்" ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டே வந்திருக்கின்றது என்று கூறியிருப்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது. எனவே வாலிப உலகம் பகுத்தறிவு உலகால் பிரகாசம் அடையவேண்டுமானால் அதற்கடிப்படையாய்வேண்டியகல்விமுறைமாறப்படவேண்டும். மதக்கல்வியும், புராணக்கல்வியும், வாலிபர்களிடையே பரவவொட்டாது தடுக்கமுயற்சி செய்யவேண்டும்.

சமூக நிலையும், வாலிபர் கடமையும்

இனி சமூகத்தைப் பற்றியும், வாலிபர் தம் கடமையைப் பற்றியும் சிறிது கூறுகிறேன். நம் சமூகத்தின் நிலை எவ்விதத்திலும் இரங்கத்தக்கதாகவே இருக்கிறது. ஆதியில் நம் மக்கள் பார்ப்பனீயத்திற்கு அடிமைப்பட்டதன் காரணமாக, படிப்படியாய் யாவற்றிக்கும் அடிமைப்பட்டு முடிவில் இன்று அடிமை சமூகமாக, பகுத்தறிவற்ற சமூகமாக வாழ நேரிட்டு விட்டது. இவ்வாறு அடிமைப்பட்ட நமது சமூகம் மனித சுதந்தரத்தை அடைய வேண்டுமென்ற ஆசை இருக்கிறதா என எனது வாலிபத் தோழர்களைக் கேட்கின்றேன்? இருக்கின்றதென்பது உண்மையானால், அதற்கான செய்வதென்னவென்பதையும் அறிய ஆசைப்படுகிறேன். உலகத்திலுள்ள தேசங்களிளெல்லாம் மிக பிற்போக்காயுள்ள தேசம் நமது இந்தியாவென்பது உறுதியாகி விட்டது. வாலிபத் தோழர்களாகிய நாம் இதைக்கண்டு வாளாவிருப்பது வெட்கத்தை உண்டு பண்ணவில்லையா? என்று நான் கேட்பதற்கு என்னை மன்னிக்க வேண்டும். வாலிபர்களில், சர்வ தேச சரித்திரங்களை வாசிக்கும் பலர் உண்டு என்பதையும் அறியாமலில்லை. அத்தகைய வாலிபர்கள் தம் சமூகத்தின் பிற்போக்கான நிலையைக்கண்டு எப்படி வாளாவிருக்கிறார்களென்று தான் ஆச்சரியப்படுகின்றேன். அழுகி நாற்றமெடுக்கும் நிலையிலுள்ள சமூகத்தைக்கண்டு வாலிபருள்ளம் கொதித்தெழ வேண்டாமா? என்று தான் கேட்கின்றேன். எண்ணற்ற பிரிவுகளால், எழுதற்கியலா இன்னல்கள் சூழ்ந்துகொண்டு சமூகத்தை நாசப்படுத்தி வருவது வாலிபர்களுக்கே புலனாகவில்லையானால், வயோதிகர்களுக்குப் புலனாவதெங்ஙனம்? முன்னேற்றமும், விடுதலையும் பெற்ற இதர தேச சரித்திரங்களை வாசித்தால், அந்தந்த தேச, வாலிபர்கள் உழைப்பாலேயே, அத் தேசங்கள் விரைவில் வெற்றி பெற்றனவென்பது தெற்றென விளங்கும். சமூகத்தைப் பற்றியுள்ள நோய்களைத்தீர்க்கவல்லவர்கள், பகுத்தறிவும், அஞ்சா நெஞ்சமும் படைத்த வாலிபர்களாகிய வைத்தியர்களேயாகும். ஒவ்வொரு வாலிபரும் நம் சமூகத்தைப் பற்றியுள்ள, பிணிகளைப் பற்றி ஆராய்ந்து அதற்கேற்ற மருந்தை உபயோகிப்பதைத் தங்கள் தினசரி கடமைகளில் ஒன்றாகக் கருதித் தொண்டாற்றுவார்களானால் விரைவில் நம் சமூகத்திடையே வேண்டிய மாறுதலைக் காணலாம். வாலிபர்கள் வெறும் பெயரளவில் வாலிபர்களாயில்லாமல், உண்மையில் வீர வாலிபர்களாய்த் திகழ வேண்டும். சுயமரியாதை இயக்கம் இன்று பல வித எதிர்ப்புகளும், பல வித தொல்லைகளுக்கும் இடையில் இவ்வளவு தூரம் செழித்து நிற்பதன் காரணம், பூராவும் வாலிபர்களால், மாறுதலை வரவேற்கும் வாலிபப் பெண்களால் நிறைந்திருப்பதேயாகும். பொருளாதார சமத்துவத்தைப்பற்றி நாம் பேச ஆரம்பித்த உடனே, கொஞ்சம் பெரிய வயதுக்காரர்களென்று,

தொடர்ச்சி 17-ம பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா

இராமநாதபுரம் ஜில்லா மூன்றுவது சுயமரியாதை மகாநாடு.

(சிவகங்கை.)

திறப்புவிழாவாற்றிய தோழர் S. குஞ்சிதம் B. A. L. T. அவர்கள் திறப்புவிழா பிரசங்கம்.

2-12-33ந் தேதியில் சிவகங்கையில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா மூன்றுவது சுயமரியாதை மகாநாட்டைத் திறப்பாளர் தோழர் எஸ். குஞ்சிதம் அம்மாள் பி. ஏ. எல். டி. அவர்களின் திறப்புவிழா பிரசங்கம் வருமாறு:—

தோழர்களே!

இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைக்கும் கடமையை எனக்குக் கொடுத்தமைக்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் நமது இயக்கத்திற்கு உற்ற துணையாக இருந்த வீரராகிய ராமச்சந்திரன் அவர்கள் நம்மோடு இருப்பதற்கு முடியாமல் நம்மை விட்டுப் பிரிந்ததை நினைத்தால் வருத்தமாகவே இருக்கிறது. ஆனாலும் அவர் விதைத்த விதையின் பலனை நாம் இப்போது அறுவடை செய்து சந்தோஷத்துடன் அநுபவிக்கிறோம். இது உலக இயற்கையாகப் போய்விட்டது

குப்பையில் பெருந்தீ!

குப்பையும், கூளமும், செத்தையும், சருகும் எவ்வளவுக் கெவ்வளவு நிறைந்திருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அதில் நெருப்பு சீக்கிரம் பிடிக்கும் என்பது நமது அநுபவம். பிடிப்பது மாத்திரமல்ல; சீக்கிரம் அக் குப்பைகள் சாம்பலாவதும் கண்கூடு. சமதர்ம இயக்கமாகிய நமது சுயமரியாதை இயக்கமானது ஆரம்பித்த இவ்வளவு சீக்கிரத்தில், அதாவது இந்த 7-8 வருஷங்களுக்குள் தமிழ் நாட்டில் இவ்வளவு பரபரப்பையும், உணர்ச்சியையும் கிளப்பிவிட்டதைப் பார்க்க சிலர் ஆச்சரியப்படலாம் ஆனால் இந்த வேலையில் நமது இயக்கத் தோழர்களுக்கே முழுப் பெருமையும் சேர முடியாது நெருப்பு வைப்பதற்கு வேண்டிய அறிவும் துணிச்சலும் ஏற்பட்டவகையில் நாம் பெருமையடைய வேண்டியவர்கள் தான். ஆனால், குப்பைக் குவியலாக்கி நன்றாய்க் காய்ந்து பக்குவமாயிருந்ததே முக்கிய காரணம் என்பது எனது அபிப்பிராயம். மக்களினுடைய கஷ்டங்களெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாய்த் திரண்டு திரண்டு ஒரு அளவுக்குப் போய்விடும். அந்த நிலையில் ஒரு சிறு கஷ்டம் அதிகமாய்ச் சேர்ந்தாலும் போதும், உடனே பெட்ரோலில் நெருப்பு வைத்தது மாதிரி, சொத்துக்கு மிஞ்சின கடனையுடையவன் என்ன செய்கிறான்? இன்ஸால் வெண்ட் (Insolvent) கொடுத்து விடுகிறான். பிரஞ்சுப் புரட்சி, இட்டாலி புரட்சி, ருஷ்யப் புரட்சி ஆகிய பல மாறுதல்களும் மேற்கண்ட தத்துவத்தினால் ஏற்பட்டவைகளே ஒழிய வேறில்லை.

காசநோய் மனிதன்

காசநோயையுடைய ஒருவன் சூட்டும், கோட்டும், ஹாட்டும் போட்டுக்கொண்டு எவ்வளவு படாடோபமாய்த் திரிந்தாலும் அந்த நோயானது எப்படி உள்ளேயே அரித்துக் கொண்டிருந்து முடிவில் அவனைக் கொன்று விடுகிறதோ, அதே மாதிரி தான் இன்று மதங்களின் நிலைமையும் ஏற்பட்டுவிட்டது, "ஹிந்து மதம்" உலகத்திலேயே சிரேஷ்டமானது! அரிய பெரிய தத்துவங்களைக் கொண்டது என்று விவேகானந்தர் முதல், மாளவியா, விஜயராகவாச்சாரியார், காந்தி வரையில் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியது தான். மலையாளத்தில் 22 லட்சம் தீயர்கள் ஹிந்து மதத்தை விட்டு விலகி, மதம் அற்ற நல்ல மனிதர்களாக ஆகி விட்டார்கள். தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் காலில் பட்டிருக்கும் சாணியைத் துடைக்கக் கூட கோவில் வாயிற்படி பக்கம் போவதில்லையென்ற முடிவோடிருக்கிறார்கள். மற்ற மதங்களின் நிலைமையோ சொல்லவேண்டியதில்லை. குத்துயிரும், கொலை உயிருமாய் இனிமேல் புதிதாக ஆள் சேர்க்கா விட்டாலும் போகட்டும்; உள்ளதுக்கே மோசம் வராமலிருந்தால் போதும் என்ற நிலைமையில் தான் இருக்கின்றன. ஆனால் ஒரு விஷயம் நிச்சயம் "சுயமரியாதை இயக்கம் என்ன சாதித்து விட்டது?" என்று சிலர் கேட்டுக்கொண்டிருந்த பரிகாசமான கேள்விக்கு தமிழ் நாட்டில் இனிமேல் இடங்கிடையாது. "ஐயா! என்ன செய்து விட்டதென்று கேட்கின்றீர்கள்? எங்களுக்குத் தெரியாது திருச்சி St. Joseph's College செயின் ஜோசப் காலேஜிலும், அக்ரஹாரங்களிலும், புராணப்புஸ்தக வியாபாரிகளிடத்திலும் போய்க் கேளுங்கள்," என்பதே நமது தாழ்மையான பதிலாகும்.

காந்தியும், நாமும்

இன்றைய தினம் நமது இயக்கக் கொள்கைகளை பற்பல பெயர்களால் அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தோழர் காந்தியாரும், இன்னும் சில வைதீகர்களும் மாத்திரம் தெரிந்தும் தெரியாதது போல் கண்மூடி மௌனியாய் நிஷ்டையிலிருக்கிறார்கள். தோழர் காந்தியவர்கள் சம்பந்தப்பட்டவரையில் அவருடைய தமிழ் நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் எல்லாம் வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்து கொள்ளப் போகிறார் என்பதில் சந்தேகமேயில்லை.

தோழர். காந்தியவர்கள், "ஒவ்வொருவரும் கள், சாராயம், அபின், கஞ்சா முதலியவைகளைச் சாப்பிடலாம். ஆனால், ஒருவரை யொருவர் முறைத்துப் பார்க்கக்கூடாது" என்பது மாதிரி, "அவனவன் அவனவனுடைய மதத்தோடு இருக்கலாம். ஆனால், எல்லோரும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும்" என்று போதிக்கிறார். இது தான் சுயராஜ்யத் திட்டங்களில் ஒன்று என்றும் கூறுகிறார் "இது எப்படி ஐயா முடியும்? தயவு செய்து விளக்கிச் சொல்லுங்கள்" என்று கேட்கப் போகிறார்கள் தமிழ் நாட்டு மக்கள். 'சுதேச சமஸ்தானத்து ராஜாக்களும் ஜமீன்தாரர்களும் தங்க கில்ட் கொடுத்த ரோல்ஸ்ராய்ஸ் மோட்டாரில் தான் போவார்கள் ஆனால் ஏழையாகிய நீ தக்களி நூற்றுச் சம்பாதிப்பதே சரி" என்றும் இதுவே சுயராஜ்யத் திட்டங்களில் ஒன்று என்றும் தோழர் காந்தியார் கூறுகிறார். ஆனால், தமிழ் நாட்டு இளைஞர்களோ! "அந்த ராஜாக்களும், ஜமீன்தாரர்களும் கல்உடைத்துச் சம்பாதிகட்டுமே?" என்று கேட்கப் போகிறார்கள்.

"சங்கராச்சாரியார் பல்லக்கில் தான் போவார்; பாதிரியார் பாவமன்னிப்பு உத்தியோகந்தான் செய்வார்! பண்டார சந்நிதி படைகளோடு தானிருப்பார். ஆனால் பாவஞ்செய்த மக்களாகிய நீங்கள் அவர்களுக்கெல்லாம் பணிவிடை செய்வதே கடமை; அதுவே சுயராஜ்யத் திட்டத்திலும் ஒன்று என்று சொல்கிறார் தோழர் காந்தி ஆனால், தமிழ் நாட்டு வாலிபர்களோ "ஏனைய்யா! அவர்களும் எங்களைப்போன்று 10 மாதத்தில் பிறந்தவர்கள் தானே அவர்களும் ரிக்ஷா இழுத்து அதனால் கிடைக்கும் கூலியைப்பெறட்டுமே"? என்று கேட்கப்போகிறார்கள்.

கொடுமைக்கும் அளவுண்டு.

நான் ஆரம்பத்தில் சொன்னது மாதிரி காய்ந்த சருகில் தீப்பற்றி விட்டது. இத்தீயை அணைக்க இனி காந்தியாராலும் முடியாது பூரி சங்கராச்சாரியாலும் முடியாது ஆனால் சிலமக்கள் இந்தப்பெருந்தீயிலும் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். பல மேல்ஜாதிக்காரர்கள் அலட்சியமாய் இருக்கின்றார்கள். இவர்களும் சுருட்டி வாரிக்கொண்டு எழ வேண்டுமென்றால் நான் விரும்புவது ஒரே ஒரு விஷயந்தான். அதாவது இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் தவிக்க வேண்டும். ஆனால் ஏதோ பத்துபேருக்கு மாத்திரம் மாதம் 5000, 8000, 10000 ரூபாயென் சம்பளம் கொடுக்கவேண்டும். வருணாச்சிரம சங்கம் இன்னும் கொஞ்சம் மும்முரமாய் வேலை செய்யவேண்டும். பாவமன்னிப்பு இன்னும் கொஞ்சம் தாராளமாய் நடைபெற வேண்டும். இன்னும் 10 சங்கராச்சாரிகள் ஏற்பட்டு விடவேண்டும். அவர்கள் தீண்டாமையின் அவசியத்தைப்பற்றி பிரசாரம் செய்யவேண்டும். பெண்களை ஆண்கள் இன்னும் அதிகமாகக் கொடுமைப் படுத்தவேண்டும். கஷ்டப்பட்டு 12மணிநேரம் வேலை செய்யும் தொழிலாளிக்கு மிகவும் குறைந்தகூலியைக்கொடுக்க வேண்டும். நமது கிராமத்து மிராசுதார்களெல்லோரும் கருக்காய்நெல்லை இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கலந்து பண்ணையாளுக்குக் கூலி கொடுக்கவேண்டும் இம்மாதிரியான விஷயங்கள் இன்னும் ஒரு 10வருஷத்திற்குத் தொடர்ந்து நடந்தால் போதும், பிறகு நமது இயக்கத்திற்கு வெற்றி ஏற்படுவது நிச்சயம்! நிச்சயம்!!

சோம்பேரி வேதாந்தம்.

"நமது நாடு பொன்விளைந்த நாடு, தேனும் பாலும் திளைத்திருந்த நாடு, ஆனால் அன்னிய ஆட்சியால் வறுமையடைடைந்து விட்டது. சுய ஆட்சி பெற்றதும் செழிப்பற்று விடும்" என்று முழு பாரத்தையும் அன்னிய "ஆட்சியின் தலையில் போட்டு விடுவது சிலருக்கு சர்வசாதாரணமாய்ப் போய்விட்டது. இப்படிச்சொல்லி விடுவதால் ஒரு பெருத்த லாபமிருக்கிறது. அதாவது "தேசபக்தர்" "தியாகி" என்றபெயரை வெகு சீக்கிரம் பெற்று விடலாம். அதுவும் ஏதாவது ஒருதடவை 5-6 மாதங்களுக்கு ஏ. வகுப்பு கைதியாகவாவது இருந்து விட்டு வெளிவந்து பிறகு சட்டசபைக்குள் சென்று பாரதமாதாவுக்குப் பணிசெய்யப்போகிறேன் என்று சொல்லி விட்டால், நமது தேசத்தில் வெகு சாதாரணமாய்ப் பெரிய மனிதனாக விடலாம். அன்னிய ஆட்சியென்று சொல்லிவிட்டு பிறகு என்ன மோசமான விஷயத்தைச் சொன்னாலும் நமது மக்கள் கேட்கத் தயாராயிருப்பார்கள்.

நமது வேலை.

ஆனால், உங்களது வீட்டிலிருக்கும் 13 வயதுடைய விதவையை மறுமணம்செய்து கொடுக்கவேண்டாமென்று எந்த அன்னிய ஆட்சி கையைப்பிடித்துக் கொள்கிறது? உங்கள் வீ

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

சிவகங்கையில் நடைபெற்ற

இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டுத்தலைவர்

தோழர் எஸ். ராமநாதன்

அவர்கள் தலைமை உரை.

2-12-33ந் தேதியில் சிவகங்கையில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர் தோழர் எஸ். இராமநாதன் எம்.ஏ.பி.எல். அவர்கள் தலைமை உரை சுருக்கம் வருமாறு:—

இரண்டு வருஷங்களுக்கு முன் விருதுநகரில் கூடிய மூன்றாவது மாகாண சுயமரியாதை மகாநாடு இந்திய தேச சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதாகும். இந்திய தேசத்தில் முதன் முதலாக மதங்கள் யாவும் அழியவேண்டும் என்ற பிரச்சினையைக் கிளப்பியது விருதுநகர் மகாநாடு. அதுவரையில் நமது நாட்டில் பல மத சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியிருந்தனவே ஒழிய மதங்கள் யாவற்றையும் அழிக்கவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றியதில்லை. அம் மகாநாட்டின் பிறகு சென்ற இரண்டு வருஷங்களாக மதங்களை அழிக்க வேண்டும், கடவுள் எண்ணத்தைத் துலைக்கவேண்டும் என்ற இயக்கம் தென்னாடு முழுவதும் பரவி வட இந்தியாவுக்கும் எட்டிக்கொண்டிருக்கிறது. நமது இயக்கம் மக்களிடையே செல்வாக்குப்பெற்றுவருகிறதென்பதற்கும், நமது இயக்கக்கொள்கைகளை எதிர்த்து நிற்க நமது எதிரிகளுக்குப் போதிய சக்தியில்லை என்பதற்கும் அறிகுறியாக நமது இயக்கப் பிரசாரகர்களையும், பத்திரிகைகளையும்பலவந்தமாய் அடக்குவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. நமது இயக்கப்பத்திரிகைகளான "புதுவை முரசு" "குடிஅரசு" "வெடி குண்டு" முதலியவை கத்தோலிக்கப் பாதிரிகளால் தூண்டப்பட்டு அரசாங்க அடக்குமுறைகளுக்கு ஆளாயின. நமது வெற்றிக்கு அறிகுறியான இவ்வித அடக்குமுறைகளை நாம் மனமுவந்து வரவேற்க வேண்டுமேயொழிய அவற்றைக் கண்டு நாம் ஆத்திரப்படுவதோ, மனமுடைவதோ பொருந்தாததாகும். பொதுவாழ்விலும், தேச சேவையிலும் நமது லட்சியத்தை அடையவேண்டுமானால் அதற்குத் தகுந்தவாறு, அதற்கு விலையாக நாம் தியாகம் செய்து தீரவேண்டும்.

சுயமரியாதை இயக்கத்தின் நேரிடையான லட்சியம் மதங்கள் அழியவேண்டும். குருட்டு எண்ணங்களும், மூட நம்பிக்கைகளும் ஒழியவேண்டும். இதற்கு ஏதோ சில தொண்டர்கள் அடிபடுவதும், சில பத்திரிகைகள் அடக்கப்படுவதும் மாத்திரமே போதாது. பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள், ஆண்களும் பெண்களுமாய் வீராவேசத்துடன் கிளம்பி, தங்கள் உயிரையும் பலிகொடுத்து, தங்கள் கொள்கையைச் சாதிக்க முன்வரவேண்டும். இவ்வித மாபெரும் வேலையை மேற்கொண்ட நாம் இன்னும் நமது கொள்கைக்குத் தக்க திட்டங்களை வகுத்துக்கொள்ளவில்லை, வேலை தொடங்கவில்லை என்பதை நாம் அனைவரும் வருத்தத்துடன் ஒப்புக்கொண்டாகவேண்டும். இனியாவது உணர்ந்து இம்மகாநாட்டில் நடைமுறைகளை அமைப்போமாக.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நாம் எந்தநம்பிக்கையையும், ஸ்தாபனங்களையும் அழிக்கவேண்டுமென்று கோருகிறோமோ அந்தந்த கொள்கைகளையும், ஸ்தாபனங்களையும் நிலை நாட்டுவதற்காக நம்மோடு போர் புரிகிறவர்கள் இரண்டு வகைப்படுவார்கள். முதலாவதாக உள்ளவர்கள் அந்தக்கொள்கைகளிலும், ஸ்தாபனங்களிலும் வாஸ்தவத்திலேயே நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களிடத்தில் நாம் ஆத்திரப்படுவதிலோ, இவர்களை நாம் குறைகூறுவதிலோ எவ்விதப் பயனுமில்லை. நம்முடைய பிரசாரத்தின் தீவிரத்தினாலும், நமது நடத்தையின் உண்மையினாலும் இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நம்மோடு சேர்ந்து கொண்டும், நமது இயக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டும் வருகிறார்கள்..

நமது இயக்கம்ஒருபுறமிருக்க உலகத்தின் நவீன நாகரீகப் போக்கின் காரணமாகவும்,விஞ்ஞான அறிவுவளர்ச்சியின் காரணமாகவும் அதாவது நவீனமாக ஏற்பட்டுள்ள ரயில், மோட்டார் பிரயாணத்தின் மூலமாகவும், தீண்டாமை ஜாதிப் பேய்கள் ஓரளவு மறைந்து வருகின்றன.

ஆனால் நமது எதிரிகளில் மற்றொரு கூட்டத்தார் ஒரு சிலர் மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பதாகப் பாசாங்கு செய்து வந்தபோதிலும் இந்தப் பிரிவினர் பொதுவாகத் தங்கள் சொந்த ஊதியத்தையும், சுயநலப்பெருக்கையும் உத்தேசித்தே நம்மை எதிர்த்து வருகிறார்கள். இவர்கள் வாழ்வின் பொருளாதார பலத்தை அழிக்க முற்பட்டிருக்கும் நம்மோடு இவர்களும் ஒத்து வருவது மனித இயற்கைக்கு மாறுபட்டதாகும். ஆகவே,பொது ஜனங்களிடம் நாம் செய்யும் பிரசாரத்தின் மூலம் பொது ஜனங்களின் மனம் மாறுதலடைந்து அவர்கள் தாமாகவே இந்த மதத் தரகர்களின் வலையிலிருந்து விடுபட்டு இத்தரகர் கூட்டத்தை அழிக்க முற்படும் வரையில் இவர்கள் நம்மை எதிர்த்தே தீருவார்கள்.

பொதுவாகக் கூறுமிடத்து மதத் தரகர்களாகிய பிராமணர்களும், பாதிரிகளும், முல்லாக்களும் தங்களை ஏழைகளென்றும், அரசியல் சொல்வாக்கிற்கு ஆசைப்படாத அனாதைச சந்நியாசிகளென்றும், சொல்லிக்கொண்ட போதிலும், உண்மையை ஆராயுமிடத்து இத்தரகர் கூட்டத்தார் பெரிய தனவந்தர் என்பதும், அரசியல் அதிகாரத்தில் பெரும் பாகம் பங்குள்ளவர்களென்பதும் நிதர்சனமாக விளங்கும். இவர்களுக்கு எவ்வளவு நிலங்கள் சர்வமானியமென்றும்,இனாமென்றும், சுரோத்திரியமென்றும், மேதினிப் பணமென்றும், பொது ஜனங்களிடமிருந்து பிரார்த்தனை என்றும், வேண்டுதலை என்றும், அர்ச்சனை என்றும், தேர் திருவிழாவென்றும் எவ்வளவு பணம் மதத்தரகர்கள் கைக்குப் போய்ச் சேருகிறது? இதைத்தவிர வருஷம் தவறாமல், திதி தவறாமல் சிரார்த்தம், தர்ப்பணம், சாந்தி கல்யாணம் எழவு, கருமாதி என்றும், எவ்வளவு பணம் எவ்வளவு அரிசி, உப்பு, புளி, மிளகாய், காய்கறி, வேஷ்டி, விசிறி, செருப்பு என்றெல்லாம் தரகருக்குப் பொருள் சேருகிறது. இப்படி நோகாமல் இவர்கள் பொருள்தேடி அதைத்திருப்பி-தொழிலாளியிடமும், குடியானவனிடமும் வட்டிக்குக் கடனாகக் கொடுக்கிறார்கள். அந்தக்கடனிலிருந்து மீள வகையில்லாமல் தங்களுக்குள்ள காணி அரைக்காணி நிலங்களைப் பறி கொடுத்துப் பண்ணையாட்களாக மாறி அவதியுற்றும் அலைகிறார்கள். இத்தரகர்களது உயிர்நிலை பொது மக்களின் மூடநம்பிக்கையில் வேரூன்றி நிற்பதால்பொது ஜன நன்மையையும், முற்போக்கையும் இவர்கள் எதிர்த்தே தீரவேண்டியவர்களாகின்றார்கள். தற்சமயம் நமது நாட்டிலும் பொதுவாக உலகம் முழுவதுமே ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைப் போன்ற காலங்களில் இவ்வுண்மை தெளிவாகப் புலப்படும். தற்சமயம் நமது நாட்டு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியினால் அவர்கள் பிராமணர்களிடம் வாங்கியிருக்கும் கடனுக்கு வழிசெய்ய முடியாதவர்களாகி தங்கள் சொத்துக்களை அந்த பிராமணர்களுக்கேஒப்படைத்துவிட நேரிடுகிறது. இதன் மூலம் நாளுக்கு நாள் ஒரு சில பிராமணர்கள் முதலாளிக்கூட்டத்தைச் சேரவும் பெருவாரியான நடுத்தர சொத்துடைய குடித்தனக்காரர்கள் பரம ஏழைகளான தொழிலாளர் கூட்டத்தைச சேரவும் ஏற்படுகிறது.

இந்த உண்மையை காரல் மார்க்ஸ் என்ற அறிஞர் எதிர்பார்த்து சொல்லியிருக்கிறார். நாளுக்கு நாள் ஒரு சில பணக்காரர்களிடம் சொத்து அதிகமாகப் பெருகிக்கொண்டே போவதையும், பெருவாரியான மக்கள் நாளுக்கு நாள், மேலும் மேலும் வறுமை மேலிட்டு அவதிப்படுவதையும் காண்கிறோம். இவ்விரு தோற்றங்களுக்கு மத்தியில் முதலாளி வகுப்பில் சேர மனமில்லாமலும், தொழிலாளி வகுப்பில் சேர மனமில்லாமலும் இரண்டுங்கெட்டவனாய் நடுத்தர வகுப்பாக நின்று எப்படியாவது தங்கள் நிலையைக் காப்பாற்றிக் கொள்ளலாமென்று தத்தளித்துக் கொண்டிருந்த தரகர் கூட்டத்தார் நிலை குலைந்து வருவதையும் காண்கிறோம். இந்தக் கூட்டம் அழிந்து விடுவதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை.

உலக நாகரீக வளர்ச்சியின் காரணமாயும், விஞ்ஞான அறிவின் முற்போக்காலுமே முதலாளி ஆதிக்கம் உலகில் ஏற்பட்டு உலக மக்களை பணக்காரன் ஏழை என்ற இருகூறாகத் தனித்தனியேபிரித்துவருகிறது. மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் தரித்திரமும், ஒரு சில பணக்காரருடைய வீண் டம்பங்களும் மறைந்து சமத்துவமும், சமரசமும் நாட்டில் நிலவவேண்டுமானால் இந்த இரண்டாங்கெட்டான் வகுப்பாகிய சில்லரைக் குடி[illegible]தனக்காரர்கள் அழிந்து இவர்க[illegible] அனைவரும் தொழிலாளிகளாகவும் பண்ணையாட்களாகவும் மாறவேண்டும்.

இந்த மத்தியவகுப்பாரின் வாழ்[illegible]கை பொதுஜனங்களை முதலாளி[illegible]ளிடம் காட்டிக்கொடுப்பது ஒருபு[illegible]மும், மதத் தரகர்களின் வலையில் [illegible]ங்கள் சிக்கி மூடப் பழக்கவழக்க[illegible]களைப் பெருக்குவது மற்றொரு பு[illegible]மாக விளங்குகிறது.

தீண்டாமையென்றும், ஜாதிவி[illegible]தியாசமென்றும் பொதுமக்களை [illegible] பிரித்துவைக்க சூழ்ச்சிசெய்து தி[illegible]டம்போட்டது பிராமணர்களேயா[illegible] போதிலும், அந்தத் திட்டங்களை [illegible]ரியம்சையில் நிறைவேற்றிவைத்[illegible] அந்த பிராமணர்களின் எண்ண[illegible]கை கூடும்படி பாடுபட்டது இ[illegible] மத்தியக்கூட்டமேயாகும், கிராம[illegible]ளிலும், பட்டணங்களிலும் உ[illegible] விவசாயிகளும் வியாபாரிகளுமே[illegible]கும். தீண்டாமை என்னும் கொ[illegible]மையைப்பற்றி உலகமக்கள் ஏள[illegible] செய்யவும், இந்தியப் பொதுஜன[illegible]கள் ஆத்திரப் படவுமான நிலை[illegible] தற்சமயம் ஏற்பட்டபோது பிராம[illegible]ர்கள் ஏதோ தாங்கள் அதற்குச் ச[illegible]ந்தப்பட்டவர்களல்ல என்பதுபோ[illegible] பாசாங்குசெய்துகொண்டு வெளி[illegible] ஷத்துக்குத் தீண்டாமை ஒழிப்[illegible] பிரசாரமும் செய்துகொண்டு த[illegible]கள தப்பித்துக்கொள்ள முய[illegible] போது, அவர்களிடம் தீண்டாமை[illegible] பாடத்தைக் கற்றுக்கொண்ட கு[illegible]னவர்களும் வியாபாரிகளும் வி[illegible]மில்லாமல் தங்களுடைய நன்[illegible]யைப் பாதுகாத்துக்கொள்ள [illegible]

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்[illegible]

ரஷ்யாவின் 16 வருஷத்திய பலன்.

ரஷ்ய சோவியத் ஜனநாயகக் குடி அரசுகளின் யூனியன் ஸ்தாபிக்கப்பட்டு இந்த வருடத்தோடு பதினாறு வருடங்கள் ஆகின்றன.

சோவியத் ஆட்சியினால் ரஷ்யா தேசம் கல்வியிலும், நாகரிகத்திலும் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ரஷ்யா, ஜார் சக்கரவர்த்தி குடும்பத்தாரின் ஆளுகைக்குள்ளிருந்த சென்ற இருநூறு வருட காலத்திலே ரஷ்யா நாட்டிலே 100 ஹைஸ்கூல்களும், 15 கைத்தொழில் கல்விச்சாலைகளும் தான் இருந்தன. ஆனால் சோவியத் ஆட்சியின் கீழ் சென்ற 16 வருட காலத்திலே 300 உயர்தரப் பாடசாலைகளுக்கு அதிகமாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் கைத்தொழில் படிப்பும் கற்பிக்கப்படுகிறது. அந்தக் கல்விச்சாலைகளில் படிக்கும் பிள்ளைகளில் நூற்றுக்கு 70 வீதம் விவசாயிகள் தொழிலாளிகள் வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். ஏறக்குறைய இரண்டரைக் கோடி பிள்ளைகள் கல்வி கற்று வருகிறார்கள். ஜார் சக்கரவர்த்தி காலத்தில் படித்த மாணவரிலும் இது இருமடங்கு அதிகம். பள்ளிப் பிள்ளைகளுக்கு சோவியத் சர்க்காரால் சாப்பாடு, உடை, ஜோடு ஆகியன இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. வேனில் காலத்திலே வெளியூர் போய் தங்கியிருந்து திரும்புவதற்கான வசதிகளும், ஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேற்படி மாணவரில் அரை வாசிக்கு அதிகமானவர்கள் இந்த சிலாக்கியங்களை அநுபவித்து வருகின்றனர்.

சோவியத் சர்க்கார் அறிக்கையின்படி, ஐந்து வருட திட்ட காலத்தில் 5 கோடியே 80 லட்சம் ஜனங்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. மூன்று வருடங்களுக்கு முன் நாடெங்கும் கட்டாயக்கல்வி ஏற்படுத்தப்பட்டது. வெகு சீக்கிரத்தில் அறியாமையும், கல்வியின்மையும் பூரணமாய் ஒழிக்கப்பட்டுவிடும் என்று தெரிகிறது.

பத்திரிகைகளின் அபிவிருத்தி.

இவ்வாறே புத்தகங்களும், பத்திரிகைகளும் வளர்ச்சியடைந்திருக்கின்றன.

1913ம் வருடத்தில் ரஷ்யாவில் ஆயிரம் பத்திரிகைகளுக்கு குறைவாகவே இருந்தன. 1932ம் வருடத்திலோ பத்திரிகைகளின் தொகை 5,000க்கு அதிகரித்து விட்டது. ஒவ்வொரு பத்திரிகையிலும் வருடம் 4 கோடி பிரதிகள் விற்பனையாகியிருப்பதாகத் தெரிகிறது.

பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்காக சோவியத் சர்க்கார் கிராம புத்தகசாலைகளை புதிதாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இத்தகைய 6,000 கிராம புத்தகசாலைகள் இப்பொழுது நடந்து வருகின்றன.

ஆகாய போக்கு வரவு.

ஆகாயவிமான போக்கு வரவு அதிக விருத்தியடைந்திருக்கிறது. சோவியத் ரஷ்யாவின் மத்திய பாகத்திலிருந்து மற்றப் பிரதேசங்களுக்கும் போக்கு வரவு செய்வதற்காக ஐம்பதுக்கு மேற்பட்ட ஆகாய விமானப்பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. ரஷ்யா முழுவதிலும் மொத்தம் 61,000 கிலோ மீட்டர் அதாவது சுமார் 39,000 மைல் தூரத்துக்கு ஆகாய விமானப் போக்கு வரவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

1933ம வருடத்தின் முதல் மூன்பது மாத காலத்திலே ரஷ்ய விமானங்கள் சுமார் 40 லட்சம் மைல் தூரம் பிரயாணம் செய்திருப்பதாகவும், 32 ஆயிரம் பிரயாணிகளையும், 1,452 டன் நிறையுள்ள தபால் கடிதங்களையும், 578 டன் நிறையுள்ள மற்ற சாமான்களையும் ஏற்றிக்கொண்டு போனதாகவும் தெரிகிறது.

விவசாய வேலைகளுக்கு விமானங்களை உபயோகிப்பதில் மற்றெல்லா தேசங்களையும்விட ரஷ்யா தான் முன்னணியில் நிற்கிறது. 1933-ம் வருடத்திலே 16 ஆயிரம் டன்னுக்கு அதிகமான நெல், தினை முதலிய நவதானியங்கள், விமானங்கள் மூலமாக விதைக்கப்பட்டிருக்கிறது. இப்படி விமானங்கள் மூலமாக விதைக்கப்பட்ட நிலங்கள் ஏறக்குறைய 160,000 ஹெக்டார் விஸ்தீரணமுள்ளவை. ஏக்கரா கணக்குப்படி இது சுமார் 4 லட்சம் ஏக்கரா ஆகும். கொசு முதலிய மலேரியாவை உற்பத்தி செய்யும் பூச்சி புழுக்களை அழிப்பதற்கும் விமானங்கள் உபயோகிக்கப் படுகின்றன. காடுகளைப் படம் பிடிப்பது, அளவு எடுப்பது, வெட்டின மரங்களை ஆறுகளில் மிதவையாக அனுப்புவதை மேற்பார்வை செய்வது, காடுகளில் தீப்பற்றுதபடி காவல் புரிவது முதலிய வேலைகளுக்கும் விமானங்கள் உபயோகிக்கப்படுகின்றன.

பிள்ளைகளுக்காக நாடகங்கள்.

சிறு பிள்ளைகளுக்கென்றே மாஸ்கோ நகரத்தில் ஒரு நாடக சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே சங்கீத விநோதக்கதை, விஞ்ஞானசாஸ்திர அற்புதநாடகம், பள்ளிக்கூடவாழ்க்கையைக்காட்டும் நாடகங்கள் முதலிய ஐந்து புதியநாடகங்கள் சமீபத்தில் சிறுவர்களுக்காக நடிக்கப்படும் என்று தெரிகிறது. "பீபிள்"

தமிழன்பர் மகாநாட்டுக்குத் தீர்மானங்கள்.

தோழர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்,
நிர்வாக சபைத் தலைவர்,
தமிழன்பர் மகாநாடு,
மைலாப்பூர்.

அன்புள்ள ஐயா!

இம்மாதம் 23, 24ம் தேதிகளில் நடக்கும் தமிழன்பர் மகாநாட்டில் நிறைவேற்றப்படுவதற்காக அனுப்பப்பட்டிருக்கும் கீழ்கண்ட தீர்மானங்களை மகாநாட்டில் வைக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தீர்மானங்கள்.

1. பொதுப் பள்ளிக்கூடங்களின் பாடப் புத்தகங்கள் அனைத்தும் அரசாங்கத்தாராலேயே பிரசுரிக்கப்படவேண்டுமே யொழிய அவைகள் தனிப்பட்ட நபர்களுக்கோ, சங்கங்களுக்கோ சிறிதும் சம்பந்தம் இருக்கக் கூடாதென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

2. தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்கள் பொதுஜனங்களிடையே பரவ வேண்டுமானால் அவ்விலக்கியங்கள் ஜாதி மதப் பாகுபாடுகளைக் குறிக்கும் விஷயங்கள் ஒரு சிறிதும் சம்மந்தப்படாதவைகளாக இருக்கவேண்டுமாகையால் அவ்விதப் பாகுபாடுகளையும் ஜாதிமத சம்மந்தமான விஷயங்களையும் கொண்ட புத்தகங்களைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களாக வைக்கக் கூடாதென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

3. பொதுப் பள்ளிக்கூடங்களில் தமிழ்மொழியும் இலக்கியங்களும் வளம்பெறுவதற்குக் கல்வியறிவிற்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் தமிழ்மொழியிலேயே கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும், சமஸ்கிருதம், ஹிந்தி முதலிய பிறமொழிகளைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் கற்பிப்பதினால் மாணவர்களுடைய கவனங்கள் சிதறுண்டு போய்விடுமாதலால், அவைகளைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கக் கூடாதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. அறிவைப் பரப்புவதற்கும் இலக்கியங்களைக் கற்பிப்பதற்கும் ஏற்படுத்தப்படுகிற கல்விசம்பந்தமான புத்தகங்களில் பகுத்தறிவுக்கும் தன் நம்பிக்கைக்கும் முரணான கடவுள் வாழ்த்து, கடவுள வணக்கம் முதலிய விஷயங்களை அடியோடு குறிப்பிடாமல் இருக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

5. தமிழ் நெடுங்கணக்கில் 216 எழுத்துக்கள் இருப்பதால் புதிதாகத்தமிழ் படிப்பவர்களுக்கும், அச்சுவேலை, டைப்ரைட்டிங் வேலை முதலியவைகளுக்கும் சௌகரியம் ஏற்படும்படி அவசியமற்ற பல எழுத்துக்களையும், குறிகளையும் நீக்கவேண்டுமென்றும், புதிய சப்தங்களுக்காக சில புதிய எழுத்துக்களைச் சேர்க்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

6. அரசாங்கப் பொதுக்கல்லூரிகளில் தென்னிந்திய பாஷையல்லாததும், பேச்சு வழக்குக்குப் பயன்படாததுமான சமஸ்கிருத பாஷைக்குத் தனிப்பிரதானத்துவம் கொடுத்திருப்பதோடு பொதுமக்களாகிய தமிழ் மக்களின் வரிப்பணத்திலிருந்து சமஸ்கிருதபாஷை புரொபசருக்கென்று தமிழ் பாஷைப் பண்டிதர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை விட 4, 5 மடங்கு அதிகமான சம்பளம் கொடுப்பதையும், பதினாயிரக்கணக்கான ரூபாய்களை சமஸ்கிருத பாஷைக்கென்று உதவித் தொகையாகக் கொடுப்பதையும் நிறுத்தி, அவ்வித முறையே தமிழ் மொழிக்கும், தமிழ் மொழி மூலம் அறிவு வளர்ச்சி உண்டாக்

இராமநாதபுரம் ஜில்லா மூன்றுவது சுயமரியாதை மகாநாடு.

(சிவகங்கை.)

நிறைவேறிய தீர்மானங்கள்.

இராமநாதபுரம் ஜில்லா மூன்றுவது சுயமரியாதை மகாநாடு நாளிது டிசம்பர் மாதம் 2 தேதி காலை 9 மணிக்கு சிவகெங்கை "கமலாம்பிகா சென்ட்ரல் டவுன் ஹாலில்" நடைபெற்றது. அன்று காலை 7-45 மணிக்கு ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தலைவர்களை அழைத்து வரப்பட்டது. 9 மணிக்கு ஊர்வலம் பழைய தாலூகா போர்டு ஆபீசிலிருந்து மகாநாட்டுப் பந்தலுக்கு வாத்திய கோஷத்துடன் அழைத்து வரப்பட்டது. மகாநாட்டுப் பந்தல் பல செடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளூரிலிருந்தும், பக்கத்து ஊர்களிலிருந்தும் ஏராளமான ஆண் பெண் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். மகாநாட்டிற்கு வந்திருந்த முக்கியமானவர்கள்.

தோழர்கள்:— ஈ. வெ. ராமசாமி, எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல்., ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், எஸ். குருசாமி பி. ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., எ. ஆறுமுகம், எஸ். நீலாவதி, ராமசுப்பிரமணியம், சி. டி. நாயகம், சி. டி. என். சிதம்பரம் அம்மையார், சி. டி. என். அறம்வளர்த்தாள் அம்மையார் பி. ஏ., ஸ்ரீரங்கம் டி. துரைசாமி, டி. ராஜாமணி, ஈரோடு கே. மிரண்டா, சி. நடராஜன், சின்னையா, என். பி. காளியப்பன், எம். பொன்னுசாமி பி. ஏ. பி. எல்., கற்பூரசுந்திரபாண்டியன் பி. ஏ. பி. எல்., எஸ். ஆர். எம். வெங்கடாசலம், மதுரை பி. விநாயகமூர்த்தி, "வெடி குண்டு" ஆசிரியர் எ. எஸ். ஆனந்தம், திருச்சி டி. சம்பந்தம், அ. பொன்னம்பலம், ராமசுப்பையா, ப ஜீவானந்தம், நாகை ஆர். ஜி. கோபால், பி. அழகர்சாமி, கல்குடி ஆ. பூமிநாதம், மு. பழனியப்பா, சி. உ. சுப. உடையப்பா, ஆர். வி. சாமிநாதன், வி. சா. காசிநாதன், ஆரு. ஆ. ஆறு. சொக்கலிங்கம், எஸ். நடராஜன், பி. நா. சொக்கலிங்கம், கூத்தனூர் நாகப்பன், ந. மெ. தியாகராஜா, கும்பலிங்கம், சுப்பையா அம்பலம், டாக்டர் கோவிந்தராஜுலு, மதுரை எஸ்- வி- ராமலிங்கம், எ. எஸ். அருணாசலம், ப. வ. விநாயகமூர்த்தி, ஆ. அ. ஆறுமுகம் முனிசிபல் கவுன்சிலர், என். சுப்பிரமணியம், எ. வே. வை. கோபால், க. இ. சுக்கினி, எம். பட்டணம், உடைச்சி முனிசிபல் கவுன்சிலர், எஸ். ராஜகோபால், சையது அகம்மது அய்யாசாமி, வைத்தியபதி, ராமனுதன், எ. வீராசாமி, திருமங்கலம் மணிமாறன், அருப்புக்கோட்டை எ. கே. எஸ். வி. சிவசுப்பிரமணிய முதலியார் மாஜி யூனியன் சேர்மன், விருதுநகர் பெ. சி. சிதம்பரம், ம. கு. மா. அண்ணாமலை, எஸ். ராமசாமி, வி. எ. எம. அருணாசலம், கே. பி. மகாலிங்கம், எஸ். சொக்கலிங்கம், வி. எ. வி. பழனியப்பன், லட்சுமிபுரம் மு. பழனியப்பா, அ. நா. அண்ணாமலை கோட்டையூர், மண்டமாணிக்கம், மு. பர்தாம்பிரியர், ரங்கநாதபிள்ளை மதுரை ஜில்லா போர்டு மெம்பர், பால்சாமி நாயுடு திண்டுக்கல் தாலூகா போர்டு பிரசிடெண்டு, க. அ புன்னைமுத்து கல்லூரணி, போடம்பட்டி கருப்பையா, பாகனேரி, சாமிநாதன், அரண்மனை சாறுவயல், அ. ரு. சு. ப. கருப்பையா, க. ன. பழனியப்பன், கூத்தலூர் எ. ஆர். கணேசன், உ. ல. சிதம்பரம், ஆ. ரு. நாகப்பன், அ. ராமசாமி, வி. சுவாமிநாதன், வ. வெ. கருப்பையா காரைக்குடி, சி. மு. சின்னய்யா கோட்டையூர், செம்பலூர் அ சு. பெரி. சுப்பராய ஆச்சாரி, கண்டரமாணிக்கம் ஆவி. மு. ரு. ராமசாமி செட்டியார், ஆவி. சி. நா. சாத்தப்ப செட்டியார், வி. சா. காசி செட்டியார், மு. மெ. மெய்யப்ப செட்டியார், வி. சா. ஆவிச்சி செட்டியார் முதலியவர்களாவார்கள்.

மகாநாட்டு நிகழ்ச்சி ஆரம்பத்தில் நாகை தோழர் பி. அழகர்சாமி அவர்களும் இன்னும் பலதோழர்களும்சமதர்மகீதங்கள் பாடினார்கள். கைத்தொழில் கல்லூரி மாணவ மாணவிகள் பாரதிபாடல்கள் பாடினார்கள்.

பின்னர் தோழர் கற்பூரசுந்தரபாண்டியன் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொள்ள சென்னை தோழர் எஸ். குஞ்சிதம் அவர்கள் தமது திறப்புவிழா பிரசங்கத்தை ஆற்றி திறந்து வைத்தார்கள். பின்னர் தோழர் எம். பொன்னுசாமி அவர்கள் கேட்டுக்கொண்டு தோழர் எஸ். ஆர். எம். வேங்கடாசலம், ஆமோதிக்க தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர் எம். பொன்னுசாமி அவர்கள் தமது வரவேற்பு சொற்பொழிவை ஆற்றினார்கள்.

அதன் பின்னர் தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் தமது முகவுரைப் பிரசங்கம் ஆற்றினார். தோழர்களான ரம்பா, ராம சின்னையா, திண்டுக்கல் "சன்மார்க்கன்" ஆசிரியர், உறையூர் புரோகித மறுப்புச் சங்கக் காரியதரிசி ச. ம. சி. பரமசிவம், இராமேஸ்வரம் துவாதசாந்தம் முதலியவர்களிடமிருந்து வந்த கடிதம் தந்திகள் வாசிக்கப்பெற்றன.

பிறகு தோழர்கள் சி. டி. நாயகம் அவர்களும், ஈ. வெ. ராமசாமி அவர்களும் முறையே "வெளி நாட்டார் வரவு" சு-ம- இயக்கம் என்பதுபற்றிப்பேசினார்கள்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்கு உண்மையோடும், உறுதியோடும் பாடுபட்ட தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்களும், சுயமரியாதை இயக்கத்திற்கே தாயென விளங்கிய ஈ. வெ. ரா- நாகம்மாள் அவர்களும் மரணம் எய்தியதைக் குறித்து இம் மகாநாடு பெரிதும் வருந்துகிறது.

பிரேரபித்தவர்:—தலைவர்.

2. மலையாளத்திலுள்ள தீயவகுப்பினர்கள் தாங்கள் ஹிந்துக்களல்லவென்றும், வேறு எந்த மதத்தையும் சேரத் தயாராக இல்லையென்றும் தங்களுடைய மகாநாட்டில் தீர்மானித்திருப்பதை இம் மகாநாடு பாராட்டுவதுடன் நம் நாட்டிலுள்ள இதர சமூகத்தாரும் மகாநாடுகள் கூடி தாங்கள் மதமற்றவர்கள் என்று தீர்மானிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர்:-
டபிள்யூ. பி.ஏ. சௌந்தரபாண்டியன்,

ஆமோதித்தவர்:-
திருமங்கலம் மணிமாறன்.

3. ஈரோட்டில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் லட்சியங்களையும், சமதர்மத் திட்டங்களையும் இம் மகாநாடு ஆதரிப்பதுடன் அவைகளை மாகாண மகாநாட்டிற்கு சிபார்சு செய்கிறது.

பிரே:- அ. பொன்னம்பலம்.
ஆமோ:- ஈ. வெ. ராமசாமி

எஸ். ராமனுதன் எம். ஏ., பி. எல் எதிர்த்துப் பேசினர்.

அ. பொன்னம்பலம் பதில் கூறினர்.

காந்தி பகிஷ்காரம்.

4. "ஹரிஜனத் தொண்டு என்ற பெயரால் பார்ப்பனீய மதமாகிய ஹிந்துமதத்தை நிலைநாட்டும் உத்தேசத்துடன் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யப்போகிற தோழர் காந்தியவர்களின் பிரசாரத்தை வெற்றிபெறவொட்டாமல் தடுக்கும்பொருட்டு தீவிரமாய் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் ஆங்காங்கு பொதுக் கூட்டங்கள் கூடி காந்தியாரின் மதப் பிரசாரத்தைக் கண்டிப்பதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதுடன், தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துமதத்தில் சேர விரும்பாதவர்களைத் திரட்டி காந்தியாரின் பிரசாரத்தை எதிர்க்க வழி தேடவேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே:- எஸ். குருசாமி
ஆமோ:: 1. ப. ஜீவானந்தம் 2. ஈ. வெ. ராமசாமி.

5. இம் மாதத்தில் சென்னையில் நடைபெறப் போகும் தமிழன்பர் மகாநாடானது பழமையையும், பார்ப்பனீயத்தையும் நிலைநாட்டும் எண்ணத்தோடு நடைபெறப் போகிறபடியால் சுயமரியாதை அன்பர்கள் அதைப் பகிஷ்கரிப்பதோடு அதன் சூக்ஷியையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படி இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே:- மதுரை ஏ. எஸ். அருணாசலம், ஆமோ விருதுநகர் அருணாசலம் நாகை காளியப்பன்.

6. முஸ்லீம் பள்ளிக்கூடங்களிலுள்ள சிறு பிள்ளைகளுக்கு மதப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் தீர்மானித்திருப்பதானது மனித ஒற்றுமைக்கு மாறான செய்கையாகையால் அதை உடனே ரத்து செய்துவிட வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே:- திருச்சி ராமசுப்ரமண்யம்
ஆமோ:- எஸ். இராமனுதன்

7. கர்ப்பத்தடையைப் பரப்பு... தற்காகச் சென்னை சர்க்கார் செய்தி... ருக்கும் ஏற்பாடுகளுக்காக இம்மகா நாடு பாராட்டுவதுடன் பெண்களின் கஷ்டநிலையறியாத மதக் காரர்கள் கற்பத் தடைக்கு விரோதமாகக் கி... ர்ச்சி செய்வதைப் பொருட்படுத்த... கூடாதென்றும் கேட்டுக்கொள்... றது.

பிரே:- நீலாவதி
ஆமோ:- மதுரை. விநாயகமூர்த்தி

8. கத்தோலிக் மதப் புரட்டுகளை... வெளிப்படுத்திய காரணத்திற்க... "குடி அரசு," "வெடிகுண்டு" ஆகி... பத்திரிகைகளை கத்தோலிக்கப் பா... ரிமார்களின் தூண்டுதலினால் ... ன்னை சர்க்கார் ஜாமீன் தொகை ... ட்டிருப்பதை இம் மகாநாடு கண்... பதுடன் கத்தோலிக்கக் குருமா...

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

குவதற்கும் பயன்படுத்த வேண்டுமென்று இம்மகாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது-

7. தமிழ் அல்லாத பிறமொழிப் பயிற்சியுடையவர்கள் அரசாங்கத்திற்குத் தேவையிருக்குமானால் அதற்காகத் தெரிந்தெடுக்கப்படும். மக்களை அளவு படுத்த வேண்டுமென்றும் அந்த அளவை வகுப்புவாரிப் பிரதிநித்துவ முறைப்படி தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

தங்கள அன்புள்ள,
K. M. பாலசுப்பிரமண்யம் B. A., B. L.,
R. நடேசன்,
S. குருசாமி,
அ. பொன்னம்பலனர்,
அ. இராகவன்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஆஸ்திகமும் : : நாஸ்திகமும்.

பக்தியும், ஜபமும் சுரத்தைத் தடுக்கா!

சார்லஸ் பிராட்லா.

('ஏயஸ்' மொழிபெயர்த்தது)

[ஆஸ்திக நாஸ்திக வாதப் பிரதிவாதங்களைப்பற்றிய கட்டுரைகள் பல "குடி அரசில்" பல முறை வெளிவந்துள்ளன. எனினும் பிரபல நாஸ்திக வாதியான சார்லஸ் பிராட்லா 'நாஸ்திகத்தின் வாதம்' என்ற தமது கட்டுரையில் மிக அழகாக இந்த வாதப்பிரதிவாதங்களை விளக்கியுள்ளார். இக்கட்டுரையின் சுருக்கமான மொழிபெயர்ப்பு அடியில் வருமாறு—'ஏயஸ்'.]

நாஸ்திகம் ஒழுக்கயீனத்தை ஆதரிப்பதாகவும், நாஸ்திகர்களுடைய நடத்தை இழிவானதாக இருப்பதாகவும், அவர்களுடைய தீமையான வாழ்க்கை மீது நியாயமான கோபங் கொண்டுள்ள ஒரு தெய்வத்தை நிந்திக்கவே அவர்கள் நாஸ்திகக்கொள்கைகள் கொண்டுள்ளதாகவும் பக்த சிரோன்மணிகள் சொல்வது ஒரு ஆசாரமாகிவிட்டது. கெட்ட வழிகளில் பழகுவது, இழிகுணமுடைய நட்பு-கட்டுக்கடங்காத வாழ்க்கை-இவையும், இவை போன்றவையுந்தான் ஒரு மனிதனை நாஸ்திகனாக்கி விடுவதாக அவர்கள் கருதுகிறார்கள்.

"அனேகமாக எல்லா நாஸ்திகர்களும் மிகமிக மோசமான, இழிவான வாழ்க்கையை நடத்தியவர்களாகக் காணப்படுகின்றனர்" என்று கூட தமது 'கிறிஸ்தவ மத போதனை' என்ற நூலில் டாக்டர் ஜான்பை ஸ்மித் என்பார் எழுதியிருக்கிறார்.

ஆஸ்திகத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த முறையையும்விடக் கூடுதலாகவே, மனிதர்கள் இன்ப வாழ்வுபெற, நாஸ்திகத்தில் சந்தர்ப்பமிருக்கின்றதென்று நான் வலியுறுத்துகின்றேன். தெய்வ நம்பிக்கையுடையவர்களைவிட உண்மையான நாஸ்திகர்களுடைய வாழ்வு ஒழுக்கத்தில் சிறந்ததாக இருத்தல்வேண்டும். ஆஸ்திகனுக்கு மட்டும் நாஸ்திகம் மிகக்கடுமையான குற்றமாகத் தோற்றுகிறது.

நாஸ்திகம் எது?

வெறும் அவநம்பிக்கை மட்டும் நாஸ்திகமல்ல; சரியாக உணர்பவர்கள் இதை அறிவர். இல்லையென்று சொல்வது மட்டும் நாஸ்திகமன்று. ஆனால் மனப்பூர்வமாக உண்மைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு வலியுறுத்துவதே நாஸ்திகம். மதத்தின் ஆதாவில் நின்று மார்தட்டிப் பேசும் வைதீகப் பிரசாரகர்களுடைய தூற்றுதலைமட்டும் கேட்டு ஒரு தலைப்பட்சமாகக் கண்டிக்கவேண்டாம். வைதீகப் பிரசாரகர்களை ஒரு பொது மேடைக்கு வாதம் புரியுமாறு அழைத்தால் அவர்களுடைய தைரியம் பலவீனமடைகிறது. நாஸ்திகத்துக்குச் செல்வாக்கில்லையென்று கருதுவது வழக்கம். இந்த வழக்கத்தைக் கொண்டும் அதைப்பற்றித் தப்பபிப்பிராயங்கொள்ளவேண்டாம். 'கடவுள் இல்லை' என்று நாஸ்திகர் கூறவில்லை; ஆனால் "கடவுள் என்பதற்கு நீங்கள் என்ன அர்த்தங்கொள்கிறீர்கள் என எனக்குத் தெரியவில்லை; கடவுளைப்பற்றி எனக்கு ஒன்றுந் தெரியவில்லை. கடவுள் என்றசொல் எனக்கு எந்தவிதமான பொருளையும் தெளிவுபடுத்தவில்லை. என் புத்திக்கு எட்டாதவொன்றையும், அது உண்டு என்று சொல்பவராலும் விவரித்துக்கூற முடியாதவொன்றையும், இல்லை என்று சொல்ல முடியாதாகையால், நான் கடவுளில்லை என்று மறுக்கவில்லை. எனக்குப் புலனாகிற இந்த வாழ்க்கைக்குப் புறம்பாகவுள்ள ஒரு ஜீவிதமே கடவுள் என்று சொன்னால் அத்தகைய கடவுள் இல்லை என்றும், இருக்க முடியாதென்றும் நான் வலியுறுத்துகிறேன்" என்று நாஸ்திகன் கூறுகிறான். வேதாந்தியுங்கூட இந்த பிரபஞ்சமே கடவுள் என்றும், இதைத்தவிர வேறு இல்லை என்றும் சொல்லுகிறான்.

சடப் பொருள்களாலாயதென்று சொல்லப்படுகிற இந்தப் பிரபஞ்சத்துக்குப் புறம்பாக இதற்கு சம்பந்தமில்லாத தனித்த ஒரு பொருளிருக்கின்றதென்றும், அதுவே கடவுளென்றும், அது புருடத்துவம், சர்வ வியாபகம், சர்வசக்தி, நித்திய வாழ்வு, எல்லையற்றதன்மை, மாறாத இயல்பு, பரிபூரண நற்குணம் முதலிய விசேஷ குணங்கள் உடையதென்றும் ஆஸ்திகர் வலியுறுத்துகின்றனர். ஆஸ்திகரின் இக்கூற்று முன்னுக்குப்பின் முரணாகவும், தினசரி அனுபவத்துக்கு மாறுபாடாகவுமிருப்பதால், அத்தகைய பொருள் எதுவுமில்லை' என்று நாஸ்திகன் பதிலிறுக்கின்றான்.

ஆக்கலும், அழித்தலும்.

கடவுள் படைக்கின்றார் என்று சொன்னால், படைக்கிறது என்பதே நடவாத காரியம் என நாஸ்திகன் மறுக்கின்றான். படைத்தல் என்பதும் அழித்தல் என்பதும் ஒரு தோற்றத்தைக் குறித்து மட்டும் பொருந்துமேயன்றி வேறல்ல. ஒரு காரணமாக இருக்கும் நிலைமையைத்தான் அழிக்கலாமே ஒழிய பொருளை அழிக்கவில்லை. ஆக்கலும், அழித்தலும், ஒரு தோற்றத்திலிருந்து மற்றொரு தோற்றமாக மாறுவதைக் குறிக்கின்றனவேயன்றி, ஒருபொருள் உண்டாவதையோ அழிவதையோ குறிக்கவில்லை. உலகத்தைக் கடவுள் சிருஷ்டித்தார் என்று சொன்னால், அதை அவர் தம்மிடமிருந்து உண்டு பண்ணியிருக்கவேண்டும்; அல்லது ஒன்றுமில்லாததிலிருந்து அதை உற்பத்தி செய்திருக்கவேண்டும். ஆனால், கடவுளிடமிருந்து உலகம் உண்டானதாக ஆஸ்திகர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; அவ்வாறு ஒப்புக்கொண்டால் கடவுளே உலகம் என்றாய்விடும்; பொருள்களுக்குள் வேறுபாடில்லை; எனவே உற்பத்திக்கிடமில்லை. ஒன்றுமில்லாததிலிருந்து உலகத்தைக் கடவுள் சிருஷ்டித்தார் என்றால் அதுவும் பொருந்தாது. என்றும் அழியாத கடவுள் எல்லையற்றவராயிருப்பதால், உலகம் உண்டாவதற்கு முன் அது தற்பொழுது அடைத்துக்கொண்டிருக்கும் இடம் அதற்கு முன் காலியாக இருந்தது என்று கருதுவதற்கில்லையல்லவா? உலகம் எப்பொழுது தோன்றியதென்றும் ஆஸ்திகரால் சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் அது சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் உலகம் இல்லாத காலமும் ஒன்று இருந்திருக்கவேண்டும்; உலகத்திற்கு ஒரு முடிவு உண்டென்றால் அது அழிந்த பிறகும் ஒரு காலம் உண்டல்லவா? உலகம் தோன்றுவதற்குமுன் ஏதாவதொன்று இருந்திருக்கவேண்டும்; ஏனென்றால் ஒன்றுமில்லாததிலிருந்து எதுவும் உண்டாக முடியாது. இந்த வஸ்து எல்லையுள்ளதாகவோ, எல்லையற்றதாகவோ இருக்கவேண்டும்; எல்லையுள்ளதானால் கடவுளல்ல; எல்லையற்றதானால் சிருஷ்டி என்பது நடவாத காரியம்; எல்லையற்ற வஸ்துவுடன் இன்னொன்றைச் சேர்க்க முடியாதல்லவா?

காத்தல்.

பிரபஞ்ச சிருஷ்டியை விட்டு உலகப் பராமரிப்புக்கு வருவோம். இங்கும் ஆஸ்திகத்துக்கு அதிக இடையூறுகள் இல்லாமற் போகவில்லை. தீமை, துன்பம், வறுமை, குற்றம் முதலியன ஆஸ்திகரை எதிர்க்கின்றன. சர்வ நன்மையும், சர்வ அறிவும், சர்வ சக்தியும் உடைய கடவுளின் பராமரிப்பில் இவை எவ்வாறு இருக்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது. ஒன்றில், தீமையும் கடவுளாலேயே படைக்கப்பட்டிருக்கவேண்டும்; அல்லது அது சுயேச்சையாக இருந்துவரவேண்டும். கடவுள் தீமையை உண்டுபண்ணியிருக்கமுடியாது. சர்வநன்மைக்குச் சேர்ந்தவரல்லவா கடவுள்? கடவுளுக்கு எதிரிடையாக அது இருந்துவரவும் முடியாது; ஏன்? அப்படியானால் கடவுள் எவ்வாறு சர்வ வல்லவராக இருக்கமுடியும்? தீமைக்கும் ஒரு உற்பத்திகாலம் ஏற்பட்டிருக்கவேண்டும்; இன்றேல் கடவுளைப்போல அதுவும் என்றுமழியாததாக இருக்கவேண்டும். கடவுள் ஒருவர்தானே என்று மழியாதவர்? கடவுளிடத்திலிருந்து உற்பத்தியாகாவிட்டால் கடவுளுக்குப் புறம்பாக அது தோன்றியிருக்கவேண்டும். எல்லையற்ற கடவுளுக்குப் புறம்பாக ஒன்றுகிடையாது; ஆகையால் தீமை கடவுளுக்குப் புறம்பாகவும் முளைத்திருக்க முடியாது.

நாஸ்திகர் கொள்கை இதுவல்ல. தீமைகள் ஒவ்வொன்றும் காரணத்தால் ஏற்படும் காரியமே. கடவுளோ சைத்தானோ இதன் காரணமல்ல. உலக வாழ்க்கை முறைகளை நன்குணர்ந்து நடப்பதால் இத் தீமைகளை ஒழிக்க முடியுமென்றும் இவை மீண்டும் தோன்றாதவாறு தடுக்க முடியுமென்றும் நாஸ்திகன் உறுதிகூறுகின்றான்.

நரகபயம் அவசியமா?

குற்றங்களைத் தடுக்கக் கடவுள் நம்பிக்கை அவசியமெனச் சிலர் கூறுகிறார்கள். எதிர்காலத்தில் துன்பம் நேரிடுமென்ற பயம் நாஸ்திகனுக்கு இல்லாமற் போய்விடுமாதலால் அவன் கொலை, களவு, பொய் முதலிய குற்றங்களைச் செய்யலாம் என்பது அவர்களது வாதம். ஆஸ்திகர்கள் எப்பொழுதாவது திருடுகிறார்களா? பொய் சொல்கிறார்களா? ஆம் என்றால் கடவுள் நம்பிக்கையும், குற்றஞ் செய்வதைத் தண்டிக்கும் கடவுள் சக்தியும் இக் குற்றங்களைத் தடுக்கப் போதுமானவையல்ல என்று தானே ஆகிறது? உலகிலுள்ள சகல மனிதர்களும் பற்பல வழிகளில் இன்பத்தை அடைய முயல்கிறார்களென்பதையும், மூடர்களும் துர்ப்போதனைக்குட்பட்டவர்களும் சரியான வழியை விட்டுத் தப்பான வழிகளிற்சென்று குற்றங்களைச் செய்கிறார்களென்பதையும் இந்த ஆஸ்திகர்கள் கவனிப்பதில்லை. எனவே மனிதவாழ்க்கை இன்பகரமாக இருப்பதற்குரிய வழியை மனித சமூகத்துக்குப் போதிப்பதினால் குற்றங்களையும், பிழைகளையும் குறைக்க முடியுமென நாஸ்திகர்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு மனிதரும் ஒழுக்கமாக நடக்கவேண்டுமென நாஸ்திகர்கள் போதிக்கிறார்கள். மெல்ல மெ

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா

புரட்சி

ஈரோடு 1933-டிசம்பர்-மீ 10-உ

இராமநாதபுரம் ஜில்லா சு. ம. மகாநாடு.

காந்தி பகிஷ்காரம்.

இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு சென்ற வாரம் சிவகங்கையில் வெகு சிறப்பாய் நடந்தேறியிருக்கும் விபரம் மற்ற பக்கங்களில் காணலாம்.

அவற்றுள் மகாநாட்டுத்தலைவர் தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் "இயக்கக்கொள்கைக்குத்தக்க திட்டங்களை வகுத்துக்கொள்ளவில்லை" என்றும் "காரியத்திற் கடமைகளை உணரவில்லை, வேலை தொடங்கவில்லை" என்றும் கூறியிருப்பதைதையும்,

வேறு சிலர், காந்தியவர்கள் வரவை பகிஷ்காரம் செய்த தீர்மானத்தை தவறென்று கூறி கண்டித்திருப்பதையும்பற்றி சிறிது சமாதனம் கூறவேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

முதலாவது, தோழர் ராமநாதன் அவர்கள் கூறும் குறைக்குச் சமாதானம் என்னவென்றால் சுயமரியாதை இயக்கத்திற்கு கொள்கைகளும் திட்டங்களும் வகுக்க என்று ஈரோட்டில் சென்ற வருஷம் டிசம்பர் மாதத்தில் ஒரு பொதுக்கூட்டம்ஏற்பாடு செய்து, தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 250 தோழர்கள் வரை விஜயம் செய்து, இரண்டு நாள் தாராள விவகாரத்திற்குப் பிறகு இயக்கத்திற்கென்று ஒரு லக்ஷியமும், ஒரு திட்டமும் வகுக்கபபட்டிருப்பதை யாவரும் அறிவார்கள். அந்த லக்ஷியமும் திட்டமும் இதுவரை, சுமார் 120 சங்கங்களால ஒப்புக்கொள்ளப்பட்டும், சுமார் 10, 20 மகாநாடுகளில் நன்றாய் விவாதிக்கப்பட்டும் 2, 3 மகாநாடுகளில் தோழர் ராமநாதன் அவர்களாலேயே எதிர்த்து ஆக்ஷேபணைகள் கூறி மறுக்கபபட்டு அம்மறுப்புகளுக்கு ஆங்காங்கு அவ்வப்போது சமாதானம் கூறப்பட்டு அநேகமாய் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு இருப்பதும் தோழர் ராமநாதன் அவர்களுக்கும் மற்றும் அம்மகாநாடுகளுக்குச் சென்ற அநேகருக்கும் தெரியும். இந்நிலையில் சுயமரியாதை இயக்கத்திற்கு திட்டங்கள் வகுத்துக் கொள்ளவில்லை என்பது நமக்குப் புரியவில்லை.

இது ஒருபுறமிருக்க, தோழர் ராமநாதன் அவர்கள் சுமார் 3, 4 சு. ம. மகாநாடுகளில்பொதுஜனங்களுக்குத் தனது அபிப்பிராயத்தையும் கொள்கைகளையும் திட்டங்களையும் எடுத்துச் சொல்லத்தக்க வசதி உள்ள தலைமையை வகித்தும் இருக்கிறார். அவைகளில் எதிலாவதொன்றிலாவது "அக்குறையை" நீக்கத்தக்க திட்டங்களை வகுத்துக் குறிப்பிட்டதாகவும் தெரியவில்லை. ஆனால் தான் விஜயமாகும் மகாநாடுகள் தோறும் சிலவற்றுள் "லக்ஷியத்தையும் திட்டத்தையும் எதிர்ப்பதாகவும்" சிலவற்றுள் "லக்ஷியம் அர்த்தமற்றது. திட்டம் பயனற்றது" என்று சொல்லுவதாகவும் சிலவற்றுள் "லக்ஷியம் ஒப்புக்கொள்ளக்கூடியது, திட்டம் பயனற்றது" என்றுசொல்லுவதாகவும் தான் தெரியவருகின்றது. ஒரு இயக்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும்பற்றி மாறு அபிப்பிராயப்படவும் மறுக்கவும் யாருக்கும் உரிமையுண்டு. ஆனால் அவ்வியக்கத்தில் இருக்கின்றவர்களுக்கு அவ்வுரிமையுடன் கூடவே அதற்கு பதிலாக, வேறு எதையாவது தான் கருதி இருப்பதை காட்டவேண்டிய அவசியமும் இருக்கவேண்டியது நியாயமாகும்.

மற்றபடி தனிப்பட்ட முறையில, இருக்கிறதா? இல்லையா? என்பதை விவகாரத்துக்கு இடமானதாகக் கொள்வதானாலும், மகாநாடுகளுக்குத் தலைமை வகித்து தலைமைப்பேருரை நிகழ்த்துங்காலையில் குறைகள் கூறப்படும்போது அதற்குப் பரிகாரமும் கூறவேண்டியது யாரும் எதிர்பார்க்கத்தக்க தர்மமாகும்.

நிற்க, இம்மகாநாட்டுத் தலைவரால் மற்றொரு குற்றமும் கூறப்பட்டிருக்கிறது: அதாவது,

"வேலை துடங்கவில்லை என்பதை நாம் அனைவரும் வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டும். இனியாவது நமது கடமைகளை உணர்ந்து அவைகளைச் செலுத்த வேண்டிய முறையில் காரியாம்சையில் ஈடுபட ஒருப்படுவோமென்கின்ற நம்பிக்கையில் இம்மகாநாட்டின் நடைமுறைகளை அமைப்போமாக" என்று கூறி இருக்கிறார். இதையும் அர்த்தம்செய்து கொள்ளத்தக்க சக்தி நமக்கு இல்லை.

என்ன வேலை தொடங்கவில்லை? நமது கடமை என்ன? காரியாம்சையில் ஈடுபடுவது என்பது எப்படி? ஆகிய விஷயங்களை அறிய ஆசைப்பட எவருக்கும் உரிமையுண்டு. ஆதலால் அவைகளை அத்தலைமை உரையிலாவது, முடிவுரையிலாவது கூறப்பட்டிருக்குமானால் மிகவும் அழகாயிருந்திருக்கும் என்பதோடு சமாதானம் சொல்லவேண்டிய அவசியமும் நேர்ந்திருக்காது.

மற்றபடி அபிப்பிராய பேதங்கள் இயற்கையானதும் அவசியமானதுமாகையால் மற்றும் சில விஷயங்களைப் பற்றி இப்பொழுது பேச அவசியமில்லை என்ற அளவில் அடுத்த விஷயத்தைக் கவனிப்போம்.

காந்தி பகிஷ்காரம்

தோழர் காந்தி அவர்களது தமிழ் நாட்டு விஜயத்தைப்பொது மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் அவருக்குப் பண முடிப்பு சமர்ப்பிக்க யாரும் பணம் கொடுக்கக்கூடாதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பது உண்மையேயாகும். இதிலென்ன தப்பிதம் இருக்கிறதென்பது நமக்குவிளங்கவில்லை.

வாலிப உலகில் காந்தியார் சுமார் 5, 6 வருஷகாலமாகவே பகிஷ்கரிக்கப்பட்டு வருகிறார் என்பது யாவரும் அறிந்ததே. கராச்சியிலும், பம்பாயிலும் மற்றும் இரண்டொரு இடங்களிலும் காந்தியார் வரவுக்குக் கருப்புக்கொடி பிடித்ததும் கையில் கருப்பு புஷ்பம் கொடுத்தும் "காந்திஜி திரும்பிப்போ" என்று மக்கள் கூவியதும் அனைவருக்குத் தெரியும். அப்படிக் கூறியவர்கள் வெறும் சோத்துராமன்கள் அல்ல. பின்னை யாரென்றால் தூக்கு மேடையில் ஒருகாலும் காந்தி பகிஷ்காரத்தில் ஒரு காலும் வைத்துக்கொண்டு மனித சமூக சமதர்ம இன்ப வாழ்வுக்கு உயிரைத் தத்தம் செய்து வைத்திருந்த வாலிபர்களேயாவார்கள்.

ஆதலால் காந்தி பகிஷ்காரம் என்பது ஒரு ஒப்பற்ற மனித சமூக சுயமரியாதைத் தத்துவம் கொண்டதே ஒழிய, ஓட்டுப் பெறவோ சோம்பேறிக் கூட்டங்களுக்கு அன்னசத்திரம்வைப்பது போன்ற சோம்பேறி மடங்கட்டவோ ஏற்பட்ட வேலையல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். "சுயமரியாதைக்காரர் பகிஷ்காரம் வெற்றி பெறுமா" என்பது வேறு சங்கதி.

"பெரியபாளையத்து அம்மன்" உற்சவத்துக்கு, சேலையையும் வேஷ்டியையும் அவிழ்த்துப் போட்டு ஆடுவதற்கும், அதைப் பார்ப்பதற்கும் அதற்குப் பணம் கொடுப்பதற்கும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் போகிறார்கள். அதைப் பகிஷ்கரிக்கச் செய்த பிரசாரங்களில் எட்டில் ஒரு பங்குகூட இன்னமும் வெற்றிபெறவில்லை. ஆதலால் வெற்றி தோல்வி எனபவைகளிலேயே காரியங்களின் யோக்கியதாம்சங்கள் இருக்கின்றன என்று கருதினால் விஷயங்களின் தன்மையில் ஏமாந்து போகநேரிடும்.

"காந்தியாரைப் பகிஷ்கரிப்பது அறிவீனம்" என்று சிலபத்திரிகைகள் எழுதுகின்றன. ஆனால் இப்பத்திரிகைகள் "காந்தியாரைப் பகிஷ்கரிப்பது பெரிய பாவம்" என்று சொல்லும் மேதாவிகளைவிட ஒருபடி மேலானவைகளென்றே சொல்லலாம்.

காந்தியார் எதற்காக வருகிறார்? அவருக்குக் கொடுக்கும் பணம் எதற்குப் பயன்படும்? அவரை யார் கூட்டிவந்து காட்டி பணம் பெருகிறார்கள்? காந்தியார் கொள்கை என்ன? என்பவைகளைப்பற்றி இவர்கள் யோசித்து இருந்தால் உண்மைத் தன்மையில இப்படிப் பேசியும் எழுதியும் இருக்கமாட்டார்கள்.

காந்தியார் தீண்டாமைவிலக்குப் பிரசாரம் செய்ய வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். தீண்டாமை எதிலிருந்து உற்பத்தியாயிற்று? இந்துமதத்தில் தீண்டாமைக்கு ஆதாரம் இருக்கின்றதோ இல்லையோ என்பது ஒரு பிரச்சினையேயானாலும் இந்துமத சம்பிரதாயப்படிக்கு என்றுதானே இன்று தீண்டாமை இருந்துவருகின்றது.

தோழர் காந்தியவர்கள் "தீண்டாமைப் பேயை" ஓட்டவேண்டுமென்பது "மதத்தைப் புனிதமாக்கவே" ஒழிய தீண்டாதார்களைப்பற்றிய கவலையால் அல்ல எனபது யாவரும் உணரக்கூடியதோயாகும். மதத்தைப் புனிதமாக்குவது எனபது எதற்காக என்றால் இந்து மதம் குற்றமுடையதாகி அது பலராலும் குற்றம் சொல்லும் நிலைமைக்கு வந்து சீக்கிரததில் அழிந்துபோகத்தக்க நிலைமைக்கு வந்துவிட்டதாதலால் அக்குற்றங்களை களைந்து சீக்கிரம் அழிந்துபோகக்கூடுமான

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நிலைமையில் இருக்கும் இந்துமதத்
தைகாப்பாற்றவேண்டும் என்பத
ற்காக என்பது காந்தியவர்களு
டையவும் அவரைக் கூட்டிவந்து
வேடிக்கை காட்டும் பார்ப்பனர்
களுடையவும் அவ், வேடிக்கை
யில் வசூலாகும் பணங்களைக்கொ
ண்டு வயிறு வளர்க்கும் மத-தேச
பக்தர்களுடையாவும் கருத்
து என்றே வைத்துக்கொள்ள
லாம். இதை சுயமரியாதைக்கா
ரர்கள் அல்லது மனித சமூக
ஒற்றுமையிலும் பரஸ்பர அன்
பிலும் கவலையுள்ளவர்கள் அல்லது
இந்தியா ஒரு தேசமாகி இந்திய
மக்கள் ஒற்றுமையுடன் பரஸ்பர
அன்புடனும் சமாதானத்துடனு
ம்சகோதரத்துவத்துடனும் நம்பி
க்கையுடனும் வாழவேண்டும் என்
றுகருதுகின்ற உண்மை தேசபக்
தர்கள் அல்லது தேசியவாதிகள்
என்பவர்கள் ஒப்புக்கொள்ள முடி
யுமா என் கேட்கின்றோம்.

தீண்டாமை விலக்கு என்பது
ஒரு பொதுஜனதர்மம் அல்லவெ
ன்றும் அது இந்துக்களைமாத்திரம்
சேர்ந்த வேலையென்றும் தோழர்
காந்தியார் ஆயிரம் தடவை சொல்
லி இருக்கிறார். இதிலிருந்தே
தீண்டாமை விலக்கு என்பது
ஒரு மதப்பிரசாரம் என்பதாக
ஒரு சாதாரண மனிதனுக்கும்
விளங்கவில்லையா என்று கேட்
கின்றோம்.

காந்தியாரின் தீண்டாமை வில
க்குப் பிரசாரத்தினால் "இந்திய
தேசியத்திற்கே ஜாதிப்பாகுபாடா
னது இயற்கைவிரோதியாய் இரு
க்கின்றது" என்று தேசியவாதிக
ள் தேசபக்தர்கள், என்பவர்களால்
சொல்லப்படுகின்ற ஜாதிப்பாகு
பாடுமுறை அழிந்து விடுமா?

அல்லது "இந்திய சமுதாயமக்
களின் சுயமரியாதை வாழ்வுக்கே
விரோதமாய் இருக்கிறது" என்று
எல்லாப் பார்ப்பனரல்லாத மக்க
ளாலும் ஏகமனதாய் ஒப்புக்
கொள்ளப்படுகின்ற வருணாச்சிரம
தர்மமுறை தோழர் காந்தியார்
தீண்டாமை விலக்குப்பிரசாரத்
தால் ஒழிந்துவிடுமா என்று தேச
பக்தர் தேசியவாதிகள் பார்ப்பன
ரல்லாத சுயமரியாதையுடைய மக்
கள் என்று சொல்லிக்கொள்கின்
றவர்கள் ஆகிய எல்லோரையுமே
வணக்கத்துடன் கேட்கின்றோம்.

மனிதன் தனக்கு எழுதவும்
பேசவும் தெரிந்துவிட்ட
தாலேயே தன்னை பூர
ணமனிதன் என்று நினைத்துக்
கொள்ளலாம் என்பது ஒருநா
ளும் ஒப்புக்கொள்ளத் தக்கதா
காது. மனிதன் மதிக்கப்படவே
ண்டுமானால் அவனது எழுத்தும்
பேச்சும் பொருத்தமுடையதாவது
எதற்கு பயன்படுகிறது என்பதை
ப்பொருத்ததேயாகும். இன்றைய
தினம் காந்தியாருக்கு பாமரமக்க
ளிடம் உள்ள செல்வாக்கின் பய
னும் காந்தியைப்புகழ்ந்து கூறும்
ஒரு கிறுக்கபோன் தகடு (அது
யார் கூறியதாய் இருந்தாலும்)
க்கு கூட மதிப்பும் பக்தியும் இரு
ந்துவருவது யாவரும் அறிந்ததே
யாகும்.

காந்தியார் பல தடவைகளில்
ஒவ்வொரு ஜாதியாரையும் பார்
த்து "ஜாதிப்பாகுபாடுகள் அவசி
யம்" என்றும் அவனவன் தகப்
பன் செய்த தொழில் (அவனவன்
ஜாதித்தொழில்) அவனவன்
செய்யவேண்டும் என்றும் சொ
ல்லி வருவதும், இதை அனுசரி
த்துத் தனது ஆச்சிரமத்தில் இன்
றைய தினம்கூட தீண்டப்படாத
ஜாதியாருக்குத் தோல் பதனிடும்
வேலை செய்யவும், பழகவும் வே
ண்டிய ஏற்பாடுகள் செய்து கொ
டுத்து வருவதும் யாவரும்
அறிந்ததாகும்.

ஜாதிகள் அழியவேண்டும் என்
று நாளது வரை தோழர் காந்தி
யார் தன் வாயினால் ஒரு வா
த்தைகூட சொல்லவில்லை என்
றும் ஆனால் ஜாதிகள் இருக்க
வேண்டுமென்று பல தடவை
சொல்லி இருக்கிறார் என்றும்,
நாம் பந்தயங்கட்டிக் கூறத்தயா
ராயிருக்கிறோம். இதை மறுக்
கும் மனிதர் யாராயிருந்தாலும்
தயவு செய்து முன்வரட்டும்
என்று தலைவணங்கி அழைக்கின்
றோம். இதற்கு யோக்கிய
மில்லாதவர்கள் காந்தி பகிஷ்கா
ரம் பாவம் என்றும், அறிவீனம்
என்றும் சொல்லுவதில் பயன்
என்ன? என்பது நமக்கு விளங்க
வில்லை.

வருணாச்சிரம விஷயத்தில்தோ
ழர் காந்தியார் "பிராமணன், க்ஷத்
திரியன், வைசியன், சூத்திரன்
என்கின்ற நான்கு வகுப்பு இருக்க
வேண்டும்" என்றும், ஐந்தாவதா
னசண்டாளர் எனகின்ற வகுப்புக்
கூடாதென்றும் அச்சண்டாளர்
என்னும் வகுப்பை சூத்திரர் என்
னும் வகுப்புடன் சேர்க்கவேண்
டும் என்றும் சொல்லுகிறார்.
இதற்கு ஆதாரம் இரண்டொரு
மாதத்திற்கு முன் 'குடி அரசி'
லேயே எடுத்துக்காட்டியிருக்கி
றோம். அதாவது,

தீண்டாதவர்கள் கோயிலுக்
குப் போனால் அவர்கள் நிற்கவே
ண்டிய இடம் எது என்று கேட்
கப்பட்டகேள்விக்கும்தீண்டாமை
என்பது போய் விட்டால் தீண்
டாதவர்களாய் இருந்தவர்களு
க்கு இந்து மதத்தில் அவர்களு
டைய நிலைமை என்ன என்றும்
கேட்கப்பட்ட கேள்விக்கும்
தோழர் காந்தியவர்கள் அளித்த
பதில். "அவர்கள் (தீண்டப்படாத
வர்கள்) சூத்திரர்களுக்குச்சமமாக
அதாவது சூத்திரர்கள் இருக்க
வேண்டிய இடத்தில் இருக்க
வேண்டியவர்களாகப் பாவிக்கப்
படுவார்கள்" என்று சொல்லியி
ருக்கிறார்.

இவைகளுக்கெல்லாம் காந்தி
பகிஷ்காரத்தைக்கண்டு துள்ளிக்
குதிக்கின்றவர்கள் என்ன பதில்
சொல்லுகின்றார்கள் என்று கேட்
கின்றோம்.

பார்ப்பனர்களுக்கு இது சம
யம் ஒரு காந்தியார் வேண்டியது
மிக அவசியமாகும். ஏனெனில்
சுயமரியாதை உணர்ச்சியும் சம
தர்ம கிளர்ச்சியும் ஏற்படுகிற
காலங்களில் எல்லாம் இப்படிப்
பட்ட நிலைமை ஏற்பட்டிருப்ப
தாக சரித்திரம் இருக்கின்றது.
அச்சரித்திரங்களில் பலவந்
றை சுயமரியாதைக்காரர்கள்முழு
ப்பொய் என்றாலும் அவை பார்ப்
பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை
என்றும் நிலைநிறுத்திக்கொள்ள
நடந்து கொள்ளவேண்
டியதற்குவழி காட்டிகள் என்
பது ஒரு முடிவு. ஆதலால்
பார்ப்பனர்களுக்கும் சோம்பேறி
களுக்கும் ஆதரவளிக்கும் காந்தி
யாருக்கும் பிரசாரத்துக்கும் தாழ்
த்தப்பட்ட மக்களும் பின் தள்ள
ப்பட்ட மக்களும் ஏன் ஆதரவ
ளிக்கவேண்டும் என்பது நமக்கு
விளங்கவில்லை.

பண முடிப்பு.

காந்தியார் பேரால் வசூலிக்கப்
படும் பணம் நாளைக்கு என்ன கதி
அடையப்போகிறது என்பதைப்
பற்றி சிறிது சிந்திக்க வேண்டுகி
றோம்.

கதருக்கு வசூல் செய்த பணம்
கதர் இலாக்காவுக்கு அதாவது
நிர்வாகத்தில் 100க்கு 90 பேர்
கள் பார்ப்பனர்களாயிருந்து மா
தம் 250, 200, 150, 100, 50
என்கின்ற கணக்கில் சம்பளமாக
கொள்ளை அடித்து வயிறு வளர்
ப்பதற்கும் பார்ப்பனரல்லாதவர்
களையும் அவர்களது இயக்கத்தை
யும் முயற்சியையும் வைது திரிவ
தற்கும்ஒருசோம்பேறிக் கூட்டம்
அனுபவிக்கப்பயன் படுத்தப்பட்
டது-படுகிறது என்பதை யாரே
மறுக்கவல்லார்? இன்றும் ஆங்கா
ங்கு காந்தி பண முடிப்பு வசூல்
செய்வதெல்லாம் பார்ப்பனரல்
லாதாரிடமிருந்தும் வசூல்நிர்வா
கம் செய்வதெல்லாம் பெரிதும்
பார்ப்பனருமாயிருந்தும்
வருவது யாவரும் அறிந்ததேயா
கும். மொத்த வசூல் தொகை
கள் பார்ப்பனர்களிடம் ஒப்புவிக்
கப்பட்டு அவற்றில் ஒரு சிறிது
வேறு வழியில் பிழைக்க வகை
யற்றவர்களும் தங்கள் சுயமரியா
தையை விற்றுப் பிழைத்துத்தீர
வேண்டியவர்களுமான இரண்
டொரு "கனவான்களுக்கு" அதா
வது தீண்டாதார் வகுப்பைச்
சேர்ந்த இரண்டொருவருக்கும்,
பார்ப்பனரல்லாத வகுப்பைச்
சேர்ந்த இரண்டொருவருக்கும்
கொடுத்து விட்டு மீதி அவ்வள
வும் பார்ப்பனர்கள் மூலமேபெரி
தும் பார்ப்பனர்களுக்கே பயன்
படப் போகின்றது. தீண்டப்
படாதவர்களுக்கு ஒரு நாளைக்கு
தலைக்கு எண்ணெயும், குளிக்கச்
சோப்பும் இடுப்புக்கு (விற்காமல்
கட்டுக்கடையாயிருக்கும்) இத்து
ப்போன கதர்த்துணியும் கொடு
த்து அவர்கள் குடியிருக்கும் வீதி
யை ஒருநாளைக்கு கூட்டியும் விட்
டால் தீண்டப்படாதவர்களுடை
யகஷ்டம் நீங்கிஅவர்கள் வாழ்ந்து
விட முடியுமா என்பதை யோசித்
துப்பாருங்கள். விற்காத கதர்
களை விற்க இது ஒரு தந்திரம்.
காந்தியாரின் தீண்டாமை
விலக்குக் கொள்கையில்
இருக்கின்ற புரட்டுகளையும் கொடு
மைகளையும்விட தீண்டாமை வில
க்குக்காக செய்யப்படும் வேலைத்
திட்டங்களில்அநேகபுரட்டுகளும்,
பித்தலாட்டங்களும், மோசங்
களும் இருப்பதோடு அக்கூட்டத்
தார்கள் மற்றஜனங்களை எவ்வளவு
முட்டாள்களாகக் கருதியிருக்கி
றார்கள் என்பதும் சிறிது யோசித்
தால் விளங்காமல் போகக்
கூடிய சங்கதி அல்ல.

நிற்க, "தோழர் காந்தியார் வர
வை வைதீகர்களும் கண்டிக்கிறார்
கள், சுயமரியாதைக்காரர்களும்
கண்டிக்கிறார்கள். ஆதலால்இரு
வர்கள் செய்கையும் அக்கிரமம்
என்றும், காந்தியார் நடுநிலைமையு
டன் இருக்கிறார் என்பதுவிளங்கு
கின்றதென்றும்" சிலர்தர்மநியாய
ம்பேசுகிறார்கள். இது உண்மைய
றியச் சகதியற்றவர்கள் வாதம்
என்றே சொல்லுவோம். வைதீ
கர்கள் காந்தியாரை எதிர்ப்பது
மாட்டுக் கடை தரகு வியாபாரம்
போல் ஒருபெரும் சூட்சியோயா
கும். இது தோழர் காந்தியும்
வைதீகர்களும் நம்மை ஏமாற்ற
ஏற்கனவே பேசிவைத்துக்கொ
ண்டு செய்யப்படும் தந்திரமாய்
இருந்தாலும் இருக்கலாம். வியா
பாரிகள் இப்படித்தான் செய்வா
ர்கள். அதாவது ஒரு கடையில்
ஒரு சாமானுக்கு ஒரு குமாஸ்

தா ஒரு விலை சொன்னால் அந்த விலையைப்பற்றி வாங்குகிறவனுக்குச் சிறிதும் சந்தேகம் தோன்றாமல் இருப்பதற்காக பக்கத்திலிருக்கும் முதலாளியானவன் குமாஸ்தாவைக் கண்டபடி வைவது போல் வார்த்தைகள் உபயோகப்படுத்தி "அந்தச் சரக்கைக் கொடுக்கமுடியாது. அதன்விலை குமாஸ்தாவுக்குத் தெரியாது. அதற்கு அவன் பொருப்பில்லாதவன்" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பான். இதைக் கேட்ட வாங்க வந்தவன் "இந்த விலைக்காவது கொடுத்தால் போதும். குமாஸ்தா ரொம்பவும் நல்லவன். நமக்கு வேண்டியவன்" என்று கருதி விலையைப்பற்றியும் சரக்கைப்பற்றியும் சிறிதும் யோசிக்காமல் சொன்னபடி கேட்டுவிடுவான். இந்தத் தந்திரமே இன்று தீண்டாமை விலக்கிலும், கோவில் நுழைவிலும், தீண்டாமை விலகியபின் தீண்டாதவர்கள் நிலை என்ன என்பதிலும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இதை அறியாத மக்களும், சுயநலமிகளும் நம்மைக் குறை கூறுகிறார்கள். நமக்கு இதைப்பற்றிச் சிறிதும் கவலை இல்லை ஆனால் காந்தியார் விஜயமானது மக்களுடைய சுயமரியாதைக்கு விரோதமென்றும், அவருக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொருகாசும், பிற்பட்ட மக்களுக்கு, ஏழை மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொடுமையையும் இழிவையும் உண்டாக்கத் தக்கதென்றும் நாம் பலமாக அபிப்பிராயப்படுகின்றோம்.

தோழர் காந்தியாரைவிட வைதீகர்களும், சனாதனர்களும் எத்தனையோ பங்கு மேம்பட்டவர்கள் என்பது நமது அபிப்பிராயம். எப்படியெனில் வைதீகர்களுடைய அக்கிரமம், அயோக்கியத்தனங்கள் என்னப்பட்ட விஷமானது நன்றாகக் குருடனுக்கும் மூடனுக்கும் தெரியும்படியாக இருக்கின்றது.

காந்தியாரின் விஷம் மேலே சக்கரைப் பூச்சுப் பூசி எப்படிப்பட்ட "அறிவாளி"யும் எடுத்துச் சாப்பிடும்படியான மாதிரியில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால் வைதிகர்களது விஷத்தை யாரும் சாப்பிட்டுச் செத்துப் போகமாட்டார்கள் என்பதோடு அவ் விஷங்கள் வைதீகர்களையே கொல்லுவதற்குத்தான் பயன்படும் என்றும் சொல்லலாம். ஆனால் காந்தியாரின் விஷம் எல்லோரையும் அருந்தச் செய்து எல்லோரையும் கொல்லத்தக்க மாதிரியில் பூச்சுப் பூசப்பட்டிருக்கிறது என்பதோடு காந்தியாரை மகாத்துமாவாக்கி பின் சந்ததிகளையும் கொல்லச்செய்யத் தக்கதாகும் என்று சொல்லலாம்.

ஆதலால் வைதீகப் பிரசாரத்தையும், சனாதனப் பிரசாரத்தையும் பகிஷ்கரிப்பதைவிட காந்தி பிரசாரத்தைப் பகிஷ்கரிக்கவேண்டியது அவசியமும் அவசரமுமான காரியமாகும்.

"தமிழ் அன்பர்" மகாநாடு.

சென்னையில் நடைபெற இருக்கும் தமிழ் அன்பர் மகாநாட்டைப்பற்றி இரண்டொரு சுயமரியாதை மகாநாடுகளிலும், பல சுயமரியாதை சங்கங்களிலும் அம்மகாநாடானது பார்ப்பனர்கள் தமிழர் மீது ஆட்சி செலுத்தவும் தமிழ்ப்பண்டிதர்களை அடிமை ஆக்கிக்கொள்ளவும் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களை அடக்கிவைக்கவும் பார்ப்பனர்களில் பலருக்கு உத்தியோகமும்வருவாயும் ஏற்படுத்தவும் செய்யப்படும் ஒரு சூழ்ச்சி என்பதோடு தமிழ் கல்வி என்பதையே தங்கள் இஷ்டப்படி மாணாக்கர்களுக்கு ஊட்டுவதற்கு ஏற்ற தந்திரம் என்றும் பேசி அதைபகிஷ்கரிக்கத்தீர்மானித்திருப்பது யாவரும் அறிந்திருக்கலாம். அந்தப்படியே ஒரு பலமான உணர்ச்சியும் தமிழ் மக்களுக்குள் இருந்து வருவதையும்பார்க்கலாம்.

ஆனால் இதை அறிந்த பார்ப்பனர்கள், கவர்னர் பிரபு தங்கள் மகாநாட்டை ஆசீர்வதித்திருப்பதாயும், யூனிவர்சிட்டியார் தங்களை ஒப்புக்கொண்டு தங்களுக்கு பணம் கொடுத்திருப்பதாகவும் பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் தங்களுடன் கலந்திருப்பதாகவும் பிறர் நம்பும்படிஎவ்வளவோ தந்திரங்கள் செய்து வருகிறார்கள். பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு பயந்த சிலர் தங்கள் பெயரைக்கொடுத்திருப்பதுடன்,சில பத்திரிகைகளும் அந்த தந்திரங்களுக்கு உதவி செய்து வருகின்றன.

இது நிற்க, அம்மகாநாட்டை பகிஷ்கரிக்கவேண்டுமென்ற தீர்மானம் ஒருபுறமிருக்க, அம்மகாநாட்டில் பிரேரேபிக்க என்று சில தீர்மானங்கள் அனுப்பப்பட்டிருப்பதாய்த் தெரியவருகின்றது. இது அம்மகாநாட்டுக்குச் சென்று அங்கு நமது தீர்மானங்களை செய்ய முயற்சித்துப் பார்ப்பதால் அம்மகாநாட்டை நாம் பகிஷ்கரித்தது சரி என்று மக்களுக்கு எடுத்துக்காட்ட செய்த காரியமாயிருக்கலாம்.

இருந்தாலும் அத் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும், ஏற்றுக்கொண்டாலும் நிறைவேற்றப்படத்தக்க ஆதரவு கிடைக்காது என்பதையும்இப்போதே நாம் 'ஜோசியம்' சொல்லுவோம்.

ஏனென்றால் அம் மகாநாட்டில் பார்ப்பன சூட்சியே மூலையாய் இருப்பதோடு பணக்காரர்கள் ஆதிக்கமும், பார்ப்பனீயப் பணக்கார அரசாங்க ஆதிக்கமும் அதற்கு அடிமைப்பட்டு உதவியாய் இருப்பதால் சுலபத்தில் நாம் வெற்றிபெற்றுவிட முடியாது.

ஆனால் பார்ப்பனசூட்சியையும் பணக்கார ஆணவத்தையும், இவை இரண்டையும் அஸ்திவாரமாய்க் கொண்ட ஆட்சியையும் ஒழிக்க வேண்டுமென்று மக்கள் பலரும் ஒருமனதாய் நினைப்பதற்கு இதுபோன்ற மகாநாடுகளின் நடவடிக்கைகள் அனுகூலமாய் இருக்குமென்பதில் ஐயமில்லை.

இதிலிருந்து ஒரு விஷயம் தெரிந்துகொள்ள வேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. பார்ப்பனர்களின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இருந்தாவது இனி பண்டிதர்கள் என்பவர்களுக்கும் பார்ப்பனரல்லாத ஏழை உபாத்தியாயர்கள் என்பவர்களுக்கும் புத்திவருமா? என்பதுதான். அப்படி அவர்களுக்குப் புத்தி வந்ததற்கு அறிகுறி என்னவென்றால் அவர்கள் சமதர்ம இயக்கத்தில் சேரவேண்டியதுதான். சமதர்மப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் எழுதிப் பரப்பவேண்டியதுதான். அதை விட்டுவிட்டு இராமாயணத்திற்குத் தத்துவார்த்தம் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

காந்தி பகிஷ்காரம்.

சென்னை சுயமரியாதை சங்க சென்ட்ரல் லீக்காரியதரிசி என். வி. லிங்கம். அறிவிக்கிறார்:- 12.12 33லிருந்துசென்னையில் முக்கிய இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். 19-ந்தேதி தோழர்கள், ஜீவானந்தர், பொன்னம்பலனார், நடராஜன் முதலிய தோழர்கள்சென்னைக்குவிஜயமாகிறார்கள்.

பகிஷ்கார விளம்பர நோட்டீஸ்.

காந்தி பகிஷ்காரத்துக்கும், தமிழன்பர் மகாநாட்டுப் பகிஷ்காரத்துக்கும் வால்போஸ்டர்வேண்டியவர்கள் 5-க்கு அரையணாவீதம் தபால் சட்டணம் அனுப்பினால் அனுப்பிக் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் உள்ள இடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏஜண்ட் இல்லாத சங்கங்களுக்கும் 5-விதம் தபாலில் அனுப்பியிருக்கிறது.

பெற்றுக்கொண்டவர்கள் முக்கியமான இடத்தில் ஒட்டிவைக்க வேண்டுமாய்க் கோருகிறோம்.

வேண்டுகோள்.

"புரட்சி"யில்பிரசுரிக்க செய்திகள் ஏராளமாய் வந்து குவிகின்றன. முக்கிய விஷயங்களுக்கே இடம் போதாததால் அவைகள் பிரசுரிக்க முடியாமல் தங்கிவிடுகின்றன

ஆதலால் செய்திகள் அனாவசியமானவைகளாக இல்லாமலும், ஒரு கலத்தில் இரண்டு அல்லது மூன்று அங்குலத்துக்கு மேல் போகாதவைகளாகவும் இருந்தால் மாத்திரம் கவனிக்கப்படும் என்றும் அதற்காக நிருப நேயர்கள் மன்னிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்

அடுத்த வாரம்.

சிவகங்கையில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டின வரவேற்பு கழகத்தலைவர் பிரசங்கமும், வாலிபர் மகாநாட்டின் வரவேற்புக் கழகத தலைவர் பிரசங்கமும் அடுத்தவாரம்வெளிவரும்.

(ப-ர்)

ஆண்டு விழா.

திருப்பூர் முனிசிபல் உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் முதல் ஆண்டு விழா 10-12-33ந்தேதி ஞாயிற்றுக்கிழமை யூனிவர்சல் எலெக்டிரிக்தியேட்டரில் நடைபெறும். சென்னை தோழர் நவசக்தி ஆசிரியர் திரு வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தலைமை வகிப்பார். அதுசமயம் பல அன்பர்கள் பேசுவார்கள் என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

ரோஜா முத்தையா

தமிழன்பர் மகாநாட்டிற்கு நாடெங்கும் கண்டனம்.

தமிழர் மகாநாட்டிற்குப் போராதவு.

திருச்சி.

இச் சங்கத்தின் அவசரக் கூட்டம் ஒன்று திருச்சினுப்பள்ளி வரகனேரி 'திருவள்ளுவர் நிலைய'த்தில் 30-11-33 மாலை 5-30-க்கு கூடியது. சங்க அங்கத்தினர்கள் பலர் வந்திருந்தனர். தோழர் ஆர். நாகராஜன் பி. ஏ. அவர்கள் தலைமை வகித்தார்கள். விஷயங்கள் விவாதிக்கப் பெற்று கீழ் கண்ட முடிவுரைகள் நிறைவேறின.

1. சென்னையிற் கூடப்போகின்ற தமிழ் அன்பர் மகாநாட்டிற்கும், தமிழ் அன்பர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. என்பதை இச் சங்கம் பொதுஜனங்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறது.

(2) சென்னை மகாநாடு தமிழுக்காக உழைத்து வருகிற தமிழ்ப் பெரியார்களைப் புறக்கணித்து இருப்பதினாலும், புத்தக வியாபார வருமான பிழைப்பைக் கருதி நடைபெறுவதாகத் தெரிய வருவதினாலும், தமிழிக்கு உரியவரல்லாதவர்கள் பெரும்பான்மையாகக் கூடி நடத்துவதினாலும் தமிழர்களும், தமிழன்பர்களும் அதைப் பகிஷ்கரிப்பதுடன், எவ்வித உதவியையும் செய்யவேண்டாமென இச் சங்கம் தமிழ் மக்களைக்கேட்டுக்கொள்ளுகிறது.

(3) ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், திவான் பஹதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள் தோழர் திரு. வி. கலியாணசுந்திர முதலியார் அவர்கள், தோழர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் ஆகிய நால்வர்களும் சென்னை தமிழன்பர் மகாநாட்டிலிருந்து உடனே விலகவேண்டும் என இச் சங்கம் வேண்டிக் கொள்ளுகிறது.

(4) சென்னைத் தமிழன்பர்கள் மகாநாட்டை பகிஷ்கரிக்கும் வேலையைத் தொடங்கவுட, உண்மைத்தமிழன்பர் மகாநாட்டைக் கூட்டவும் உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமாய் கரந்தைத் தமிழ் சங்கத் தலைவர் தோழர் டி. வி. உமாமகேசுவரம பிள்ளை அவர்களை இச் சங்கம வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

(5) இத் தீர்மானங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கும், பத்திரிகைகளுக்கும், அனுப்புவதற்கும் பகிஷ்கார வேலைகளை தொடர்ந்து நடத்துவதற்கும் இச் சங்கத்தின் கூட்டுக் காரியதரிசிகளாகிய தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம், தோழர் தி. பொ. மாணிக்க வாசகம் பி. ஏ. ஆகிய இருவர்களுக்கும் இக் கூட்டம் அதிகாரம் கொடுக்கிறது.

திருச்செங்கோடு உண்மைநாடுவோர் சங்கம்.

6-12-33ந்தேதி மாலை 5மணிக்கு சங்க அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் ஒன்று சங்க கட்டிடத்தில் கூடிற்று. கூட்டத்திற்கு தோழர் மு. விஸ்வநாதம் அவர்கள் தலைமை வகித்தார், தமிழ் மாகாணதமிழர் மகாநாடு என்னும் பொருள்பற்றி தோழர்கள் எஸ். கே. வரதராஜலு, டி. ஏ. கைலாசம் முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தோழர்கள் பேசும்போது தமிழன்பர் மகாநாட்டின் சூட்சியைப்பற்றியும் உண்மைத்தமிழர்களின் நோக்கத்தைஅறிவிக்க இம்மாத இறுதிவாரத்தில் அதே சென்னையில் கூடப்போகும் தமிழ் மாகாண தமிழர்மகாநாட்டைப்பற்றியும் நன்கு விளக்கி சொற்பொழிவு நிகழ்த்தினர். பிறகு தமிழன்பர் மகாநாட்டைக் கண்டித்தும் சென்னையில நடைபெறும் தமிழ்மாகாண தமிழர் மகாநாட்டை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேறியது எனக்காரியதரிசிஎழுதுகிறார்.

பொதுக்கூட்டம்.

பகிஷ்காரக்கண்டணம்.

வில்லிவாக்கம் சமதர்மசங்கத்தின் ஆதரவில் 17-12-33 ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு கொண்ணூர் மேலையம்பதியில் ஓர் பொதுக்கூட்டம் கூடப்பெறும். அதுசமயம் தோழர் காந்தியின் சுற்றுப்பிரயாணத்தை பகிஷ்கரித்தும், தமிழன்பர் மகாநாட்டை ஆக்ஷேபித்தும் அது ஓர் பார்ப்பன சூழ்ச்சி மகாநாடு என்வன்மையாய்க்கண்டித்தும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்போவடன் உணர்ச்சியும் மிகக்கிளர்ச்சியும் உண்டாக்கக்கூடிய சொற்பொழிவுகள் பல நிகழ்பெறும் என காரியதரிசி எழுதுகிறார்.

தஞ்சாவூர் சுயமரியாதைச் சங்கம்.

6-12-33ல் கூடிய மேற்படி சங்கத்தின் விசேஷக்கூட்டத்தின் தீர்மானங்கள்.

தமிழ் அன்பர் மகாடென்பது பார்ப்பன ஆதிக்கத்தை பின்னும் வலுபடுத்த கூட்டப்படுகின்ற சூழ்ச்சிமகாநாடு ஆகையால் அதைக்கண்டிப்பதோடு தமிழர்களை அதில் கலந்துகொள்ளாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்றும், விரைவில் நடைபெறப போகும்தமிழ் மாகாண தமிழர் மகாநாட்டை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேறியது என காரியதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதை சங்கம் சோழவந்தான்,

மேற்படி சங்கத்தின் வாராந்தர கூட்டம் 5-11-33ல் வழக்கம்போல் தோழர் எம். பரமன் அவர்கள் தலைமையின் கீழ் நடந்தது. அது சமயம் தோழர்கள் அரிய உபன்யாசங்கள் செய்தார்கள் பின் சில தீர்மானங்கள் நிறைவேறியது. அதில் முக்கியமான தீர்மானமாவது.

சென்னையில் டிசம்பர் கடைசி வாரத்தில் பார்ப்பனர்களால் கூடப்போகும் தமிழன்பர் மகாநாட்டை வன்மையாக கண்டிப்பதுடன், அம் மகாநாட்டின் தீர்மானங்கள் தமிழர்களையும் தமிழன்பர்களையும் எவ்விதத்திலும் அது கட்டுப்படுத்தாது என்றும்ஒரு பெரும்பார்ப்பன சூழ்சி என்றும், தீர்மானிககப்பட்டது.

காரியதரிசி எழுதுகிறார்

கோவை தமிழர் கூட்டம்.

கோவை இராஜா வீதி பனகால் நிலையத்தில், தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் 7-12-33-ந் தேதி மாலை 7 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறிற்று. தோழர்கள் ஸி. பி. முத்துசாமி செட்டியார் ஆர். பி. சஞ்சையா, பி. சுந்தரம், வி. செகப்பண்ணன், ஸி. என். நாராயணசாமி ராஜு, எ. ஆர். எஸ். வள்ளியம்மாள் ஸி. எஸ். கந்தசாமி, என், கே. கஸ்தூரி முதலியவர்கள் தீர்மானங்களைப் பிரேரேபித்தும், ஆமோதித்தும் நீண்ட சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் கந்தசாமியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு $9\frac{1}{2}$ மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது.

தீர்மானங்கள்.

1. சென்னையில் நாளது டிசம்பர் மாத இறுதியில் கூடப்போகின்ற தமிழன்பர் மகாநாடு என்னும் பெயரால் பிராமண ஆதிக்கத்திற்காகச் செய்யப்படும் சூழ்ச்சி மகாநாட்டை பகிஷ்கரிப்பதுடன் அதில் எவ்வகையிலும் தமிழர்களும் தமிழன்பர்களும் கலந்துகொள்ளக் கூடாதென்று கோவை தமிழர்களடங்கிய இக் கூட்டம் பொது மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறது-

2. கனம் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களையும், கனம் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்களையும் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் அவர்களையும், திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களையும், திரு. டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை அவர்களையும் இன்றும் மற்ற தமிழர்களையும் ஷை மகாநாட்டிலிருந்து விலகிக்கொள்ளும்படி இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. சமீபத்தில் சென்னையில் கூடப்போகும் தமிழ் மாகாண உண்மைத் தமிழர் மகாநாட்டின் நடவடிக்கைகளையும், நோக்கங்களையும் இக் கூட்டம் பெரிதும் ஆதரிக்கிறது.

சமீபத்தில் சென்னை அரசாங்கத்தில் காலியாகப் போகிற நிர்வாக அங்கத்தினர் பதவி இரண்டில் ஒன்றையாவது தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கட்கே கொடுக்கும்படி மாட்சி மிக்க, இராஜப் பிரதிநிதியவர்களையும் சென்னை மாகாண அதிபதி அவர்களையும் இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

சுயமரியாதை இளைஞர் மன்றம்

ஷை மன்றத்தின் நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டமொன்று 6-12-33 மாலை 6 மணிக்கு 221 சதங்களாலை வீதியில் கூடினபோது கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறப் பட்டது.

இக் கூட்டம் தமிழ் மாகாண தமிழர் மகாநாட்டிற்கு தங்களது பூர்ண ஆதரவை அளிப்பதுடன், இம் மகாநாடு வெற்றிகரமாக முடிய வேண்டுமெனவும் ஆசைப்படுகிறது.

(இம்மகாநாட்டைக் கண்டித்து இன்னும் பல ஊர்களிலிருந்தும் வந்திருக்கிறது. அது அடுத்தவாரம் வரும்)

தமிழ்மாகாண தமிழர்களின் மகாநாடு.

சென்னையில் டிசம்பர்மாதகடைச் வாரத்தில் நடைபெறும்.

நமது மாகாண தமிழர்களின் முதலாவது மகாநாட்டை டிசம்பர்மாத கடைசியில் சென்னையில் கூட்ட தீவிற முயற்சிகள் நடைபெறுகிறது. தமிழ் ஜில்லாக்களிலுள்ள சகலகக்ஷி பிரபலஸ்தர்களும் மகாநாட்டில் பங்கெடுத்துக்கொள்வார்கள் என்று தெரிகிறது. மகாநாட்டின் தலைவர்கள் பெயரையையும் தேதியையும் முடிவு செய்ய நாளை வரவேற்புக்கமிட்டிகூட்டம்சென்னையில் நடைபெறும்.சகல பார்ப்பனரலவாதாரும் ஒத்துழைக்க வேண்டப்படுகிறார்கள். என்று காரியதரிசிகள் எ. இராகவன் எஸ். வி லிங்கம் ஆகியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

உடுமலைப்பேட்டை.

சுயமரியாதைச்சங்க காரியதரிசி தோழர் எஸ். மாரியப்பன் அவாகள் தனக்கு சொந்தமான மோட்டார் பஸ்ஸில் கோவைஜில்லா சுயமரியாதை மகாநாட்டிற்கு அங்கிருந்து வந்த சகல பிரதிநிதிகளையும் இலவசமாய் அழைத்து வந்தார். மகாநாடு முடிந்ததும் தோழர்கள் திருப்பூர்வழியாகஉடுமலைப்பேட்டைசென்றார்கள்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

ல்ல ஒருகாலத்தில் கடவுள் இதற்குத் தக்க பரிசளிப்பாரென்று ஆசை வார்த்தை காட்டியல்ல; ஆனால், நல்லசெய்கை செய்தவனுக்கும், அவனைச்சுற்றி வாழ்பவருக்கும் கைமேற் பலனளிக்கின்றது என்பதனால்தான் கொலை, களவு, பொய் ஆகிய குற்றங்களைச் செய்யாது மனிதனை நாஸ்திகம் பாதுகாக்கும் மரணத்துக்குப் பிறகு ஏற்படும் சிட்சை பயத்தாலல்ல; ஆனால் இக் குற்றங்கள் இவ்வுலக வாழ்க்கையையே துன்பமயமாக்குவதால்தான்.

இப்பிரபஞ்சத்தின் கர்த்தாவும், அதைப் பரிபாலிப்பவரும் கடவுள் என ஆஸ்திகம் கூறுகின்றது; அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதும் ஆஸ்திக சித்தாந்தம்; இதனால் மனிதர்களுடைய சுயமுயற்சியில் அவநம்பிக்கை கொள்ள இடமேற்பட்டு அதைத் தடுத்து இடையூறு செய்கின்றது. ஆனால் நாஸ்திகர் கொள்கை மனிதனுடைய சகலவிதமான முயற்சிகளுக்கும் தாராளமாக இடமளித்து, வாழ்க்கையை அதி உன்னதமான நிலைக்குக் கொண்டுவர வசதியளிக்கின்றது. ஆஸ்திகர் கொள்கைப்படி பரம துஷ்டனாக இருப்பவனும் மரணத் தருவாயில் தனது தீய செயல்களுக்காக வருந்துவானாயின் அவனுக்கு மரணத்துக்குப் பின் இன்பவாழ்வு சித்திக்கும். இவ்வுலகில் நல்வாழ்க்கை வாழ்பவனுக்கு இங்கேயே இன்பம் கிடைக்கின்றதென்றும் இன்னொருசமயம் அவன் பச்சாதாபப் படவேண்டிய காரணம் ஏற்படாதென்றும் நாஸ்திகம் உறுதி கூறுகின்றது.

தெய்வநம்பிக்கை உணவளிக்குமா?

மக்களுக்கு ஆரோக்கியத்தையும், நோயையும் அளிப்பது கடவுள்தானென்றும், தெய்வ கோபத்தால் ஏற்படுவதால் நோய்களை மனச் சமாதானத்துடன் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆஸ்திகம் நம்புகின்றது; உடற்கூற்று சாஸ்திரத்தை அறிவதால் ஆரோக்கிய வழிகளைப் பின்பற்றி நோய்களினின்றும், தற்காத்துக்கொள்ள முடியுமென்றும் போதிய காற்று வசதியில்லாத வீடுகளிலும்' தொழிற்சாலைகளிலும் வசிப்பதாலும் மோசமான ஆகாரத்தை உட்கொளவதாலும் அளவுமீறிய உழைப்பினாலும் மனோவேதனையாலும் இவை போன்றவையாலுமேயன்றி தெய்வ கோபத்தால் நோய் ஏற்படுவதில்லையென்றும், இவற்றிற்கெல்லாம் ஆணிவேர் வறுமையேயென்றும், குற்றங்களும் நோய்களும் வறுமையிலிருந்தே முக்கியமாக உற்பத்தியாகின்றனவென்றும் நாஸ்திகம் கூறுகின்றது. மேலும் பக்தியும் ஜபமும் சுரத்தைத் தடுக்கா; ஒரு மனிதனுக்கு ஆகாரம் கிடைக்காவிட்டால் அவன் நாஸ்திகனாயினும் ஆஸ்திகனாயினும் பட்டினியால் வருந்துவது நிச்சயம். தெய்வநம்பிக்கை அவனுக்கு உணவளிக்காது.

'கடவுள்' தோன்றியவரலாறு.

கடவுள் என்ற சொல் என்ன பொருள் கொடுக்கிறது என்பதை ஆராய்வது அவசியமாகின்றது. பிரபஞ்சத்திலுள்ள பொருள்களுக்கு சக்தியளிக்கும் அழிவற்ற பெருஞ் சக்தியைக்குறிக்கத்தான் 'கடவுள்' என்ற சொல் உபயோகிக்கப்படுவதாக ஒருவர் கூறுகிறார். இயற்கையில் மறைந்து கிடக்கும் சக்தியே கடவுள்; அல்லது நீளம், வீதி, உயரமில்லாத ஒரு புள்ளியே கடவுள் என மற்றொருவர்கருதுகிறார். மனித சக்திக்கெட்டாத செயல்களை மனிதனைப்போன்ற ஆனால் மனிதனைவிட மேலான, பார்க்கவியலாத ஒரு ஜீவனுடைய செயல்கள் என பழயகாலத்து மனிதன் கருதியிருக்கவேண்டும்'' என ஒரு ஆசிரியர் கூறுகிறார். தனித்தனியான சம்பவங்களைத் தனித்தனி பொருள் (கடவுள்)களுடைய செய்கையாகவுங்கருதினர். இதிலிருந்தே கடற்கடவுளும், போர்த்தெய்வமும், காதற்கடவுளும், மழைக்கடவுளும் தோன்றினர்கள். மனிதனுடைய அறிவு வளரவளர இக்கொள்கையும் மாறுபடலாயிற்று. விஞ்ஞானத்தின் முன்பு பட்டொழிந்த கடவுள்கள் பல. மூன் அறியாமையும் மூட நம்பிக்கையும் எழுப்பியிருந்த கோயில்களிலிருந்த தெய்வங்கள் விஞ்ஞானத்தால் வெளியில் பிடித்துத்தளளப்பட்டன. கடவுள் வாக்கைச்சொல்வதாகக்கருதப்பட்ட கோவில் குருக்களும், மனிதனுடைய விஞ்ஞான அறிவு வளரவளர தனது செலவாக்கை இழந்து வந்தான். அறியாமையால், பல நூற்றாண்டுகளாக தேவகுருக்களுக்கு அடிமைப்பட்டு, அவர் வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசாது கேட்டுவந்த மனிதன் மதக்கட்டளையைப்புறக்கணித்து, தனது சுய அனுபவத்தை உபயோகப்படுத்தி ஒவ்வொரு காரியத்தையும் பரிசீலனை செய்ய ஆரம்பித்தான். ஆகவே, இன்றையதினம் மூட நம்பிக்கையின் பழைய படைகளில் எஞ்சி நிற்கும் மூலபலத்தை வளர்ந்துவரும் பகுத்தறிவு எதிர்க்கிறது. இந்த போரில் உண்மை வெளிப்படுவதால் மனித சமூகத்துக்குப் பெருத்த நன்மையுண்டு.

கடவுள் உண்டா?

'கடவுள்' என்ற வாக்கு ஆஸ்திகனுக்கு எவ்விதமான சாதகத்தையும் புரியவில்லை. அது எதையும் போதிக்கவோ, விவரிக்கவோ, தெளிவு படுத்தவோ இல்லை. கடவுள் ஒருவர் இருப்பாரானால், அவர் மக்களிடையே தோன்றியுள்ள சந்தேகத்தை நிவர்த்திசெய்திருக்கலாம். சர்வசக்தியுடையவருக்கு இது மிகவும் எளிதான காரியமே என்பதை ஆஸ்திகர் ஒப்புக்கொண்டு தீரவேண்டியதுதான். அவ்வாறு அவர் செய்யமுடியாதென்றால், அவரை சர்வ வல்லமையுடையவரென்றோ அல்லது சர்வமும் அறிந்தவரென்றோ, சொல்லமுடியாது அதாவது அவர் கடவுளல்ல. மத சம்பந்தமான சந்தேகங்களாலும், வேற்றுமைகளாலும் துன்பமும், சண்டையும், மதக்கொடுமைகளும் பல நூற்றாண்டுகளாக நடந்திருக்கின்றன ஆகவே அவர் தம்மைப்பற்றி சில சந்தேகங்களை நிச்சயமாக நிவர்த்தித்து மக்களைத் துன்பத்தினின்றும் பாதுகாத்திருக்க வேண்டும். இவ்வாறு செய்ய அவருக்கு விருப்பமில்லையென்றால் அவர் மிகமிக நல்லவர் என்று சொல்லமுடியாது. அதாவது அவர் கடவுளல்ல. ஆனால் ஏராளமான பேர் சந்தேகமுடையவராகவும், பெரும்பாலான மக்கள் வேறுபட்ட கொள்கைகளை உடையவராகவும், கடவுளுடைய சக்திகளையும். அப்படியொருவர் உண்டா என்பதைப்பற்றியும பலருக்கு சந்தேகமிருப்பதாலும் கடவுளில்லையென்றோ, இருந்தால் அவர் சர்வஅறிவுமுடையவரல்லவென்றோ, சர்வசக்தியுடையவரல்லவென்றோ, அல்லது நல்லவரல்லவென்றோதான் முடிவாகும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நாஸ்திகவாதியாகவே பிறக்கின்றது. பிறருடைய போதனையினாலும், தயாரிப்பினாலுமே தெய்வ நம்பிக்கை ஏற்படுகிறது. ஒருவனுக்கு எவ்வளவுதூரம் விஞ்ஞான அறிவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமான கடவுள் நம்பிக்கை ஏற்படுகின்றது. அறியாமை அதிகப்பட அதிகப்பட நம்பிக்கையும் அதிகரிக்கின்றது. ஆஸ்திகனுக்கு அறியாமை அதிகரிக்க அதிகரிக்க அவனுடைய கடவுள்களின் தொகையும் அதிகரிக்கின்றது. கடவுள் நம்பிக்கை விவேகத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. தர்க்கமுறைக்குப்பொருந்தாததைவிட ஆஸ்திகம் மோசமானது. அதன் போதனைகள் பிரயோஜனகரமானவையல்லவென்பது மட்டுமல்ல, தன்னைம்பற்றிகூட அது போதிப்பதற்கு ஏதுவுமில்லை. வைதீகத்தைததவிர்த்து ஆஸ்திகம் சாரமற்ற, சம்பந்தமில்லாத ஒரு பகற்கனவேயாகும்.

(8-ம் பக்கத்தொடர்ச்சி.)

ளுக்குப் புத்தி புகட்டும் வாயிலாக கத்தோலிக்கத் தோழர்கள் தங்களுக்கு எந்த மதமும் தேவை இல்லை என்று சொல்லிவிட்டு கத்தோலிக்கப் பகிஷ்காரமும் தீவிரமாகச் செய்யவேண்டுமென்று இம் மகாநாடு கோருகிறது.

பிரே:- அ. பொன்னம்பலனர்
ஆமோ:- 1- திருச்சி சம்பந்தம் 2. பஜீவானந்தம்.

9. சிவகங்கை சமஸ்தானத்தில் நிலங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் தீர்வையானது குடிகளால் செலுத்தக்கூடாத தன்மை வாய்ந்திருப்பதால் கவர்ன்மெண்ட் இலாக்காவில் ஏற்பட்டிருக்கும் தீர்வையை அனுசரித்து ஜமீன் நிலங்களுக்குத் தீர்வையைக் குறைத்து நிர்ணயிக்கும்படிக்கு சிவகங்கை ஜமீன்தார் அவர்களை இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே:- திருக்கோஷ்டியூர் நல்லையா பிள்ளை
ஆமோ:- 1. செம்மனூர் சுப்பய்யா அம்பலம் 2 சிவகங்கை, எஸ். ஆர். வெங்கிடாசலம் 3 சிவகங்கை, வக்கீல் எம். பொன்னுச்சாமி

10. இனும்தாருடைய நிலங்களைப் பயிரிடுங் குடிகளுக்கு உரிமைப்படுத்தி சமீபத்தில் சென்னை சட்டசபையில் நிறைவேற்றிய மசோதாவை இம்மகாநாடு ஆதரித்து அதை விரைவில் சட்டமாக்கவேண்டுமென்று சென்னை கவர்னரையும் இந்திய இராஜப்பிரதிநிதியையும் கேட்டுக்கொள்கிறது.

பிரே:- சி. டி. நாயகம்.
ஆமோ:- என். பி. காளியப்பன்.

11. சர். ஹரிசிங்கோர் அவர்கள் விவாகரத்து சம்பந்தமாய் இந்திய சட்டசபையில் கொண்டுவர இருக்கும் சட்டத்தை இம்மகாநாடு ஆதரிப்பதுடன், பொதுஜனங்கள் தங்கள் ஆதரவை இந்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே:- எஸ். குஞ்சிதம்.
ஆமோ:- அறம்வளர்த்தாள்.
'வெடிகுண்டு' ஆசிரியர் ஆனந்தம்.

12. சிவகெங்கை சமஸ்தானத்தின் வரியில் சுமார் நூற்றுக்கு 99 பங்கு பிராமணரல்லாதாரே செலுத்துகிறபடியால் சமஸ்தானத்திய உத்தியோகங்களை பிராமணரல்லாதாருக்கே கொடுக்கவேண்டுமென்று சிவகெங்கை ராஜா அவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே:- சிவசுப்பிரமணியம்.
ஆமோ:- சிவகெங்கை எம். பொன்னுசாமி.
அ. பொன்னம்பலனர்.

13. நமது கொள்கைகளை இன்னும் தீவிரமாய்ப் பரப்புவதற்காக வேண்டிய அமைப்புகளை ஏற்படுத்தும் பொருட்டு சுயமரியாதை மாகாண மகாநாட்டைக் கூடிய சீக்கிரம் நடத்த வேண்டுமென்று சுயமரியாதைச் சங்க மாகாணக் கமிட்டியை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே:- மாயவரம் சி. நடராஜன்.
ஆமோ:- நாகை மணி.

ஜனனம்.

5-12-33ந் தேதி தோழர் சி. நாகப்பன் தேவம்மாள் அவர்களுக்கு கோவையில் ஓர் ஆண்மகவு பிறந்தது தாயும் சேயும் சுகமாயிருக்கிறது.

(ஒரு நிருபர்)

திருமணம்.

விருதுநகர் தோழர் சங்கரபாண்டியநாடார் குமாரன் தோழ நடராஜனுக்கும்: சாத்தூர் தோழர் குருசாமி நாடார் குமாரத்தி தோழர் பதமாவதி அவர்களுக்கும் 13ந்தேதி சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெறும்.

(ஒரு நிருபர்)

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

தெரியாமல் முரட்டுத்தனமாகப் பழைய தீண்டாமைப் பாடத்தையே திரும்பப் படித்து மானபங்கமடைகிறார்கள்.

ஆகவே பொதுஜன நன்மையில் ஆர்வமுள்ள மக்கள் காலப் போக்கின் காரணமாக ஏற்படும் மாறுதல்களை ஏற்றுக்கொண்டு அவைகளைப் பொதுஜன நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்வதற்கும், முதலாளி ஆட்சியைத் தொலைக்கவும், சமதர்மத் திட்டத்தை நிலைநாட்டவும் எந்தெந்தவழிகளில் சந்தர்ப்பம் வாய்க்கின்றதோ அந்தந்த வழிகளிலெல்லாம் முயற்சி செய்யவும்வேண்டும்.

நமது வாலிபர்களும், அறிவு இயக்க நண்பர்களும் சமதர்மக் கொள்கைகளைப் பரப்புவதற்கு இப்போது தகுந்தசமயம் வாய்த்திருக்கிறது. நமது நாட்டில் என்றைக்காவது சமதர்மம் வெற்றிபெற வேண்டுமானால் அதற்கு முன்னணியில் நின்று பாடுபட வேண்டியவர்கள் தற்சயம் தாழ்த்தப்பட்டவர்களெனக் கருதப்படும் ஜனசமூகமாகும். சமதர்மத் தொண்டுக்குவேண்டிய சகல குணங்களும் இந்தத் தாழ்த்தப்பட்ட தொழிலாளரிடம் இயற்கையாகவே குடிகொண்டிருக்கிறது. இவர்களுக்கு சொத்து, சுதந்திரமென்ற எவ்வித தடங்கலுமில்லை. கோவில் குளங்களில் இவர்கள் அனுமதிக்கப் படாமையால் மதமென்னும் போதை இவர்களை அதிகமாகப் பாதிக்கவில்லை. ஆயிரக்கணக்கான வருஷங்களாக மிருகங்களிலும் கேவலமான நிலையில் இவர்களை அமுக்கிவைத்திருக்கும் கடவுளுக்கு இவர்கள் நன்றி செலுத்தவேண்டிய அவசியமில்லை. ஆகையால் தட்டுக தடங்கலில்லாமல் சமதர்ம இயக்கத்தைச் சேரக் கூடிய லாயக்கு இவர்களுக்கே உள்ளது. இவர்கள் சமதர்ம இயக்கம் நடத்தி வெற்றிபெற்றால் உலகமே போற்றக்கூடிய லாபம் இவர்களுக்கு கிடைக்கும். அவர்களை இவ்வியக்கத்தில் ஈடுபடச் செய்யவும் வேண்டியது அவசியமாகும்.

கேரளநாட்டுத் தீயர் ஜன வகுப்பார் இவ் வேலையில் முன்னின்று தங்கள் வகுப்பு மகாநாட்டில் மதங்கள் அனைத்தையும் அறவே ஒழிக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பது நமது இயக்கத்திற்கு மகத்தான வெற்றியாகும். அதேபோல் தமிழ்நாட்டில் நாடார் சமூகத்தாரும் தீர்மானஞ்செய்து சமதர்ம இயக்க முன்னணியில் வேலை செய்ய லாயக்குடையவர்களாதலால் அவர்கள் கூடியசீக்கிரம் முன்வருவார்களென எதிர்பார்க்கிறேன்.

காந்தீயம்.

ஆனால் இவ் வேலைக்குத் தடங்கலாகத் தோன்றியிருக்கும் ஹரிஜன இயக்கமெனப்படும் காந்தீய மத இயக்கத்தை இவ்விடம் குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது. முதலாளி ஆதிக்கத்திற்கு ஆணிவேராயிருப்பது மதமென்னும் உண்மையை சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பழகிய உங்களுக்கு விரித்துக் கூறுவது அனாவசியமாகும். இந்த மதப் போர்வையைப் போர்த்துக் கொண்டே காந்தியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை முதலாளிகளுக்கு மேலும் மேலும் அடிமைப்படும்படி போதித்துவருகிறார். சமீபத்தில் தோழர் காந்தியவர்கள் தமிழ்நாட்டில் ஹரிஜன பிரசாரம் என்னும் மதப் பிரசாரம் செய்யவரும்பொழுது அவர் பிரசாரத்தை எதிர்த்து ஏழை மக்கள் மதமென்னும் படுகுழியில் விழாமல் தடுப்பது நமது கடமையாகும். அதற்கு வேண்டிய பிரசாரத் திட்டமொன்று இம் மகாநாட்டில் ஏற்படுத்தவேண்டுமென்பது எனது கோரிக்கை. மரியாதையான முறையில், பிறர் வீண் வருத்தங்கொள்ளாதவகையில் நாம் நமது கொள்கையைப் பொதுஜனங்களும், தோழர் காந்தியும் அறியும்படி சொல்லுவது நமது கடமை, அதனால் தோழர்காந்தியின் எண்ணங்கள் மாறுதல் அடைந்தாலும் அடையலாம். எப்படியிருந்தாலும் நமது கொள்கையைப்பற்றிய பிரசாரத்தை தீவிரமாகச்செய்வதற்கு தோழர்காந்தியின் விஜயம் நமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். இந்த நெருக்கடியான சமயத்தில். தீண்டப்படாத ஜாதியாரின் மனப்போக்கை காந்தீயமென்னும் மதக் கொள்கையினின்றும் நாம் திருப்பிவிடுவோமாயின் நமது நாட்டில் சமதர்மம் ஓங்குவதற்கு அரியபெரிய ஆரம்பவேலை செய்தவர்களாக ஆவோம்.

நன்கொடை.

இந்தியர் ஊழிய சங்கத்தின் கிளை ஸ்தாபனமான திருச்சி மாயனூர் கிராம சீரமைப்பு நிலையத்தின் அமைச்சர் கே. ஜி. சிவசாமி அய்யர் அவர்கள் நமது "குடி அரசு" பத்திரிகைக்கு நன்கொடையாக ரூ. ஐந்துசெக் மூலமாக அனுப்பியதை மிக்கவந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம். நமது இயக்க கொள்கைகளையும் லட்சியங்களையும் பெரிதும் ஏற்றுக்கொள்வதற் கறிகுறியாகவே இந்த நன்கொடை அனுப்பப்பட்டிருக்கிறது என்ற கருத்துக் கொண்டே நாம் ஏற்றுக்கொள்வதோடு அதற்காக நமது ஆழ்ந்தநன்றியறிதலான வந்தனங்களை மாயனூர் கிராம சீரமைப்பு நிலையத்தாருக்கும் அதன் அமைச்சர் தோழர் கே. சி. சிவசாமி அய்யர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். (ப-ர்)

தோழர் ஆர். சிதம்பரம் நன்கொடை

பர்மாநாட்டில் வசிப்பவரும், நமதியக்கத்தோழரும், பிரபல வர்த்தகருமான தோழர் ஆர். சிதம்பரம் அவர்களால் ஈரோடு மகாநாட்டுக்கு ரூ. 10 நன்கொடை அனுப்பப்பட்டதுடன் காந்தி தமிழ்நாட்டு விஜயத்தின் போது அவரை பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், ஈரோடுசமதர்ம த்திட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்றும் தந்திமூலம் செய்தி அறிவித்தார்கள். தோழர்சிதம்பரத்தின் ஆதரவை பெரிதும் பாராட்டுகிறோம்.

எஸ். வி. லிங்கம்,
காரியதரிசி

சிங்கையில் சீர்திருத்த திருமணம்.

சிங்கப்பூர் புக்கெட் தீமாரோட் நியூட்டன் 261 நெம்பர் இல்லத்தில் சோ. ராமலிங்கம் அவர்களின் தலைமையில் கா. தமோதரம்பிள்ளையவர்களால் 12-11-33ந்தேதி அன்று தோழர் எஸ். ஆர். ரெத்தினம் அவர்களுக்கும். தோழர் சே. கிருஷ்ணம்மாள் அவர்களுக்கும் சீர்திருத்த முறையில் திருமணம் நடத்திவைக்கப்பட்டது. அவ்வமயம் தோழர்கள் கே. ஏ. பண்டிதர், கா. தமோதரம்பிள்ளை ராஜரெத்தினம் ம. ப. ரெத்தினசாமி தி. பொ. ராமசாமி, செ. கோவிந்தன், ராமநாதன் இவர்களால் சீர்திருத்தம், சிக்கனம் புரோகிதப் புரட்டு, முன்னோர்களின் மூட நம்பிக்கை, கல்வி, சுகாதாரம், என்னும் பொருள் பற்றி பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் நா. சிதம்பரம் அவர்களால் வந்தனோபசாரம் கூறியபின் தேனீர் விருந்து நடத்தப்பட்டு இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

சென்னைக்கு புதிய கவர்னர்

ஆக்டிங் கவர்னர் பதவி இல்லை.

சமீபத்தில் லார்டு வில்லிங்டன் ரஜாவில் இங்கிலாந்து செல்லுகிறபொழுது சென்னை கவர்னராயிருக்கும் சர். ஜார்ஜ்ஸ்டான்லி ஆக்டிங் வைசிராயாக நியமிக்கப்படுவார்.

அந்தக்காலத்தில் சென்னை ஆக்டிங் கவர்னர் பதவிக்காக, சென்னை சர்க்கார் நிர்வாகசபையிலுள்ள ஐரோப்பிய இந்திய அங்கத்தினர்களுக்குள் பலமானபோட்டி இருந்து வருகிறது. மேலும் சர். ஜார்ஜ்ஸ்டான்லி ஆக்டிங் வைசிராய்வேலை முடிந்ததும் சென்னைக்கு திரும்பி வராமல், தமது உத்தியோகத்தை ராஜிநாமா செய்து விட்டு சீமைக்குப்போக தீர்மானித்திருப்பதாகவும் தெரிகிறது. எனவே சர். ஸ்டான்லி வைசிராயாக நியமிக்கப்பட்டவுடனே சென்னைக்கு மார்குவிஸ் டவ்பரினை நிரந்தர கவர்னராக நியமிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. மார்குவிஸ் டவ்பரினுக்கு வயது 25 லோதியன் கமிட்டியில் அங்கத்தினராயிருந்தவர். புதிய அரசியல் அமுலுக்கு வரும்வரையில் சர். உஸ்மான் உத்தியோகத்தில் இருப்பது அத்தியாவசியம் என்று சர்க்கார் கருதுவதால் அவருடைய உத்தியோக காலம் இன்னும் வளர்ச்சி பெறக்கூடுமென்றும் தெரிகிறது என்று ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகைகூறுகிறது.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

19-11-33 ஞாயிறன்று பகல் 2 மணிக்கு சென்னை மலையப்பன் வீதியிலுள்ள கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்தில் மன்றத்தின் தலைவர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் வாராந்தரக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் எஸ். இராமநாதன் அவர்கள் சு. ம. இயக்கத்தைப்பற்றிப் பேசினர்.

ஷை மன்றத்தின் அங்கத்தினர் பொதுக்கூட்டம் 2-12-33 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை தங்கசாலை வீதி 221 நெம்பர் கட்டிடத்தில் மன்றத்தின் தலைவர் தோழர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் கூடியது.

அதுசமயம் கீழ்கண்ட நிர்வாக சபை தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:-
பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்.

துணை தலைவர்கள்:-
எஸ். குருசாமி
எல். ராமசாமி
சி. தங்கராஜ்
எஸ். குஞ்சிதம்

காரியதரிசிகள்:-
டி. சம்பந்தம்
எஸ். ரங்கநாதன்

பொக்கிஷதார்:-
எம். எஸ். முத்து.

நிர்வாக அங்கத்தினர்கள்:-
கே. எஸ். நாதன், கே. கிருஷ்ணசாமி, எஸ். பி. சம்பந்தம், டி. ராதாகிருஷ்ணன், ஆர். கோவிந்தன், எல் லூயிஸ் டி துளசி, ஈ. திருஞானசம்பந்தம், எ. சுந்தரி முதலியவர்களாகும்.

ஷை மன்றத்தின் வாராந்திரக்கூட்டம் 3-12-33ல் மலையப்பன் தெரு கார்ப்பரேஷன் பாடசாலையில் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் பி. என். குருசாமி தலைமை வகித்தார். தோழர்கள் டி. ராதாகிருஷ்ணன், எஸ். ரங்கநாதம், கே. கிருஷ்ணசாமி, பி. தங்கராஜ், டி. துளசி, கே. எஸ். நாதன், டி. சம்பந்தம் முதலியோர், "இந்தியாவின் குறைபாடுகளுக்குக்காரணம் என்ன?" என்பதைபற்றி சொற்பொழிவாற்றினர்கள் என ஷை சங்க காரியதரிசி எழுதுகிறார்.

(5ம் பக்கத்தொடர்ச்சி.)

ட்டு ஆண்களைப்படிப்பதற்கும், விளையாடுவதற்கும் அனுப்புவது மாதிரி உங்கள் பெண்ணையும் அனுப்புவதை வேண்டாமென்று எந்த அன்னிய ஆட்சி தடுக்கிறது? உங்களுடைய பணத்தைக்கொண்டு உங்கள் ஊரில் உங்களால் கட்டப்பட்டிருக்கும் கோவிலில் உள்ள பொம்மைகள் மேல் போட்டிருக்கும் நகைகளை ஏலம் போட்டு அக்கோவில்களில் அநாதைப்பிள்ளைகளுக்கும், ஏழைகளுக்கும் படிப்புச்சொல்லிக் கொடுப்பதையும் அங்கேயே ஒரு பாகத்தில் ஒரு சிறு ஆஸ்பத்திரிவைப்பதையும், மற்றொரு பாகத்தில் ஒரு தொழிற்சாலை வைப்பதையும் வேண்டாமென்று எந்த அன்னிய ஆட்சி உங்கள் குறுக்கே விழுந்து தடுத்துக் கொண்டிருக்கிறது? உங்கள் ஊரிலுள்ளவர்களெல்லாம் சேர்ந்து கையெழுத்துப்போட்டு "ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களே! இனிமேல் நீங்கள் எங்கள் ஊருக்குள் வரவேண்டாம். வந்தாலும் ஒருவரும் ஒரு செல்லாக்காசு கூட கொடுக்கமாட்டோம்," என்று சோம்பேரி சங்கராச்சாரியாருக்குக் கடிதம் எழுதி விடுவதை வேண்டாமென்று எந்த அன்னிய ஆட்சி தடுத்துக்கொண்டிருக்கிறது? நீங்கள் சுகாதாரத்தோடு வாழ்வதற்கு எந்த அன்னிய ஆட்சி இடைஞ்சலாயிருக்கிறது? உங்களில் பூணூல் போட்டிருப்பவர் அதை அறுத்தெறிவதையும் நெற்றியில் சித்திரம் போட்டிருப்பவர்கள் அதைக்கலைத்து விடுவதையும் எல்லா மக்களும் ஜாதி பேதமின்றி ஒன்றாய் வாழ்வதையும் எந்த அன்னிய ஆட்சி தடுத்துக்கொண்டிருக்கிறது? ஒரு சுப்பையர் மகளை ஒரு நந்தனோ, அல்லது ஒரு அப்துல்காதரோ கல்யாணஞ் செய்து கொள்வதை எந்த அன்னிய ஆட்சி தடுக்கிறது'— இதையெல்லாம் விட்டு விட்டு ஏதோ அன்னிய ஆட்சிக்கு முந்தியிருந்த ஔரங்கசீப் ஆட்சியையும் மனுதர்ம ஆட்சிகளையும் உலகமே மறந்து விட்டதாக எண்ணி, "அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும், அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும்" என்று வெறுங் கூப்பாடு போடுவதால் என்ன பிரயோஜனம் என்றுதான் கேட்கிறேன். தேளைநசுக்கிவிட்டு அந்தஇடத்தில் நல்லபாம்பை வைப்பது மாதிரி பிரிட்டிஷ் ராஜ்யத்தை ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாக ராமராஜ்யத்தையோ! ஔரங்கசீப் ராஜ்யத்தையோ ஏற்படுத்துவதென்றால் ஆதனால் ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டவர் களுக்கும் மிருகங்களைவிட கேவலமாக நடத்தப்படும் பெண்களுக்கும் எந்த விதத்தில் விடுதலை ஏற்படும் என்று கேட்கிறேன். ஆகையால் அன்னிய ஆட்சியோ, அல்லது வேறு எந்த முதலாளி ஆட்சியோ நிலைத்திருப்பதற்குக் காரணம் என்னவென்பதை அறிந்து அந்தக்கொடுமைகளை உடனே நீக்குவதே அறிவாளிகளின் கடமையாகும். எனவே சுயமரியாதை இயக்கத்துத் திட்டங்களையும், கொள்கைகளையும் நம்நாடு முழுதும் பரப்புவதே நமது முதற்கடமையாயாகும். இது வரையிலிருந்த பிரசார முறைகள் தவிர இனிமேல் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்ற வேண்டியதும் மிகவும் அவசியமான விஷயமாகும். வருகிற புதுச்சீர்திருத்தத்தில் நம் கொள்கைகளைப் பரப்பக் கூடியவர்களில் நூற்றுக்கணக்கானவர்களை சட்டசபையிலும் இதர ஸ்தாபனங்களிலும் இடம் பெறுமாறு செய்யவேண்டும். இதற்காக இப்பொழுதிருந்தே நாடெங்கும் பிரசாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இம்மகாநாட்டை ஆரம்பித்து வைக்கின்றேன்.

திருத்தருப்பூண்டி.

ஆதித்திராவிடப் பள்ளிக்கூடம் திறப்புவிழா.

இவ்வூர் லேபர் ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் தோழர் அய்யாசாமி அவர்கள் தலைமையில் நடந்து வரும் ஆதிதிராவிட முன்னேற்ற வாலிபர் சங்கத்தின் சார்பில் 29-11-33 மாலை 5 மணிக்கு இவ்வூருக்குச் சமீபத்திலிருக்கும் வேளூர் என்னும் கிராமத்தில் ஆதிதிராவிடப் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி போதிக்க ஒரு பள்ளிக்கூடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இதற்கு இவ்வூர் தாசில்தார் தோழர் மோஸஸ் அவர்கள் தலைமை வகித்தார். டாக்டர் தோழர் ராமசாமி, எம். பி. பி. எஸ். அவர்கள் பள்ளிக் கூடத்தைத் திறந்து வைத்தார். விழாவிற்கு இவ்வூர் பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

(ஒரு நிருபர்)

மூவேந்தர்குல முதலாவது மகாநாடு சென்னை.

இந்த மகாநாட்டை அகில இந்திரகுல மகாநாடென்று பெயரிட்டதற்கு சில ஆக்ஷேபணைகள் ஏற்பட்டதின் பொருட்டு இம் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியார் அப்பதத்தை நிராகரித்து 'மூவேந்தர்குல' மகாநாடெனப் பெயரிட்டுள்ளார்கள். சென்னையில் இம் மகாநாட்டை டிசம்பர் 26, 27-ந் தேதிகளில் கூட்டுவதென்றும், ஷை குல இராஜாக்களும், ஜமீன்தார்களும், தலைவர்களும் இம் மகாநாட்டில் முதன்மையாக நின்று வேண்டிய உதவி புரிவார்களென்றும் தெரிகிறது.

(ஒரு நிருபர்)

சுயமரியாதைத் திருமணம்.

தூத்துக்குடி சுயமரியாதை சங்கக் காரியதரிசியும், நாடார்கள் காரப்பேட்டை பரிபாலன சங்க மானேஜருமான தோழர் எம். வைகுண்டம் அவர்கள் புத்திரி தோழர் முத்துமாலைக்கும், சாத்தான் குளம் தோழர் பி. பழனிவேல் அவர்களின் சகோதரன் தோழர் துரைசாமிக்கும் 22-11-33 காலை 9 மணிக்கு தோழர் வைகுண்டம் இல்லத்திய் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. தோழர் செல்லையா அவர்கள் தலைமை வகித்து புரோகிதச் சடங்கு என்பவைகளிலிருக்கும் மூட பழக்க வழக்கங்களை சாஸ்திர ஆதாரத்துடன் விளக்கி சுமார் ½ மணி நேரம் பேசினார். சுயமரியாதைத் திருமணம் என்பது பற்றி தோழர் எம் வைகுண்டம், மதுரை தோழர் வெங்கடசாமி இவர்கள் பேசி முடிந்ததும் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு திருமண வைபவம் வெகு சிறப்பாய் முடிந்தது. திருமணத்திற்கு சுமார் 200-க்கு மேற்பட்ட தோழர்களும், முக்கியஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர்.

(ஒரு நிருபர்)

பொன்மலை சுயமரியாதை சங்கப் பொதுக்கூட்டம்.

28-11-33மாலை மாலை5½மணிக்கு பொன்மலை தொழிலாளர் சங்கத்திடவின் அருகில் மேல கல்கண்டார் கோட்டை ஜில்லாபோர்டு மெம்பரும், பஞ்சாயித்து போர்டு பிரசிடெண்டுமான தோழர் எம். வி. துரைசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் நாகை தோழர் கே. முருகேசன் ஆர். வி கோபால் என். பி. காளியப்பன் முதலியவர்கள் பேசினார்கள். பின் சில தீர்மானங்கள் நிறைவேறியது. அதில் முக்கியமானமாவது.

குடி அரசு பத்திரிகைக்கு ஜாமீன் தொகை கட்ட வேண்டுமென்று அரசாங்கத்தார் உத்திரவு விட்டது பற்றி பொன்மலைவாசிகளடங்கியஇப் பொதுக் கூட்டம் பெரிதும் வருந்துகிறது' ஷை கரியாலத்தார் "புரட்சி" என்ற பெயரோடு வெளிவரும் பத்திரிகையை சுயமரியாதை இயக்க அபிமானிகள் நிறைந்த இப் பெருங் கூட்டம் நல்வரவேற்கிறது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டத்திற்கு திருச்சி தோழர்களும், மற்றும் கிராம வாசிகளும் வந்திருந்தனர்.

(ஒரு நிருபர்)

பெங்களூர் V. M. T. A. மாணவர் கல்விக் கழகம்.

18-11-33 சனிக்கிழமை நரசிம்மராஜா ஹாஸ்டல் தமிழ் மாணவர் கூட்டம் கூடியது அவ்வமயம் தோழர். எம். ஆறுமுகம அவர்களின் தலைமையின் கீழ் தோழர்கள் எஸ். பொன்னுசாமி ஏ. வரதராஜன், எம். என். கண்ணன், ஜெ. பூசலிங்கம், எம். முனிசாமி பேசிய பின்பு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. (காரியதரிசி.)

சென்னை சுயமரியாதை சங்கம்.

5-12-33 தேதி மாலை 6-மணிக்கு ஷை சங்க உதவி தலைவர் ஏ சித்திரை அவாகள் தலைமையில் தோழர் சி. ஆர். அமுர்தவாசகம் அவர்கள் இல்லத்தில் சங்கத்தின் ஜெனரல் கமிட்டி கூட்டம் நடைபெற்றன. அதுசமயம் சமீபத்தில் நடைபெறப் போகும் தமிழன்பர் மகாநாடு என்னும் பேரால் பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்காக செய்யப்படும் பார்ப்பன சூழ்ச்சி மகாநாட்டை பகிஷ்கரிப்பதாகவும், அதற்குமாறாக நமது உண்மை தமிழ் மாகாண தமிழன்பர்கள் ஒன்றுகூடி தக்க நடவடிக்கைகளெடுத்துக்கொண்டு சீக்கிரத்தில் ஒரு தமிழ் மாகாண தமிழர் மகாநாட்டை கூட்டி பொதுமக்களுக்கு மேல்கண்ட போலி மகாநாட்டின் மோசடியை விளக்கிக்காட்ட சென்னையில் நடைபெறப்போகும் தமிழர் மாகாணதமிழர் மகாநாட்டை எங்கள் சங்கம் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றது என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

மணமகன் தேவை.

21-வயதுடையவரும், எலிமெண்டரி ஹையர் கிரேட் பாஸ் செய்து மாதம் ரூ. 23.0-0 சம்பளம் பெற்று உபாத்தியாயினியாக இருந்து வருபவரும், மாநிறமும், கெம்பீரத் தோற்றமும், வனப்பும், நாகரீகமும் பொருந்திய மருத்துவகுலத்தைச் சார்ந்த கன்னிப்பெண்ணிற்கு மணமகன் தேவை.

மணமகன்:—27-வயதிற்கு மேற்படாதவரும் ஆங்கிலம் கற்று உத்தியோகத்தில் மாதம் ரூபாய் 30-0-0 சம்பாதிப்பவராகவும், திடகாத்திர சரீரமுடையவராகவும், சொத்துடையவராகவும், இந்துமதத்தைச் சார்ந்தவராகவும் இருத்தல்வேண்டும். ஹையர் கிரேட் பாஸ் செய்து உபாத்தியாயராய் இருந்து வருபவராயின் நலம்.

விருப்பமுள்ளவர்கள் 0-1-3 அணா தபால் தலைகளுடன் அடியில் கண்ட விலாசத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்.

ச. ம. சி. பரமசிவம்,
காரியதரிசி
த. நா. பு. ம. சங்கம்,
22-பாளையம்பஜார், உறையூர் போஸ்டு
திருச்சி.

(15)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கொஞ்சம் பணக்காரர்களென்று சொல்லப்படுபவர்களெல்லாம் எட்டியே போய்விட்டார்கள். அவர்களைக் குறை கூறுவதிலும் பயனில்லை. பழம் (பழமை) பெருச்சாளிகளான தால் அந்த வாசனையையே மூகர்ந்து பார்க்க ஆசை உடையவர்களாயிருக்கின்றார்கள். போகட்டும், எதிர்கால இந்தியாவின் நன்மை தீமையை நிர்மாணம் செய்ய வேண்டியவர்கள் வாலிபர்களேயாவார்கள். சமூகத்தின் நிலை உயர்வடைவது வாலிபர் கையிலேயே உள்ளது. எனவே வாலிபர்கள தம் கடமையை சரிவர நிறைவேற்ற நினைப்பார்களாக!

சமதர்ம இயக்கம்

வாலிபத் தோழர்களே! சமதர்மத்தைப்பற்றி நீங்கள் நன்கு தெரிந்திருப்பீர்களென்றே நம்புகிறேன். தெரிந்திருப்பதில் மட்டும் பிரயோஜனமில்லை யென்றுதான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மக்களின் உண்மையான முன்னேற்றத்திற்கு சமதர்மக் கொள்கையை விட வேறு ஒன்றுமில்லையென்பதை நீங்கள் கண்டிப்பாய் உணரவேண்டும். நமது சமதர்ம இயக்கத்திற்கு தொழிலாளர், துன்பப்படும் மக்கள் தவிர ஏனையோர் யாவரும், எல்லா மதக் காப்பாளர்களும், எதிரிகளாயிருந்து எதிர்த்து வருகின்றார்கள். மதத்தை மண்ணாக்கி, ஜாதியை சாம்பலாக்கி மூடபழக்க வழக்க குருட்டெண்ணங்களை குழிதோண்டிப் புதைத்து, சமூகத்தில் பெரும் புரட்சியை அரிய மாறுதலை உண்டாக்க முனைந்து நிற்கின்றது சமதர்ம இயக்கம்! அதனை நிறைவேற்ற வாலிபத் தோழர்களையே அறைகூவி அழைக்கின்றது! நம் தூய சமதர்ம இயக்கத்தைக்கண்டு வெறுக்கின்றார் பலர். அவர்கள் எத்தகையோரென்றால், நெஞ்சில் கடுகளவும் ஈரமற்ற, தன்னலமே பெரிதென, தன் வயிறே உயரியதென, உடலசையாமல் உண்டு கொழுக்கும் சிலரேயாவர். மதம், ஜாதி, சாத்திரம், கடவுள், தானம், தர்மம் என்று சொல்லி, உலகில் சோம்பேரித்தனத்தை வளர்த்த சோணகிரிகளின் வாழ்வு இனி நெடுநாள் நீடித்திருக்க முடியாது செய்ப வாலிடர்கள் யாவரும் ஒருங்கு திரண்டு உழைத்திட வேண்டும். ஜாதிப்பிரிவு, மதவேற்றுமை, ஆண் பெண் வித்தியாசம், உயர்வு தாழ்வுக்கொடுமை ஆகியவைகள் சமதர்ம திட்டத்தில் இடம்பெற எள்ளளவும் மார்க்கமில்லை நமது நாட்டில், மற்றெல்லாவற்றையும் விட பெண்கள் நிலை மிக பரிதாபமென்பதை நீங்கள் உணர்ந்தேயிருப்பீர்கள். பெண்களை மனித ஜென்மங்களாகவே பாவிக்கப்படவில்லை யென்றால், மற்ற செய்திகளைப் பற்றிக் கேட்பானேன்! சமதர்ம இயக்கத்தின் மூலம் பெண்கள் கண்விழித்து விட்டார்கள். இனி ஒருவருடைய ஜம்பமும் பலிக்கப்போவதில்லை. உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது சமதர்ம இயக்கம். இனி கிளர்ச்சி பலப்படவே செய்யும். தற்போது நம்மிடையே யுள்ள ஓர் பெருங் குறையை எடுத்துக்காட்டுகிறேன். வாலிபர்கள், விஷயம் பூராவும் தெரிந்தும் ஆர்வமிருந்தும், அக்கரையோடு வேலைசெய்ய முன் வருகிறார்களில்லை நமது இயக்கத்தின் கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவருவதென்பதில், நிறைவேற்றுவதென்பதில், இன்னல்மிக இருந்தேதீரும். இதை வாலிபர்கள் பொருட்படுத்திலாளா விருப்பதெனில். வாலிபத்தன்மைக்கும் அவர்களுக்கும் வெகுதூரம் என்றுதான் சொல்லவேண்டும். ஊருக்கு பத்து வாலிபர்களேனும் வேலைசெய்ய ஒன்று கூடினால் தான் நமது சமதர்ம இயக்கம் மேலும் செழித்தோங்க ஏதுவாகும். அதுவும் தவிர பிரசாரத்திற்கும் வாலிபர்கள் பெரும்பாலோர் வெளிவர வேண்டும். சமீபத்தில் நடந்த நாகை சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர், தோழர் முத்துசாமி வல்லத்தரசு, திறப்பாளர் நீலாவதி, தற்போது சிலோன் கையிலும் தலைவராக தோழர் வல்லத்தரசு, திறப்பாளராக நீலாவதி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். இன்னும் வரப்போகிற மகாநாடுகளுக்குப் இப்படியே இருக்குமானால் இது மிக வெட்கப்படக் கூடியதொன்றாகும். பெண்கள் பக்கம் போனேமானால் ரொம்பவும் மோசம். மாடு திரும்பித் திரும்பி செக்கைச் சுற்றுவதுபோல், சுற்றி சுற்றி, இந்திராணியும், குஞ்சிதமும், அன்னபூரணியும், நீலாவதியும் தான் அகப்படுகிறார்கள். சுயமரியாதைத் திருமணம் புரிந்துகொண்ட பல பெண்கள் சுயமரியாதை இயக்கத்திற்கும், அவர்களுக்கும் சம்பந்தமில்லாமல் பெட்டியில் அடங்கிய பாம்பு போல் வாழ்கின்றார்கள். தோழர்களே! இந்நிலைமை யெல்லாம் மாறாது கோரிய பலன் கிடைக்கப்போவதில்லை. வாலிபர்களே! எழுங்கள். சமதர்மத்திற்கு முட்டுக்கட்டையாயுள்ள அனைத்தையும் தூள் தூளாக்குங்கள்! கண்ணுக்கெட்டா பொருளின் மேல் காதல்கொண்டு, காசை வீணாக்கும் நம் மக்களின் பைத்தியக்காரத்தனத்தைவேரறுத்து, உண்மையைத் தெளிவாக்க ஒன்று கூடுங்கள் சமதர்மத்திற்காக வாழ்வோம்! சமதர்மத்திற்காக உயிர் மாள்வோம்!! என முரசடியுங்கள!!! வீரமுடன் போர் புரிந்தால் வெற்றி நமதேயென, இம் மகாநாட்டைத் திறந்து வைக்கின்றேன்.

தூத்துக்குடியில் சுயமரியாதைத் திருமணம்.

தூத்துக்குடி சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி தோழர் எம். வைகுண்டம் அவர்கள் புத்திரி தோழர் முத்துமாலைக்கும், சாத்தான்குளம் தோழர் பி. பழனிவேல் அவர்களின் சகோதரன் தோழர் துரைசாமிக்கும் 22-11-33 காலை 9 மணிக்கு தோழர் வைகுண்டம் இல்லத்தில் சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு தோழர் வ. த. வே. செல்லையா அவர்கள் தலைமை வகித்தார். தம்பதிகள் இருபேரும் தங்களது வாழ்க்கை ஒப்பந்தத்தை வாசித்து மோதிரமும், மாலையும் மாற்றிக் கொண்டபின் தலைவர் புரோகிதம், சடங்கு என்பவைகளிலிருக்கும் மூடப்பழக்க வழக்கங்களை சாஸ்திர ஆதாரத்துடன் விளக்கி சுமார் ½ மணி நேரம் பேசினார்கள். சுயமரியாதைத் திருமணம் என்பதுபற்றித் தோழர் எம். வைகுண்டம், மதுரை தோழர் வெங்கடசாமி இவர்கள் பேசி முடிந்ததும், சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு திருமணம் வெகு சிறப்பாய் முடிந்தது. திருமணத்திற்கு சுமார் 200க்கு மேற்பட்ட தோழர்கள் வந்திருந்தார்கள். (ஒரு நிருபர்)

'சமத்வபோதினி'

(தாழ்த்தப்பட்டார் விடுதலை முழக்கத்தை முழக்கும் மாத சஞ்சிகை.)

ஆசிரியர்—வி. நயினன்

வருட சந்தா உள் நாடு 1-8-0

வெளி நாடு 2-0-0

ஆசிரியர் "சமத்துவபோதினி"

டிக்கோயா, சிலோன்.

அடியக்க மங்கலம்.

றபீதுல் இஸ்லாம் சோசைட்டி

இச் சங்கத்தின் ஆதரவில் சென்ற 26-11-33 ல் மிராசுதார் ஆவி. ஜீனப் ஆ. சொ. மு. அப்துல் ஹமீது அவர்களது அக்ராசனத்தில் கூடிய நிலவரி வஜாதினப் பொதுக் கூட்டமொன்று கூடி சில தீர்மானங்கள் நிறைவேறியது.

(ஒரு நிருபர்)

வியாதியா?

பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்த வரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்;சுகமாகும்.

தாம்பரபஸ்பம் குஷ்ட மேகங்களுக்குஅனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,

தன்மவந்திரிஔஷதசாலை பழனி.S.I

பொதுவுடைமைத்தத்துவங்கள்.

இப்புத்தகத்தில் பொதுவுடைமைத் தத்துவங்களின் வினாவிடையும், 1917ம் வருடத்திய ரஷியப் புரட்சியின் சுருக்கமும், போல்ஸ்விசம் அல்லது பொதுவுடைமையும், காரல் மார்க்சின் சரித்திரச்சுருக்கமும் ஆகிய நான்கு முக்கிய விஷயங்கள் அடங்கியுள்ளன. இவைகளை அறிந்துகொள்ள விரும்புவோர்கள் இப்புத்தகத்தை வாங்கி வாசிக்க விரும்புகிறோம்.

64 பக்கங்கள் கொண்டது. விலை அணு 0—3—0.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

இனும்! ஆபீஸ்ஹால் கடிகாரம் இனும்!!

சாதாரண முன் விலை ரூ. 15.

இந்த மாதம் மாத்திரம் குறைப்பு விலை ரூ. 7-15-0

தபால் சார்ஜ் வேறு.

புதிதாய் வந்த கடிகாரங்கள். 18 காரட் தங்கத்தில் செய்த "F லீவர்" கைக்கெடிகாரங்கள் வாங்குகிறவர்களுக்கு ஒரு "ஹால் தின கடிகாரம்" இனும். 5 வருடத்துக்கு உத்தரவாதம். 1 ரூ. முன்பணம் அனுப்பி உடனே ஆர்டர் அனுப்புங்கள். முந்துங்கள். தவறி விடாதீர்கள்.



Bienne Swiss Watch Co.,

39, Audiappa Naick St., Madras.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

ணப்பட்ட தேசத்தில் இம்மாதிரியான அரசாங்கம் நடைபெறுகிறது. பெண்களாகிய நாம் இந்தியாவிற்கு எப்படிப்பட்ட அரசாட்சி வேண்டுமென்று சொல்ல, நாம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் யோக்கியதை அற்றவர்களாய் இருக்கிறோம். முதலில் நாம் இந்தியாவின் ஆட்சி முறையைப் பற்றி சிறிது தெரிந்து கொள்வது நலம். இந்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதென்று நமக்கெல்லோருக்கும் தெரியும். அதிகாரம் எப்படி வந்ததென்றால் இந்திய மக்கள் கொடுக்கும் வரியினால் இப்படி நாம் பணத்தைக் கொடுத்து பயத்தை விலைக்கு வாங்கினால் இதைப்போல் முட்டாள்தனம் வேறு ஒன்றுமே இல்லை என்று சொல்லலாம் அல்லவா? சீமையிலிருந்து அவர்கள் பணத்தை நமக்கு கொண்டுவந்து கொடுத்தால், பணத்திற்காகவாவது அவர்கள் சொன்னபடி கேட்டுப் பயந்து நடக்கலாம். நம்முடைய பணத்தை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் அரசாங்க ஊழியக்காரருக்கு நாம் பயப்படாமல் இருப்பதுடன் நமக்குவேண்டிய உதவி புரியக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

இப்பொழுது எங்குபார்த்தாலும் கர்ப்ப ஆட்சியைப்பற்றிய பேச்சாய் இருக்கிறது. இதைப்பற்றி இப் பெண்கள் கூட்டத்தில் விவாதித்து ஒரு முடிவிற்கு வர பெண்களுக்குத் தனி உரிமை உண்டென்று கருதுகிறேன்.

இதுகாறும் சுயமரியாதைக் கொள்கைகளைப்பற்றியும் சமதர்ம இயக்கத்தைப்பற்றியும் சொன்னேன். இனிமேல் பெண்களாகிய நாம் வெறும் பேச்சளவோடு நில்லாமல் ஆக்கல் தொழில்களிலும் முயற்சித்தால் இவ்வியக்கங்களுக்கு அணைச் சுவர் போட்டதுபோல் ஆகும் என்பது எனது துணிபு. நாம் செய்யக்கூடிய தொழில்கள் என்னவெனின், சிறுவர் சிறுமிகள் பள்ளிக்கூடம், துணி நெய்தல், நாடா நெய்தல், கூடை பின்னல்போன்ற சிறு தொழிற்சாலைகள், திக்கற்ற பெண்களுக்கு உதவிச் சாலைபோன்றவைகள். இவைகளில் நாம் வேலைசெய்தால் எல்லா ஏழை மக்களும் நமது கொள்கைகளை வெகு சீக்கிரத்தில் உணரும்படி செய்யலாமென்பது எனது கருத்து.

தென்னிந்திய ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் ஈரோடு கிளை.

இங்கு பலமாத காலமாக சங்கம் ஸ்தாபிக்க முயற்சித்தும் எண்ணம் நிறைவில்லை. இச்சந்தர்ப்பத்தில் (S. I. Ry. Workers Union) பொதுக் காரியதரிசியும், பொன்மலைச் சங்கக் காரியதரிசியுமான தோழர் டி. கிருஷ்ணசாமி அவர்கள் சென்ற சுமார் பத்துநாட்களாக இவ்விடம் வந்திருந்து இடைவிடா உழைப்புடன் செய்த பிரசாரத்தாலும் சென்ற 25-11-33 ஞாயிறு மாலையில் ஈரோடு ரயில்வேஸ்டேஷன் சமீபமுள்ள முனிசிபல் திடலில் கிளைச் சங்கஸ்தாபனநிமித்தம் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு ஓர் பொதுக் கூட்டம் கூட்டப்பெற்றது. அவ்வமயம் தோழர் டி. கிருஷ்ணசாமி அவர்களும், போத்தனூர் தோழர் ஷேக்சர்வர், சென்னைத் தமிழ்நாடு ஆசிரியர் டாக்டர் பி. வரதாராஜுலு அவர்களும் வந்திருந்து சொற்பொழிவாற்றினர். பிறகு சில தோழர்களால் ஈரோடு கிளைச் சங்கத் தலைவர்கள் தேர்தல் விஷயமாக நன்றாய் யோசித்து முடிவுசெய்யத் தங்களுக்கு ஒருவாரம் அவகாசம் வேண்டுமெனக் கோரியதன்பேரில் 3-12-33 உ மாலை 6-30 மணிக்கு துண்டுப் பிரசுரங்கள் தண்டோரா மூலமாகவும் பொதுக் கூட்ட அறிக்கை வெளியிட்டு லோக்கோபோர்மேன் டி. எக்ஸ். ஆர். முதலிய ரயில்வே உத்தியோகஸ்தர்களைக் கண்டு பேசியும், பல தோழர்களை நேரில் சந்தித்து சங்கத்தின் அவசியத்தை விளக்கிக் கூறியின் மேற்படி தோழர் பலத்த பிரசாரம் செய்யப்பட்டு மேல் கண்ட இடத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முறையில் டி. கிருஷ்ணசாமி அவர்களால் சங்கங்களின் நோக்கங்களையும், அதனால் தோழர்கள் அடையும் நன்மைகளையும் விவரித்துப் பேசியும் நாகப்பூர் அகில இந்திய ரயில்வே உபகார நிதியில் எல்லா ரயில்வே தோழர்களும் சேரும்படி விண்ணப்பம்செய்து கொண்டார் பின் சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்தல் செய்யப்பட்டு சில தீர்மானங்களும் நிறைவேறி மேற்படி கூட்டம் 8-30 மணிக்கு இனிது முடிந்தது.

தென்னிந்திய ரயில்வே
ஈரோடு Workers Uniou
கிளைச்சங்க உத்தியோகஸ்தர்கள்.

தோழர்— எஸ். மெக்காய் தலைவர்
,, S. காளிதாஸ்-காரியதரிசி
தோழர்கள் 1. ஷேக்சர்வர் 2. ஜோசப் 3. அலிரோசே ரஜாக் உதவிக் காரியதரிசிகள்.
தோழர் வி. செல்வநாயகம்-பொக்கிஷதார்

திருச்செங்கோடு உண்மைநாடு வோர்சங்கம்.

19-11-33 ஞாயிறு மாலை 5-மணிக்கு தோழர் சம்மந்தம் அவர்கள் தலைமையின் கீழ் ஷைசங்க கட்டிடத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று "கர்ப்பத்தடையின் அவசியம்" "தமிழன்பர் மகாநாட்டின் சூழ்ச்சி" என்னும் பொருள்பற்றி தோழர்கள் டி. ஏ. கைலாசம, எஸ். கே. வரதராஜுலு, டி. ஜி. அர்த்தனாரி முதலியவர்கள் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தினரால் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது கலைந்தது.

தீர்மானங்கள்.

1. சென்னை அரசாங்கத்தார் மக்களுக்குக் கர்ப்பத்தடை முறைகளைப்போதிக்கும் செய்கையை இக் கூட்டம் முழுமனதுடன் வரவேற்பதுடன் அதை எதிர்க்கும் கத்தோலிக்க வைதீகர்களை வன்மையாகக் கண்டிக்கிறது.

2. சென்னையில் கூடவிருக்கும் "தமிழன்பர் மகாநாடு" பார்ப்பன ஆதிக்கத்தை மீண்டும் தமிழ்நாட்டில் நிலைநிறுத்தச்செய்யும் சூழ்ச்சியெனக் கருதுவதோடு அம்மகாநாட்டின்மீது நம்பிக்கையில்லை எனவும் தீர்மானிக்கிறது.

ஒரு நிருபர்.

நாடகத்தில்-சுயமரியாதை.

9-11-33ல் சுயமரியாதை இயக்கத்தில் மிகுந்த ஆர்வங்கொண்ட தோழர் எம் எம். ரத்தினம் அவர்களைப் பிரதம நடிகராகக்கொண்டு "வள்ளி திருமணம்" என்னும் நாடகம் திருமங்கலத்தில் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் மணிமாறன் அவர்கள், "வாலிபர் வாசகசாலை"யின் சார்பாய் ஒரு தங்கமெடல் பரிசளிக்கும்போது அந்த மெடல் ரத்தினம் அவர்களின் சங்கீதத்திறமையை சிலாகித்துமட்டும் போடப்படவில்லை என்றும், நாடகமேடையில் நிற்கும் முருகக்கடவுளானவர் எவ்வித எதிர்ப்பிக்கும் அஞ்சாமல், தாழ்த்தப்பட்ட ஜாதியில் தோன்றிய குறத்தி என்னும் வள்ளியைக் "கலப்புமணம்" செய்து கொள்ளுவதைப் பாராட்டியே, மெடல் அளிப்பதாயும் சொல்லி, தங்கமெடலை அளித்தார்.

ஒரு நிருபர்.

கோயம்புத்தூர் ஜில்லா அர்பன் பாங்கு.

தோழர். டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்களின் தலைமையில் ஜில்லா அர்பன் பாங் டைரெக்டர்களின் கூட்டம் ஒன்று 3-12-33 கூடியது. பாங்கின் காரியதரிசியாகயிருந்த தோழர். சி. வரதராஜ முதலியார் அவர்கள் தஞ்சாவூருக்கு டிப்டி ரிஜிஸ்திராராக மாற்றப்பட்டதினால் உதவி காரியதரிசி தோழர் கே. மாயண்ண கவுடர் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்.

ஷை உதவிக்காரியதரிசியின் ஸ்தானத்திற்கு தமிழ் நாடு கூட்டுறவு பெடரேஷன் மானேஜர் தோழர் எ. பொன்னுசாமி பிள்ளையை நியமிப்பதாகத்தீர்மானிக்கப்பட்டது.

ஒரு நிருபர்.

கத்தோலிக்கர்களின் வீண்கூச்சல்.

இந்நூலில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையும் அதன் வெற்றியையும் வெகு விரிவாய் விளக்கிக்கூறப்பட்டிருப்பதுடன் கத்தோலிக்கர்களின் வீண் கூச்சலையும், மதப்பிரசாரத்தின் மடமையையும், மேனாட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான நிலையையும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார் கத்தோலிக் மத குருவாகிய போப்பிற்கு எழுதியுள்ள ஓர் கடிதமும் தனிவுடைமையை வளர்க்கும் வியாபார முறையைக் கண்டித்து போப்விடுத்த அறிக்கையும் மிக அழகாய் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

16 பக்கங்கள்கொண்ட இந்நூலின் விலை 6 பை. நூறு புத்தகங்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் தபாற் செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செலவுடன் ரூ. 5—0—0.

எல்லா சுயமரியாதைச் சங்கங்களும் வாங்கி ஆங்காங்கே ஏராளமாய் விநியோகிக்க ஏற்றதாகும். இது கத்தோலிக்கர்களுக்குத் தக்க சாட்டை அடியாக இருக்கும் என்பது நிச்சயம்.

விலாசம்:—

குடி அரசுப்பதிப்பகம், ஈரோடு.

ரோஜா முத்தையா

சுத்த சுதேசி பவுண்டன்பேனா, கையாலேயே செய்யப்பட்டது. (Gun Metal) கன்மெட்டலினால் செய்து வெள்ளி முலாம் கொடுக்கப்பட்டு 14 Kt. தங்க நிப்பும், தந்த ஷீட நுட அமைக்கப்பெற்ற புதுமாதிரி, அழகிய பேனா. இது போட்டிப்பந்தயங்களுக்குபரிசளிக்கவும் ஒவ்வொரு எழுத்து வேலைக்காரர்களுக்கும் மிக உபயோகமுள்ளது. பார்வைக்கு மிக விலையுயர்ந்த பேனாவைப்போலவே இருக்கும். விலை ரூ. 3—12—0. எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. தாராளமானகமிஷன் கொடுக்கப்படும்.

செயற்கை தங்கமும், வோயிட் மெட்டலும் இவ்விடம் கிடைக்கும்

கிடைக்குமிடம்:— *R. K.* சாமி & சன்ஸ்.,
18|70 தெலுங்கு பிராமணாள் வீதி, கோயமுத்தூர்.

'பிரசண்ட மாருதம்'

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை

ஆசிரியர்:—

தோழர் A. ரெத்தினசபாபதி.

உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு .... ரூ. 1—8—0
தனிப்பிரதி 1½ அணா

விலாசம்:—

மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

லெனினும், மதமும்.

இது ரஷியர்களின் மதப்பித்தையும், கடவுளுணர்ச்சியையும் ஒழித்து ஏழை பணக்காரன் என்கின்ற தன்மை அழித்த பொது வுடைமைக் கொள்கையை நிலை நாட்டிய [illegible] பெரும் வீரர் தோழர் லெனின் அவர்கள் மதத்தைப் பற்றி எழுதியதாகும். இதைப் படிப்பதால் மதம் பணக்காரர்களுக்கும் முதலாளி அரசாங்கத்திற்கும் எவ்வளவு [illegible] செய்கின்றது என்பது விளங்கும்.

விலை அணா 0—4—0 சந்தாதாரர்களுக்கு விலை அணா 0—3—0

இந்தியாவின் குறைபாடுகள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பரஞ்சிபே M. A. D. Sc., அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

விசாலாட்சி அல்லது கட்டறுத்த காரிகை.

இது செட்டி நாட்டு வகுப்பில் நடந்த மாதிரியாய் செட்டிமார்கள் பழக்க வழக்கங்களையும் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது.

பிரதி ஒன்றுக்கு விலை அணா 0—4—0
சந்தாதாரர்களுக்கு ... ... 0—3—0

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"

பெரிய புத்தகம். விலை ரூ 2. (தபால் சார்ஜ் வேறு.)

சென்னை லோகல் போர்ட் ஆக்டு.

(1930ஞ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

Ready for Sale! **Ready for Sale!!**

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

"கடவுளும், பிரபஞ்சமும்"

கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதை சவிஸ்தாரமாக உதாரணங்களுடன் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். அதிக பக்கங்கள், குறைந்த விலை.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.
விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கல்க்கியானம்.

இராமாயண ஆராய்ச்சி.
முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.
இதன் விலை அணா. 0—2—0

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.
இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை.
இதன் விலை அணா 0—4—0

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.
இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.
விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்.
இதன் விலை அணா 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும்.
இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?
விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.
விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.
டாக்டர் பரான்ஜிபை எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.
விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.
விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 0—2—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. சிதம்பர ரகசியம் ... 0—8—0
2. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
3. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
4. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
5. விசாலாட்சி அல்லது கட்டறுத்த காரிகை ... 0—4—0
6. குத்தற்வேலை விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை 0—6—0
7. மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0
8. ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... 0—6—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
The crux of the Indian Problem
By, Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மலர்கள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து [illegible] வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட் ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

தீராத வெட்டை நோய்க்கு உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை கொண்ட மருந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தெக்ஷணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா)

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை